விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

# Valampurii

Registered as a Newspaper in Sri Lanka
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 04 சனிக்கிழமை (20.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 213

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

## சுவாமி சிலைகள் பற்றைக்குளிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி ஆடிய பாதம் வீதி, கேணியடிப் பகுதியில் உள்ள பற்றைக்குள் வீசப்பட்டிருந்த இரு சுவாமி சிலைகள் நேற்று வெள்ளிக்கிழமை பொது மக்களால் மீட்கப்பட்டு யாழ் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை பொதுமக்களால் குறித்த இரண்டு சிலைகளும் கண்டெடுக்கப்பட்டு அப்பகுதி கிராம சேவையாளரிடம் தெரியப்படுத்தப்பட்ட நிலையில் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

குறித்த இரண்டு சிலைகளும் கோயில் ஒன்றில் இருந்து திருடப்பட்டிருக்கலாம் என்றும் கொள்ளையர்கள் அப்பகுதியில் இந்த சிலைகளை விட்டுவிட்டுச் சென்றிருக்கலாம் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (செ-4)

## பொதுநலவாய உச்சி மாநாட்டிற்காக தேசிய பிரச்சினை பணயம் வைப்பு

### அரசை சாடுகிறது ஜே.வி.பி

(கொழும்பு)

இந்தியா உதவி செய்த காரணத்தினாலேயே இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. இதனால் அரசாங்கம் இலங்கையின் தேசியப் பிரச்சினையைப் பணயம் வைத்துள்ளது என ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற ஜே.வி.பியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் மாகாண சபைகள் தொடர்பில் விவாதிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறாது போனால், இலங்கைக்கு அதன் தலைமைத்துவப் பதவி கிடைக்காது. இதனால் தலைமைத்துவப் பதவியை பெற மகிந்த நாட்டின் தேசியப் பிரச்சினையைப் பணயம் வைத்துளளார் என்றார்.

இங்கு பேசிய அந்த கட்சியின் பொதுச் (20ஆம் பக்கம் பார்க்க)

## நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமல்ல

### சோபித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரத்தை தற்போது ஜனாதிபதி மட்டும் பயன்படுத்துவதில்லை, அதனை அமைச்சர்கள் உட்பட அரசுடன் சம்பந்தப்பட்ட பலர் பயன்படுத்தி வருகின்றனர் என்று நீதியான சமூகத்திற்கான மக்கள் அமைப்பின்



தலைவர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை நிலைமைகள் இலங்கையில் சீராகவில்லை

### பிரித்தானியா குற்றச்சாட்டு

இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் இன்னும் சீராகவில்லை என்று பிரித்தானியா தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் பொதுநலவாய மற்றும் வெளிவிவகார திணைக்களம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

# வடக்குத் தேர்தலில் நீதி அவசியம்!

## ஐரோ. பாராளுமன்றக் குழு வலியுறுத்து

(கொழும்பு)

*"வட மாகாண சபைத் தேர்தல் சுயாதீனமாகவும் நீதியாகவும் இடம்பெற வேண்டும் என ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தெற்காசிய விவகார உறவுகளுக்குப் பொறுப்பான குழுவின் தலைவர் ஜீன் லம்பேர்ட் வலியுறுத்தியுள்ளார்.*

*அத்துடன் வடக்கில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமையே தற்போதும் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்."*



கொழும்பு சினமன் கிராண்ட் நட்சத்திர விடுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கைக்கு 7-வது தடவையாக விஜயத்தை மேற்கொண்டுள்ளது. இம்முறை இவ்விஜயத்தில் ஆறு ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளோம்.

நாம் கடந்த காலங்களில் வடக்கு மற்றும் மத்திய (19ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு வேட்பாளர்கள் ஒதுக்கீடு


(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் நியமனக்குழு கூட்டம் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காரியாலயத்தில் நேற்றுமாலை இடம்பெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களுக்கான வேட்பாளர்கள் நியமனம் தொடர்பில் முடிவு எடுக்கப்பட்டது. இதன்படி கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழரசு கட்சிக்கு 03 வேட்பாளர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 02 வேட்பாளர்களும், ரெலோ (20ஆம் பக்கம் பார்க்க)

## 'மெட்ராஸ் கபே'

### திரைப்படத்திற்கு சீமான் எதிர்ப்பு




(சென்னை)

யாழ்ப்பாணத்தை கதைக்களமாக கொண்டு எடுக்கப்பட்டிருக்கும் "மெட்ராஸ் கபே" ஹிந்தி திரைப்படத்தை முதலில் தமக்கு போட்டுக் காட்டி ஒப்புதல் பெறாவிட்டால் இந்த திரைப்படத்தை வெளியிட அனுமதிக்க மாட்டோம் என நாம்தமிழர்கட்சியின தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

மெட்ராஸ் கபே (19ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் களத்தில் அரச சொத்துக்களை பயன்படுத்தக் கூடாது

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல் செயற்பாடுகளுக்கு அரசாங்க சொத்துக்களைப் பயன்படுத்தக்கூடாது என்று வலியுறுத்திய சுற்றறிக்கை ஒன்றை தேர்தல்கள் ஆணையாளர் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் திணைக்களங்களில் பிரதானிகளுக்கு இந்த சுற்றறிக்கையின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலங்களில் தேர்தல்கள் ஆணையாளருக்கு உள்ள அதிகாரத்தின் அடிப்படையில் இந்த சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது: (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு தேர்தலை கண்காணிக்க ஐரோப்பிய குழு வராது!

(பிரசல்ஸ்)

வட மாகாண சபைத் தேர்தலின் போது தமது தரப்பில் தேர்தல் கண்காணிப்பாளர்கள் அனுப்பப்படமாட்டாது என இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றக் குழு தெரிவித்துள்ளது.

வட மாகாணசபைத் தேர்தலின் போது வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களைத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் அறிவித்திருந்தது.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற குழுவுக்கு தலைமை தாங்கும் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தெற்காசிய விவகார உறவுகளுக்குப் பொறுப்பான குழுவின் தலைவர் ஜீன் லம்பேர்ட் இது தொடர்பில் நேற்றுமுன்தினம் கொழும்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "குறிப்பாக பிரதான தேர்தல்களுக்கு மட்டுமே ஐரோப்பிய ஒன்றியம் கண்காணிப்பாளர்களை அனுப்புவது வழக்கம்.

வட மாகாணசபைத் தேர்தலைப் பொறுத்தவரை கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தயார்படுத்தல்களை செய்வதற்கான கால அவகாசம் போதாது.

இத்தேர்தல் இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல்லிணகத்தை ஏற்படுத்த உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரே இரவில் யாழில் 7 கடைகளில் திருட்டு!

## பல இலட்சம் ரூபாய் பொருட்கள் பறிபோனது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முனியப்பர் வீதியிலுள்ள அங்காடி கடைத் தொகுதியில் ஒரே இரவில் 7 கடைகளில் கொள்ளையும் 5 கடைகளில் திருட்டு முயற்சியும் இடம் பெற்றுள்ளது.

இக் கொள்ளைச் சம்பவத்தில் 40 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான விற்பனைப் பொருட்கள், பணம் என்பன கொள்ளை போயுள்ளது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இத் தொடர் கொள்ளைச் சம்பவத்தினால் அங்கு பெரும் பதற்றம் நிலவியதோடு குழப்ப நிலையும் ஏற்பட்டிருந்தது.


இக்குழப்பநிலை நீடித்திருந்தமையால் சம்பவ இடத்திற்கு இராணுவத்தினரும் வருகை தந்து நிலைமையை அவதானித்திருந்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணம் முனியப்பர் வீதியில் அமைந்துள்ள அங்காடி கடைத்தொகுதியில் 50 இற்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன.

இவற்றில் 4 உடுப்புக்கடைகள், 2 செருப்புக் கடைகள், ஒரு பான்சி கடை உட்பட 7 கடைகளிலேயே கொள்ளை இடம்பெற்று உள்ளது.

மேலும் 5 கடைகள் உடைக்க முயற்சி இடம்பெற்ற போதிலும் அங்கு திருட்டுக்கள்



இடம் பெறவில்லை என நேரடித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் வியாபாரிகள் விபரிக்கையில்,

நாம் நேற்று முன்தினம் இரவு கடையினைப் பூட்டிச் சென்றிருந்தோம், பின்னர் நேற்றுக் காலை எமது கடைகளினை திறந்த போது தான் எமது கடைகளில் திருட்டுப் போயுள்ளது எமக்கு தெரியவந்தது என்றனர்அவர்கள். இதே வேளை உடைக் கப்பட் கடைத் தொகுதிகள் அனைத்தும் தகரத்தினால் அமைக்கப்பட்டிருந்தமையி னால் பின்பக்க தகரங்களினை உடைத்தே கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற அனைத்து கடைகளிலும் பணம், புடைவைகள் மற்றும் பிற பொருட்கள் என்பன திருடப்பட்டுள்ளன.

இக் கொள்ளை தொடர்பில் பொலிஸாருக்கு அறவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து அங்கு மோப்ப நாய்களுடன் வந்த பொலிஸார் சோதனைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட அலவாங்கு, கத்தி, என்பன மீட்கப்பட்டு கைவிரல் அடையாளங்களும் தடயவியல் பொலிஸாரினால் பதியப்பட்டன.

தமது கடைகளில் இதற்கு முன்னரும் பல தடவைகள் திருட்டு போயுள்ளது எனவும் யாழ். பொலிஸார் மற்றும் யாழ்.மாநகர சபையும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

தமது கடைகளிற்கு அருகிலுள்ள கள்ளுத் தவறணையினை இரவு 8 மணிக்கு பூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் வியாபாரிகள் முன்னர் கோரியிருந்தனர்.

திருட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும், நடவடிக்கை எடுக்கக் கோரியும் வியாபாரிகள் தமது கடைகள் அனைத்தையும் பூட்டி தமது எதிர்ப்பினை நேற்று வெளியிட்டிருந்தனர்.

இதேவேளை இனியும் நடவடிக்கை எடுக்காவிடின் உண்ணாவிரதம், வீதிமறியல் பேராட்டம் நடத்துவோம் எனவும் வியாபாரிகள் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## ஊவா பல்கலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக்கழக அனுமதி கோரி விண்ணப்பித்த மாணவர்களுக்கான தகுதிகாண் பரீட்சை நடத்தப்படவிருப்பதாக பல்கலைக் கழக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற விரும்பும் மாணவர்கள் uwu.Ac.lk எனும்இணையத்தளமுகவரியில்பார்வையிடலாம்.

பரீட்சை விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 23-ம் திகதியுடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

## உரிமை கோரப்படாது இரு சடலங்கள்

யாழ். போதனா வைத்தியசாலையில் உறவினர் எவரும் உரிமை கோராத நிலையில் இரு சடலங்கள் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை பிரதி பணிப்பாளர் கே.நந்தகுமாரன் அறிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்கு பெயர், முகவரி தெரியாத 60 வயது மதிக்கத் தக்க விபத்துக்குள்ளான ஆண் ஒருவரை வீதி யால் சென்ற நபர் ஒருவர் 01.07.2013 அன்று (த.மா.சீ.இல 63231/13) காலை 6.12 மணியளவில் அனுமதித்துள்ளார்.

அவர் சிகிச்சை பலனளிக்காது 02.07.2013-ம் திகதி காலை 3.50 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 60 தொடக்கம் 75 வயது மதிக்கத் தக்க பெயர், முகவரி தெரியாத இன்னுமொரு ஆணின் சடலம் ஒன்று கடந்த 12-ம் திகதி அன்று பண்ணை பேருந்து நிலையத்திலிருந்து யாழ்.பொலிஸ் மூலம் கொண்டு வரப்பட்டு வைத்தியசாலை பிரேத அறையில வைக்கப் பட்டுள்ளது.

எனவே அச்சடலங்களை உரிமையாளர் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (செ-2)

## விபத்தை ஏற்படுத்தியவருக்கு 5 இலட்சம் ரூபாய் அபராதம்

(கரவெட்டி)

வடமராட்சி தொண்டைமானாறு பகுதியில் பஸ்-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த அர்ச்சகர் ஒருவருக்கு பெரும்காயத்தை ஏற்படுத்தியமைக்கு நஷ்டஈடாக 5 இலட்சம் ரூபாவை செலுத்துமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

தொண்டைமானாறு பகுதியில் கடந்த மாசி மாதம் 11-ம் திகதி பேருந்தால் மோதி மோட்டார் சைக்கிளில் பயணித்த சிவராமலிங்கம் நீலதீஜயர் சர்மா என்பவருக்கு பெருங்காயத்தை ஏற்படுத்திய வழக்கு நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த சாரதிக்கு எதிரா பொலிஸார் நான்கு குற்றச்சாட்டுக்களை மன்றில் முன்வைத்தனர்.

இதில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி செலுத்தியமை, எச்சரிக்கையின்றி செலுத்தியமை, விபத்தை தடுக்க தவறியமை, விபத்தை ஏற்படுத்தி பெருங்காயத்தை ஏற்படுத்தியமை ஆகிய 4 குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

இதில் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு முதல் மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் நான்காவது குற்றச்சாட்டான விபத்தை ஏற்படுத்தி பெருங்காயத்தை விளைவித்தமைக்காக பாதிக்கப்பட்ட அர்ச்சகருக்கு 5 இலட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்குமாறு நீதவான் குறித்த சாரதிக்கு உத்தரவிட்டார்.

அத்துடன் இந்த நஷ்டஈட்டை தவணை அடிப்படையில் ஒரு தவணைக்கு 75 ஆயிரம் ரூபா வீதம் செலுத்துமாறும் தீர்ப்பளித்தார். (ம-24)

## விவசாய பீட மாணவர் ஒன்றியம் நடத்திய போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத்தால் கடந்த 6-ம் திகதி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட அமரர்களான கிருபாகர், ஜெயக்குமார் ஞாபகார்த்த விஞ்ஞான அறிவுப் போட்டி முடிபுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி விஞ்ஞானப் போட்டியில் முதலாம் இடம் கிளிநொச்சி மகா வித்தியாலயம்,

2-ம் இடம் கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி, 3-ம் இடம் கிளிநொச்சி இந்துக் கல்லூரி, 4-ம் இடம் உருத்திரபுரம் மகா வித்தியாலயம்.

இறுதிச்சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ந)

### கரணவாயில் வாள்வெட்டு

## சந்தேக நபர்களுக்கு 14 நாள் விளக்கமறியல்

வடமராட்சி கரணவாய் செல்வாபுரம் பகுதியில் இருதரப்பிற்கு இடையில் ஏற்பட்ட வாள் வெட்டு, அடிதடி சம்பவத்தில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர்களை எதிர்வரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த பகுதியில் கடந்த 8-ம் திகதி இரு தரப்பைச் சேர்ந்த நான்கு சந்தேகநபர்கள் ஒரு வரை ஒருவர் மாறி தாக்கியதாகவும் அத்துடன் வாளால் வெட்டி காயத்தை ஏற்படுத்தியதாக இருதரப்பினராலும் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இருதரப்பினையும் விசாரணை செய்த நீதவான் ஒரு தரப்பை சேர்ந்த ஒருவரையும் மறுதரப்பை சேர்ந்த ஒரு பெண் உட்பட இரு ஆண்களையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-24)

## அனர்த்த பாதுகாப்பை உறுதிப்படுத்த 50 மில்லியன் ரூபா செலவில் 12 திட்டங்கள் யாழிற்கு

இயற்கை அனர்த்தங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் 50 மில்லியன் ரூபா செலவில் 12 திட்டங்கள் யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவி தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக் கூட்டம் நேற்றுக் காலை யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் முன்னெடுக்கப்படவுள்ள 12 திட்டங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த 12 திட்டங்களையும் நடைமுறைப் படுத்த 50 மில்லியன் ரூபாவினை அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

இது தொடர்பாக உதவித் திட்டப்பணிப் பாளர் மேலும் தெரிவிக்கையில்,

அனர்த்த காலங்களில் ஏற்படும் பாதிப்புக்களை குறைக்கும் நோக்குடன் இந்தத் திட்டங்கள் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த திட்டங்கள் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்தோடு பருவ மழை காலம் ஆரம்பிக்க முன்பு இத்திட்டங்கள் நிறைவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

இறைச்சிக் கோழி விற்பனைக்கு



உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 06:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

இப்போது கோழிப் பாகங்களும் (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்.

(3414)

நல்லூர் பாம் சென்ரர். 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளையார் இன்

12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.

சைவ உணவு: 150/- அசைவ உணவு 175/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இரக்கமும் ஏமாற்றமும்

"இரக்கப்படு! ஆனால், ஏமாந்து போய்விடாதே!" என்று புத்திமதி கூறுவதுண்டு.

நம்மில் பலர் அதிகம் இரக்கம் காட்டி, அதனால் ஏமாந்து போகிறோம். நாம் மட்டுமல்ல... அந்தக் காலத்திலேயும் கூட இரக்கப்பட்டு ஏமாந்து போனவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள்.

இது தொடர்பாக அதிகமான கதைகளை ஆன்மீகப் பேச்சாளர்கள் கூறி வருகிறார்கள்.

இருந்தாலும் அதிலே ஒரு கதையை இப்போது உங்களுக்கு கூறலாம் என்றொரு ஆசை.

சரி, இப்போது கதைக்கு வருவோம்...

ஒரு காட்டிலே முனிவர் இருந்தார். முன்பெல்லாம் முனிவர்கள் காட்டிலேயே வசித்து வருவது வழமையாக இருந்தது. அதனால் இந்த முனிவர் காட்டிலே ஒரு ஆச்சிரமம் கட்டி அங்கே உட்கார்ந்திருந்தார். இவரிடம் இரக்கம் நிறைந்த சுபாவம் இருந்தது.

அந்தக் காட்டிலே அவருக்குத் துணையாக ஒரு நாய் இருந்தது. அந்த நாய் எப்போதுமே அவரை சுற்றி சுற்றி வந்து கொண்டேயிருக்கும்.

ஒருநாள் அந்த நாய் ஆச்சிரமத்தினுள் ஒரு மூலையிலே அமர்ந்து அழுது கொண்டிருந்தது.

இதைப் பார்த்த முனிவருக்கு மனம் இளகிப்போய் விட்டது.

அந்த நாயை அழைத்தார். அப்போது அது அருகில் வந்து நின்றது. "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்.

"எனக்கு இக்காட்டிலே வாழ்வதற்கு பயமாக இருக்கிறது" என்றது.

"நான் இருக்கும் போது உனக்கென்ன பயம்?" என்றார்.

"நீங்கள் எப்போதும் என் அருகில் இருப்பதில்லை... சில சமயம் காட்டிலே இங்கேயும் அங்கேயுமாகத் தனியாக உலா வந்து கொண்டிருப்பேன். அந் நேரங்களில் நிறைய "நரி"கள் உலா வரும். அவைகள் என் மேலே பாய்ந்து கடித்து விடுமோ எனப் பயமாக இருக்கிறது" என்று கூறியது.

"கவலைப்படாதே! என்னிடம் மந்திர சக்தி இருக்கிறது. அதைப் பயன்படுத்தி உன்னையே நரியாக மாற்றி விடுகிறேன்" என்றார்.

அதே மாதிரி ஒரு மந்திரத்தைக் கூறி, அந்த நாயை நரியாக மாற்றினார்.

"இனிமேல் கவலைப்படாதே! எதிர்வரும் காலங்களில் மற்றைய நரிகள் கூட உன்னைப் பார்த்துப் பயப்படும்" என்றார்.

இப்படியாக நாட்கள் நகர்ந்தன.

மறுபடியும் நரி உருவத்திற்கு மாறிய உள்ள நாய் அழுதது.

மீண்டும் அதனை அழைத்து "ஏன் அழுகிறாய்?" என்று முனிவர் கேட்டார்.

"இக் காட்டிலே நிறைய சிறுத்தைகள் இருக்கிறது. அதைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குப் பயமாக இருக்கிறது. எந் நேரத்திலே என்ன நடக்குமோ என்ற ஏக்கம் என்னை ஆட் கொண்டுள்ளது" என்று கூறியது.

"அப்படியா! சரி கவலைப்படாதே... உன்னையும் ஒரு சிறுத்தை போல் மாற்றி விடுகிறேன்" என்று கூறி மந்திரத்தைச் சொல்ல, அது சிறுத்தையாக உருவம் பெற்றது.

சிறிது நாட்கள் நகர சிறுத்தை உருவத்திலே இருந்த நாய் மறுபடியும் அழ ஆரம்பித்தது.

"என்ன காரணம்?" என்று விசாரித்தார்.

"இந்த காட்டிலே அதிகபடியான உருப்பெருத்த சிங்கங்கள் வசித்து வருகின்றன. அவற்றினால் எனக்கு உயிராபத்து வந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது" எனக் கூறியது.

"சரி... உன்னையும் ஒரு பெரிய சிங்கமாக மாற்றி விடுகிறேன்" என்று மந்திரத்தைக்கூறி மாற்றினார்.

"நீ இப்போது இந்த காட்டுக்கே ராஜா..." என்றார்.

சிங்கமாக இருந்த நாய் யோசிக்க ஆரம்பித்தது. உடனே அந்த முனிவர் மேலே பாய்ந்து கடிக்க முயற்சித்தது.

"என்ன இது... என்னையே கடிக்க வருகிறாய்?" என்று கேட்டார் முனிவர்.

"நீ என்னை விட பெரிய சிங்கமாக வேறு யாரையாவது மாற்றி விடக்கூடாது. இருந்தாலும் உன்னுடைய மந்திரம் சக்தி மிக்கது. ஆதலால் உன்னை உயிரோடு விட்டு வைத்தால் ஆபத்து" என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்தது.

"ஆஹா! இரக்கம் காட்டி ஏமாந்து போய் விட்டோமே!" என்பது அப்போதுதான் முனிவருக்குப் புரிந்தது.

உடனே சாமர்த்தியமாக ஒரு காரியம் செய்தார். ஒரு பலம் பொருந்திய மந்திரம் ஒன்றைக் கூறினார். உடனே அந்தச் சிங்கம் மறுபடியும் பழைய படியே நாயாகத் தோற்றம் பெற்றது. வேறு வழி தெரியாது அவர் காலையே மறுபடியும் சுத்தி வர ஆரம்பித்தது.

இரக்கம் காட்டலாம்; ஆனால், ஏமாந்து போய்விடக்கூடாது என்பதை விளக்கவே இக்கதை கூறப்பட்டுள்ளது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# எமது பிள்ளைகளின் விடுதலை தங்களின் கையில்தான் உண்டு

## தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் ஜனாதிபதிக்கு கடிதம்

சிறையில் வாடும் எமது பிள்ளைகள், உறவுகள் எம்முடன் இணைந்து வாழ வழி செய்யுமாறுகோரி தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு கடிதம் ஒன்றை எழுதி அனுப்பி வைத்துள்ளனர்.

இக் கடிதத்தில் நீண்டகாலமாக சிறையில் உள்ள தமது பிள்ளைகளை தங்களுடன் வாழ வழிவகை செய்யுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

எமது பிள்ளைகளின் விடுதலைக்கான முடிவு உங்கள் கையில் இருப்பதனை நாம் அறிவோம். யுத்தம் முடிந்து நான்கு வருடங்கள் கடந்த நிலையில் பயங்கரவாதம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பல நூற்றுக்கணக்கானவர்கள் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதில் பெண்கள், வயோதிபர்கள், இளைஞர்கள், விசேட தேவையுடையவர்கள்,உடலில்இரும்புத்துண்டுகளுடன் மருத்துவ வசதியின்றி இருப்போர் என பலர் இருக்கின்றார்கள்.

எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படாமல் 14 நாட்களுக்கு ஒரு தடவை நீதவான் நீதிமன்றத்திற்குச் சென்று வருவோர், உயர்நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகைகளில் தாக்கல் செய்தும் விசாரணைகளின்றி நீண்டகாலம் இருப்போர், நீண்டகாலம் செல்வதால் வேறு வழியின்றி குற்றங்களை ஒப்புக் கொண்டோர் என இவ்வகையில் சிறையில் உள்ளனர்.

இவர்களுடைய விடயங்களைக் கடந்த காலங்களில் பலமுறை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தோம்.

இதுவரையில் அதற்கான பதில் கிடைக்காததையிட்டு நாம் கவலையடைகின்றோம்.

காலத்திற்குக் காலம் எமது பிள்ளைகளின் விடுதலை தொடர்பாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். இருந்தபோதிலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகிய உங்களால் மட்டுமே எமது பிள்ளைகளை விடுதலை செய்ய முடியும் என்பதனை திடமாக நம்புகின்றோம்.

நாம் எல்லா வழிகளிலும் பாதிக்கப்பட்டு துன்பப்பட்டு சொல்லொணா துயரங்களுடன் ஏதிலிகளாக வாழ்ந்து வருகின்றோம். சிறையில் இருப்பவர்களின் குடும்பம், பொருளாதாரமின்மையால் பிள்ளைகளின் கல்வி, எதிர்காலம் என்பன பாதிக்கப்பட்டிருக்கின்றன.

குடும்பப் பொறுப்புள்ளவர்கள் சிறையில் இருப்பதனால் அவர்களுடைய குடும்பம் சமூக ரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாக நேரிடுகின்றது. அத்துடன் நாளாந்தம் உணவுக்குக் கூட வழியின்றி அவர்களுடைய குடும்பத்தினர் தவித்து நிற்கின்றார்கள். இதனால் மிகவும் சீரழிவான வாழ்க்கையையே அவர்கள் எதிர்நோக்கியிருக்கின்றனர். நீதிமன்றக் கட்ட மைப்பின் ஊடாக விடுதலையாவதற்கு இன்னும் பல வருடங்கள் சிறையில் இருக்க வேண்டியிருக்கும்.

எமது பகுதிகளை அபிவிருத்தி செய்துவரும் நீங்கள் எமது பிள்ளைகளின் விடயத்திலும் கவனமெடுத்து எமது பிள்ளைகளையும் உறவுகளையும் எம்மோடு சேர்ந்து வாழ்வதற்கு பொது மன்னிப்பளித்து அவர்களை விடுதலை செய்யுமாறு கேட்டு நிற்கின்றோம்.

கடந்த மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாக நடைபெற்ற யுத்தத்தில் இழந்து போனஉறவுகளைத்தவிர்ந்த மற்றைய அனைத்தையும் பெற்றுத்தர முடியுமென நீங்கள் கூறி யிருந்தீர்கள்.

அதற்கமைவாக சிறையில் இருக்கும் எமது பிள்ளைகள்உறவுகளை எம்முடன் சேர்ந்து வாழ்வதற்கு வழி வகுப்பீர்கள் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்த்து காத்து நிற்கின்றோம் என தமிழ் அரசியல்கைதிகளின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 90-160 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 50 | 120 | 80 |
| தக்காளி | 100 | 150 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 40 |
| கோவா | 100 | 120 | 120 | 120 |
| கரட் | 140 | 100 | 140 | 140 |
| பூசணி | 40 | 40 | 50 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 220 | 200 | 200-240 | 200 |
| பெரிய வெங்காயம் | 140 | 110 | 130 | 140 |
| பாகற்காய் | 60 | 60 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 50 | 80 | 60 | 60 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 100 | 90 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 140 | 160 | 160 |
| போஞ்சி | 160 | 120 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 50 | — | — |
| கீரை – 1 பிடி | 10 | 15-20 | 10 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40 | 30-35 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 100 | 120 |

# இராசி பலன்

20.07.2013
(ஆடி 04, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
துவாதசி காலை 7.57 மணிவரை
திரயோதசி பின்னிரவு 5.29 மணிவரை
கேட்டை பிற்பகல் 12.35 மணிவரை
இராகுகாலம் 9.01-10.31 மணிவரை
சுபநேரம் 3.01-4.31 மணிவரை
சனிப்பிரதோச விரதம்

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**இடபம்** சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களால் அலைச்சல்கள், மனச்சோர்வு என்பன ஏற்படலாம், காலையில் உதவுவதாக கூறியவ்ர் மாலையில் உதாசினமாக நடந்து கொள்ளலாம்.

**மிதுனம்** பால்ய நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், விருந்தினர் வருகையுண்டு, திருமண வாய்ப்புகள் தேடிவரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**சிங்கம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, சில காரிய இடையூறுகள் ஏற்படலாம்.

**கன்னி** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், வாகன பழுதுச் செலவுகள் குறைவடையும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.

**துலாம்** இளைய சகோதரத்தின் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், பழைய பாக்கிகள் திடீரென வசூலாகலாம், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** வருமானம் திருப்திதரும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், பயணங்களால் பலனுண்டு, குடும்பத்தினரின் எண்ணங்களை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மகரம்** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, உறவினர் வீட்டு சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**கும்பம்** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் விதத்தில் அமையும், சமயோசித புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மீனம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், காரிய அனுகூலமுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடுகளை ஏற்றிச்சென்ற நபருக்கு அபராதம்


கரணவாய் குஞ்சர்கடைப் பகுதியில் முச்சக்கரவண்டியில் அனுமதிப்பத்திரமின்றி மூன்று ஆடுகளை ஏற்றிச் சென்ற நபரொருவருக்கு 20 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சம்பவதினம் குறித்த நபர் முச்சக்கர வண்டியில் அனுமதிப்பத்திரமின்றி ஆடுகளை ஏற்றிச் சென்றதாக முச்சக்கரவண்டி சாரதிக்கும் குறித்த நபருக்கு எதிராக நெல்லியடிப் பொலிஸாரால் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்நசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மிருகவதை சட்டத்தை மீறியமைக்காக 10 ஆயிரம் ரூபாவும் அனுமதிப் பத்திரமின்றி ஆடுகளை கொண்டு சென்றமைக்காக 10 ஆயிரம் ரூபாவும் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் முச்சக்கர வண்டிச் சாரதியை 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான பிணையில் வாகனத்தை எடுக்க நீதவான் உத்தரவிட்டார்.

இவ்வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (அ-9-24)




# அபிவிருத்தியை முன்னெடுக்க மட்டுமே மாகாண சபைகளுக்கு அதிகாரம்!


## அமைச்சர் சுசில் யாழில் உரை


(யாழ்ப்பாணம்)

**மாகாண சபைகளுக்கு அபிவிருத்தியை முன்னெடுக்க மட்டுமே அதிகாரம் உண்டு என்பதைப் புரிந்து கொண்டு வடபகுதி மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்ள வேண்டுமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் சுற்றுச்சூழல் அமைச்சருமான சுசில் பிரேமஜெயந்த யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.**









வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான விசேட கூட்டம் நேற்றுக் காலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இடம்பெறும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இத்தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பொய்யான வாக்குறுதிகளை சிலர் வழங்கி வருகின்றனர்.

மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறுவதன்மூலம் அபிவிருத்திப் பணிகளை மட்டுமே முன்னெடுக்க முடியும். இதனை வடபகுதி மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு புரிந்து கொண்டு தமக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். அத்தோடு ஆளும் தரப்பினரை தெரிவு செய்தால்தான் அபிவிருத்தி என்பது சாத்தியமாகும்.

மாறாக வேறு தரப்பினரைத் தெரிவு செய்யுமிடத்து அபிவிருத்திப் பணிகளைச் செய்ய முடியாத நிலை ஏற்படும். இதற்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல் நல்ல எடுத்துக்காட்டு.

மேலும் மிக நீண்டகாலமாக இந்த நாட்டில் இடம்பெற்று வந்த யுத்தத்திற்கும் அச்சமான வாழ்வுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் முற்றுப்புள்ளி வைத்தார்.

நிரந்தர சமாதானமும் சுதந்திரமான வாழ்வினையும் பெற்றுத்தந்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான்.

இதுதவிர பாரிய அபிவிருத்திப் பணிகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுவதற்கும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத சூழல் உருவாகுவதற்கும் ஜனாதிபதிதான் காரணம்.

கடந்த 2006 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு நான் வந்தபோது இங்கு 500 மீற்றருக்கு இடைப்பட்ட பகுதியில் இராணுவச் சோதனைச் சாவடிகளும் பொலிஸ் சோதனைச் சாவடிகளும் பாதுகாப்பு நெருக்கடி நிலைமைகளும் காணப்பட்டன.

யாழ்.பலாலிக்கு விமானம் மூலம் வந்திறங்கிய நான் உலங்குவானூர்தி மூலம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கை வந்தடைந்து பின்னர் அங்கிருந்து பலத்த பாதுகாப்புடன் வாகனத்தில் யாழ்.மாவட்ட செயலகத்திற்க அழைத்துச் செல்லப்பட்டேன்.

இவ்வாறான பதற்றமான சூழல் தற்போது இல்லை.நாட்டில் நிலை கொண்டிருந்த தீவிரவாதம் முற்றாக அழிக்கப்பட்டு சுதந்திரமான, நிம்மதியான வாழ்க்கை அனைத்து மக்களுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதுமட்டுமன்றி கடந்த காலங்களில் தென்னிலங்கையைவிட குறிப்பாக கொழும்பை விட பலமடங்கு இங்கு எரிபொருள் உள்ளிட்ட பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டன. ஆனால், தற்போது அந்த நிலையில்லை.

தொழில் சுதந்திரம், மதச் சுதந்திரம், மொழிச் சுதந்திரம் எல்லாம் இப்பகுதி மக்களுக்கும் கிடைத்திருக்கின்றது.

எனவே, நாம் எல்லோரும் ஒரே நாட்டு மக்களாக இலங்கையர்கள் என்ற எண்ணத்துடன் வாழவேண்டும்.

இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் எனவும் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என மத, இன ரீதியாகவும் பிரிவினை காட்டாது ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.

கடந்த கால யுத்தசூழல் இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும் ஒற்றுமையை சீரழித்து விட்டது.

அதுமட்டுமின்றி மக்களின் சுதந்திரத்தையும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கக் கூடிய சூழ்நிலைகளையும் சீரழித்துவிட்டது.

பல தமிழ் அரசியல்வாதிகளும் சிங்கள அரசியல்வாதிகளும் உயிரிழந்துள்ளனர் என்பதைப் புரிந்து கொண்டு அவ்வாறான அழிவுக்கு மீண்டும் செல்லாது ஒற்றுமையாக வாழ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட பலர் உரையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# 14 சந்தேக நபர்களுக்கு பிடியாணை பிறப்பிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்தில் தாபரிப்பு வழக்குடன் தொடர்புடைய 14 சந்தேக நபர்களுக்கு பருத்தித்துறை நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

வடமராட்சி பிரதேசத்திலுள்ள மூன்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியை சேர்ந்த தாபரிப்பு வழக்குடன் தொடர்புடைய 14 சந்தேக நபர்கள் நீதிமன்றத்தின் வழக்குகளுக்கு சமூகம் அளிக்காமல் தலைமறைவாகியுள்ளனர்.

இவ் வழக்கு விசாரணைகள் கடந்த 17 -ம் திகதி பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீ நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

குடும்ப வன்முறையில் ஈடுபட்டதாக குறித்த குடும்பஸ்தர்களுக்கு எதிராக அவர்களது மனைவியர்களால் வழக்கு தொடரப்பட்டது.

இதன்போது வழக்குகளுடன் தொடர்புடைய 14 சந்தேக நபர்கள் மன்றின் வழக்குகளுக்கு சமூகம் அளிக்கவில்லை.

இதனையடுத்து பருத்தித்துறை நீதிமன்றம் 14 சந்தேக நபர்களுக்கும் பிடியாணை பிறப்பித்ததுடன் அவர்களுடைய பிணையாளிகளுக்கு அழைப்பாணை விடுத்துள்ளது. (அ-9-24)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரிய துணைத் தூதுவரை மகாலிங்கம் சந்திக்கிறார்

இந்தியா- இலங்கைக்கான ஆஸ்திரிய நாட்டின் பிரதித்தூதுவரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட பிரதிநிதியுமான ரைமூன் மாயிஸ் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கத்தை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் இச் சந்திப்பு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஆஸ்திரிய நாட்டின் பிரதித் தூதுவர் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் உள்ளிட்ட நிர்வாகத்தினரையும் சந்தித்து கலந்துரையாடிய தோடு, யாழ். அரியாலை நாவலடிப் பகுதியில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகளையும் சென்று பார்வையிட்டார்.

இதன்பின்பு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் யாழ். இந்தியத் துணைத் தூதுவரை சந்தித்து கலந்துரையாடினார். (அ-6)

## பரிசளிப்பு விழா ஒத்தி வைப்பு

(பூநகரி)

கிளி. இயக்கச்சி அ.த.க பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில், தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

அத்தோடு பரிசளிப்பு விழா நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (9-84)

# இலங்கைமீது தமக்கு அபார நம்பிக்கையாம் வெளிவிவகார அமைச்சர் குர்ஷித்

(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அணு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட விருப்பதாக வெளியான செய்தி குறித்து தாம் அதிர்ச்சியடையவில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மிக நீண்டகால உறவு நிலவுகிறது. இலங்கையின் பல்வேறு விடயங்களில் இந்தியா செயற்பட்டு உறுதுணையாக இருந்து வருகிறது. குறிப்பாக தமிழ் மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் இந்தியா வினைத்திறனாக செயற்பட்டுள்ளது.

இதன்படி இரண்டு நாடுகளும் இடையிலான நட்புறவில் நீண்டதூரம் சென்றுள்ள நிலையில் புதிதாக வருகின்ற போட்டியாளர்கள் குறித்து அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

JAFFNA COLLEGE CEYLON

## The Annual General Meeting of Jaffna College Alumni Association.

The above meeting will be held on the 22nd July 2013 at 9:00 am in Ottley Hall. Your presence is very much appreciated.

### Annual General Meeting Agenda

- Prayer
- Minutes of the last Ex. Co meeting
- Secretary's report
- Treasurer's Report
- Principal's Report
- Election of new office bearers
- Any Other Business

Hony. Secretary.

(9/404)

# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கியது ஐ.தே.க.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பை மீறி செயற்பட்டு ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட உள்ளூராட்சி உறுப்பினர்கள் சிலருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் வைத்து கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

கட்சி தலைமையகமான சிறிகொத்தா தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கும் ஹெட்பார்க் கூட்டத்திற்குச் சென்ற உள்ளூராட்சி தலைவர்களுக்குமே பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலிலும் எதிர்காலத்திலும் கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வதாக பொதுமன்னிப்புப் பெற்ற உள்ளூராட்சி உறுப்பினர்கள் வாக்குறுதி அளித்துள்ளனர். (அ-2)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1540
E-mail : valampuriijaffna@gmail.com

**லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான விளக்கம்**

- மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளுக்கு செல்ல விரும்புவோர் நேரில் வரவும்
- போய் சேர்ந்த பின்பு பணம் செலுத்தலாம்
- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
- நிபந்தனைகளுக்கு உட்பட்டது

முன்பதிவுகளுக்கு மட்டும் 0772568122

(3378)

அனி இன்டர் நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல. 72, இலுப்பையடி சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இ. 0214921831, 0214921832

**சிங்கப்பூர் வேலை அனுமதியை பெற்றுக் கொள்வதற்குரிய விளக்கம்**

**(Employment Pass)**

- இரண்டு வருட வேலை
- மாதாந்த சம்பளம் 1250 சிங்கப்பூர் டொலர்
- மாபில் தொழிற்சாலை
- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
- நிபந்தனைகளுக்கு உட்பட்டது

முன்பதிவுகளுக்கு மட்டும் 0772568122

107X1250=133,750/=

(3378)

அனி இன்டர் நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல. 72, இலுப்பையடி சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இ. 0214921831, 0214921832

**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1968 இந்து(V)
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4
உயரம்: 5'11"
கி.பா : 19.5
தகைமை/தொழில்:AL,காசாளர் டுபாய்
தொ.இ:B2053

பிறப்பு:1978 இந்து(V,KO)
நட்சத்திரம்: மகம் 1
உயரம்: 5'6"
கி.பா : 56 செவ் 1
தகைமை/தொழில்:AL, சாரதி தனியார்
தொ.இ:B2054

பிறப்பு:1983 இந்து(V)
நட்சத்திரம்: ரோகினி 2
உயரம்: 5' 6"
கி.பா: 29.75
தகைமை/தொழில்: A/L,Video Editing, சுவிஸ் Work permit
தொ.இ:B2056

பிறப்பு:1979 இந்து (V)
நட்சத்திரம்: உத்தரம் 4
உயரம்: 5'5"
கி.பா : 80, செ 7
தகைமை/தொழில்: MSc, Engineer,UK Skill Migration
தொ.இ:B2058

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1987இந்து(V)
நட்சத்திரம்: மிருகசீரிடம் 3
உயரம்: 5'4"
கி.பா : 5
தகைமை/தொழில்: BSc(IT)Web Development
தொ.இ: G2060

பிறப்பு: 1988இந்து(V)
நட்சத்திரம்: ரேவதி 2
உயரம்: 5' 2"
கி.பா : 22
தகைமை/தொழில்: Business Management
தொ.இ:G2061

பிறப்பு: 1984இந்து(V)
நட்சத்திரம்: சதயம்
கி.பா : 30, செவ் 12
உயரம்: 5'
தகைமை/தொழில்: MS(IT) முகாமையாளர் UK Students
தொ.இ:G2063

பிறப்பு: 1987இந்து(V)
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா : 18
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:College, Nursing (final Year)
தொ.இ: G2065

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் விபத்துக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தவும் அனர்த்த காலங்களில் ஏற்படும் பாதிப்புக்களை குறைக்கவும் விசேட நடவடிக்கைகளை முன்னெடுப்பதென அனர்த்த முகாமைத்துவ குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று காலை இடம்பெற்ற மேற்படிக் கூட்டத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுத் தலைவரும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருமான சுந்தரம் அருமைநாயகம், அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவி, யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், இராணுவம், கடற்படை, பொலிஸ் உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த விசேட கூட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் யாழ். மாவட்ட கிளையின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதோடு இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும்போது அதாவது அவசர காலச் சூழலில் முன்னெடுக்கப்பட வேண்டிய அல்லது மேம்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள் குறித்தும் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இதுதவிர அனர்த்த காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளுதல், அது தொடர்பாகவும் பாதிப்புகள் தொடர்பாகவும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கும் தெரியப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளும் அது தொடர்பாக பொறுப்புக் கூறுதல் தொடர்பான நடைமுறைகள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

இதுதவிர புவியியல் தகவல் முறைமையினைப் பயன்படுத்தி அதாவது இடஞ்சார் அனர்த்தப் பரம்பல் இடங்களை அடையாளப்படுத்தி பாதிப்புக்களிலிருந்து விலகியிருப்பது உள்ளிட்ட பொறிமுறைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அத்தோடு யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த பொலிஸாருடன் இணைந்து கல்வித் திணைக்களம், தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்கள் உள்ளிட்டோருடன் விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபடுவது எனவும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட இளம் தலைமுறையினருக்கு வீதி விபத்துக்கள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவது உள்ளிட்ட பலதீர்மானங்கள்எடுக்கப்பட்டன.(அ-6)

## ரெலிகொம் 3 மாடி கட்டடத்தில் தீ விபத்து!

நீர்கொழும்பு நகரத்திலுள்ள ரெலிகொம் தொலைத்தொடர்பு நிறுவனத்தின் நிர்வாகப் பிரிவுக்குச் சொந்தமான மூன்று மாடிக் கட்டடத்தின் கீழ்ப்பிரிவில் தீப்பற்றியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முந்தி னம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி கட்டடத்தின் கீழ் மாடியில் புல் தறிக்கும் இயந்திரங்கள், பெற்றோல் பரல்கள் மற்றும் இயந்திரங்களுக்குப் பாவிக்கும் எண்ணெய் வகைகள் வைக்கப்பட்டுள்ள களஞ்சிய அறையிலேயே குறித்த தீ பற்றல் இடம்பெற்றுள்ளது.

சுமார் 200 ஊழியர்கள் கடமையாற்றும் இக்கட்டடத்தின் கீழிருந்து மேல் மாடிகளை நோக்கி புகை எழும்பத் தொடங்கியதும் நீர்கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர்களுடன் தொடர்பு கொண்டதையடுத்து அங்கு தீயணைப்புப் படையினர் தீயை கட்டுப்பாட்டுக்கள் கொண்டு வந்தனர். (அ-2)

## தேர்தல் முறைப்பாடுகளை தெரிவிக்க தேர்தல் இணைப்பு அலுவலகங்கள் அமைப்பு

வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாண தேர்தல்கள் தொடர்பிலான முறைப்பாடுகளைத் தெரிவிக்க 10 மாவட்டங்களிலும் நேற்று முன்தினம் முதல் தேர்தல் இணைப்பு அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தலுடன் தொடர்புடைய சகல முறைப்பாடுகளையும் இங்கு முன்வைக்க முடியுமெனவும் அது தொடர்பில் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

தேர்தல் குறித்த முறைப்பாடுகளை ஏற்க கடந்த 15 ஆம் திகதி முதல் தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாட்டு பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெறும் 3 மாகாணங்களின் முறைப்பாடுகளை 0112877612 எனும் தொலைபேசி இலக்கத்திற்கோ 0112877613 எனும் பக்ஸ் இலக்கத்திற்கோ அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

வடக்கு உட்பட 10 மாவட்டங்களிலும் மாவட்ட செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் தேர்தல் இணைப்பு அலுவலகங்களில் அரச அதிபரின் பிரதிநிதி ஒருவரும் பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் கூறியது.

மேற்படி மாவட்ட அலுவலகங்களினூடாக தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பில் தீர்வு வழங்கவும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு முன்வைத்து உரிய நடவடிக்கை எடுக்கவும் ஆவன செய்யப்படுமென தேர்தல் திணைக்கள முறைப்பாட்டுப் பிரிவுத் தலைவர் மெதவெவ கூறினார். மாவட்ட மட்டத்தில் தீர்க்க முடியாத பிரச்சினைகள் பிரதான அலுவலகத்திற்கு முன் வைக்கப்பட்டு தீர்க்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை முறைப்பாட்டுப் பிரிவுகள் இயங்கி வருவதோடு தேர்தல் நெருங்குகையில் நள்ளிரவிலும் செயற்படும் எனவும் அவர் கூறினார்.

தேர்தலுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை ஏற்கப்படவுள்ளது. அதன் பின்னர் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் கூடுதலாக கிடைக்கும்எனஎதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:**
T.P : 021 321 0815, 021 567 1532
E-mail : valampurii@yahoo.com,
valampuriijaffna@gmail.com

## பொதுநலவாய மாநாட்டை அவுஸ். புறக்கணிக்க வேண்டும்

### பொதுநலவாய சட்டத்தரணிகள் கோரிக்கை

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்கள் நாடுகளின் மாநாட்டை அவுஸ்திரேலியாவின் பிரதமர் கெவின் ரூட் புறக்கணிக்க வேண்டும் என்று பொதுநலவாய நாடுகளின் சட்டத்தரணிகள் ஒன்றியம் தெரிவித்ததாக அதன் தலைவர் எலக்ஸ் வார்ட் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இலங்கையின் மனிதவுரிமைகள் விடயங்கள் தொடர்பில் அதன் அரசாங்கம் போலியான தகவல்களை வெளிப்படுத்தி வருகின்றது. தொடர்ந்து அங்கு அரசியல் மற்றும் மனிதவுரிமைகளுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெறுகின்ற நிலையில் இங்கு நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட் டில் கலந்து கொள்கின்றமை இலங்கையின் செயற்பாடுகளை ஏற்றுக் கொள்வதைப் போன்றது. கடந்த 2006 ஆம் ஆண்டு பிஜியில் இடம்பெற்ற அரசியல் வன்முறைகளை கருத்தில் கொண்டு 2009 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளிலிருந்து அந்த நாடு இடைநிறுத்தப்பட்டது. இதற்கு கெவின் ரூட்டின் வாதம் ஒரு முக்கிய இடத்தை வகித்தது. இந்நிலையில் தற்போது அவுஸ்திரேலியாவின் பிரதமர் பதவியை பொறுப்பேற்றுள்ள கெவின் ரூட் இலங்கையில் நடைபெறவுள்ள மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.(அ-2)

YMCA JAFFNA

**கேள்விக் கோரிக்கை.**

யாழ்.வை.எம்.சீ.ஏ.கட்டடத்தில் கச்சேரி - நல்லூர் வீதியில் அமைந்துள்ள கடை (10'X31')

**01.08.2013 - 31.07.2014 வரை**

குத்தகைக்கு கொடுக்க கேள்விக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது.

**முடிவுத் திகதி: 25.07.2013**

கோரிக்கைகள் அனுப்பவேண்டிய முகவரி பொதுச் செயலாளர்
வை.எம்.சீ.ஏ, 109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
பொதுச் செயலாளர்

(3413)

**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரி ஆசிரியை
**திருமதி அன்ரனி ஜெனிற்றா அரஸ் டானியல்** அவர்களின்
அன்புத் தந்தை



**குருசுமுத்து டெனிஸ் எமிலியானுஸ்**

அவர்களின் மறைவால் துயர் அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி, உரும்பிராய்.**

(சி-4071)



SRI LANKA RED CROSS SOCIETY

**தொழில்நுட்பத்திறன் விருத்திப் பயிற்சிநெறிக்கான நேர்முகத்தேர்வு**

**யாழ்ப்பாணத்தில் தொழிற்பயிற்சி பெற விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்**

கௌரவ ஆளுநர் வடமாகாணம் அவர்களின் வழிகாட்டலுக்கமைவாக. தொழிற்றுறைத் திணைக்களமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து வடமாகாணத்தில் 1000 இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்பினை வழங்கும் பொருட்டு ஏற்கனவே எம்மால் பத்திரிகையில் விண்ணப்பங்கள் கோரியதற்கமைவாக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு பின்வரும் திகதிகளில் நடைபெறுகின்றது. எனவே தாங்கள் விண்ணப்பித்த பயிற்சி நெறிகளுக்கான நேர்முகத்தேர்விற்கு உரிய திகதிகளில் பின்வரும் ஆவணங்களுடன் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**ஆவணங்கள் விபரம்**

- தேசிய அடையாள அட்டை
- பாடசாலைவிடுகைப்பத்திரம் / கல்வித் தகைமை சான்றிதழ் - போட்டோப்பிரதியுடன் மூலப்பிரதி
- கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப் பட்ட வதிவிடச்சான்றிதழ்
- வங்கிக்கணக்குப்புத்தகம்-குறித்த நபரினுடையது

நடைபெறும் இடம் - யாழ் வீரசிங்கம் மண்டபம், தொழிற்பயிற்சி அதிகாரசபை அலுவலகம் -2ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

21.07.2013 - ஞாயிற்றுக்கிழமை , காலை 8.30 - 2.00 மணிவரை - வீட்டு மின்னிணைப்பு

22.07.2013 - திங்கட்கிழமை காலை 8.30 - 2.00 மணிவரை - நீர்குழாய் பொருத்துதல் பயிற்சி நெறி, மரவேலைப்பயிற்சி நெறி, கட்டடவேலை பயிற்சி நெறி (மேசன்)

நேர்முகத்தேர்விற்கு சமுகம் தராத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

(சி-4069)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க சந்தர்ப்பம் கிட்டும் என்பது சந்தேகமே

## சீ.பி.ஜே. தெரிவிப்பு

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு குறித்த தகவல்களை திரட்டுவதற்கு சர்வதேச ஊடகவியலாளர்களுக்கு முழுமையான சந்தர்ப்பம் கிடைக்குமா என்பது சந்தேகமே என ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் அமைப்பு (சீ.பி.ஜே) தெரிவித்துள்ளது.

சனல் 4 ஊடகத்தின் கெல்லம் மெக்ரே போன்ற ஊடகவியலாளர்களுக்கு நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதி கிட்டுமா என்பது சந்தேகமே என குறிப்பிட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்புச் செயலகம் அனுமதி அளித்தாலும் இலங்கை அரசாங்கம் வேறும் வழிகளைப் பயன்படுத்தி சில வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதியளிக்கமாட்டாது என ஊடகவியலாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் ஊடகவியலாளர்களுக்கு இவ்வாறு தடை ஏற்படுத்தப்படலாம் என ஊடகவியலாளர்களைப் பாதுக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு எவ்வித தடையும் விதிக்கப் போவதில்லை என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாதய ராஜபக்ஷ ஆகியோர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


### இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை

**(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு)**

கண்ட கல் விற்பனை

அச்சுவேலி கைத்தொழில்பேட்டையின் கட்டட வேலைப்பாடுகள் செயற்பாட்டின் போது அகழப்பட்ட கூடிய அளவிலான கண்ட கற்கள் விற்பனை செய்வதற்கு மூடப்பட்ட கடித உறையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கீழ் குறித்த முகவரிக்கு 31.07.2013 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்க முடியும்.

| அலகு | விலை (கொள்வனவிற்கு எதிர்பார்க்கப்படுவது) | அகற்றுவதற்கு எடுக்கும் காலம் |
|---|---|---|
| கியூப்:............ | ரூபா..................... | நாட்களின் எண்ணிக்கை:.............. |

(கண்டகல் கொள்வனவிற்கு பொருத்தமானவராக தெரிவு செய்யப்படும் விலை கோருபவர் தற்போதுள்ள கண்ட கற்கள் முழுவதையும் அவ்வேலைப்பகுதியில் இருந்து அகற்றிக் கொள்ள கடப்பாடுடையவர்)

மேலதிக விபரங்களுக்கும் மற்றும் வேலை இடத்தை பார்வையிடுவதற்கும் கீழ் குறித்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

பிரதிப்பணிப்பாளர்
யாழ் மாவட்ட அலுவலகம்,
இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை,
தேசிய வீடமைப்பு கட்டடம்,
சுண்டுக்குளி.
தொலைபேசி / தொலைநகல் இல:- 021 222 2421

தலைவர்
இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை.

(சி/-4052)







### புதிய அப்போஸ்தலர் சபை

இல.56, சிறிவிக்ரம மாவத்த
மட்டக்குளியா, கொழும்பு - 15

**தொடர்பு கொள்ளவேண்டிய இல: 0710167301 (யோகன்)**

இப்படங்களில் இருப்பவர்கள் யாராயினும் தயவுசெய்து மேல் குறிக்கப்பட்ட விலாசத்திற்கு அல்லது போன் இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

அல்லது 22.07.2013 அன்று காலை 10 மணிக்கு மானிப்பாய் பிள்ளையார் கோயில் அருகே எங்களை சந்திக்கவும்.

(சி-4064)


# மணி விழா நாயகனை வாழ்த்துகின்றோம்

### அதிபரின் வாழ்வும் பணியும்

நெடுந்தீவின் மேற்கில் ஆறுமுகம் சுப்பிர மணியம் அவர்களுக்கும் கார்த்திகேசு தங்கம்மா அவர்களுக்கும் மூன்றாவது புத்திரனாக திரு.ச. தியாகலிங்கம் அவர்கள் நெடுந்தீவு மண்ணில் பிறந்தார்.

திரு.சு.தியாகலிங்கம் அவர்கள் ஆரம்பக் கல்வியை நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வி தொடக்கம் யாழ். இந்துக் கல்லூரியிலும் தந்தையாரின் ஊக்கத்தினாலும், தாயாரின் அரவணைப்பிலும் கற்று முன் னேறினார். தந்தையாரின் ஆசிரியத் தொழிலைத்தானும் மேற்கொள்ளும் விருப்புடன் 1977.06.07இல் பண்டாரவளை வெவல்கின்னா அ.த.க பாடசாலையில் ஆசிரியராக முதல் நியமனம் கிடைத்தது. 1979.09.11 ஆம் திகதி முதல் பண்டாரவளை பிந்துணவெவ ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் தலவாக்கலை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் பயிற்சியை மேற்கொண்டார். ஆசிரிய பயிற்சியின் பின்னர் நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயத்திலும் நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலும் 1987.07.01ஆம் திகதி முதல் ஆசிரியராகக் கடமையாற்றி 1987.07.08 ஆம் திகதி யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றார். அன்று முதல் இன்று வரை 26 ஆண்டுகள் இப்பாடசாலையில் சேவை செய்துள்ளார். இக் காலங்களில் யாழ் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிக் கலைப் பட்டதாரியாகி, பின்னர் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் படிப்பை யாழ் பல்கலைக்கழகத்திலும் மேலும் கல்வி முதுமாணிப் படிப்பை யாழ் பல்கலைக்கழகத்திலும் நிறைவு செய்துள்ளார்.

திருவாளர் சு.தியாகலிங்கம் அவர்கள் 2010.06.16 இலிருந்து அதிபராகப் பொறுப்பேற்றது முதல் பாடசாலையில் நடைமுறையில் இருந்த 5S செயற்பாட்டுத் தொடர்ச்சியை மேலும் நல்ல முறையில் முன் எடுத்துச்சென்றார். பாடசாலையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தியும் பாடசாலை வளர்ச்சியை விரிவுபடுத்தியும் ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாக அதனை விளக்க வைத்தார்.

அதிபரின் காலத்தில் பாடசாலை மாணவர் தேசிய ரீதியில் குழு நடனத்தில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தினைப் பெற்று பாடசாலையின் பெயரினை உச்ச நிலைக்குக் கொண்டு சென்றனர். அதுமட்டுமல்லாமல் 2012 இல் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோன்றிய மாணவர்கள் வரலாறு காணாத வகையில் 143 பேர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றதைக் காணமுடிந்தது. அத்தோடு மட்டுமல்லாது 193 உயர் புள்ளி பெற்ற மாணவன் செல்வன் பா.அபிராம் தற்போது ஜப்பானில் 42 நாடுகளின் மாணவர் ஒன்று கூடலில் கலந்து கொள்ளும் வகையில் ஒழுங்கினை மேற்கொண்டார்.

அதிபர் அவர்களின் இறுக்கமான கட்டுப்பாடான நிர்வாகத் திறனுக்கு வெகுமதியாக '2013" இல் சிறந்த முகாமைத்துவத்துக்கான அதிபர் விருது கிடைத்தமை அவருக்கு மட்டுமன்றி யாழ் இந்து ஆரம்ப பாடசாலை சமூகம் முழுவதற்கும் கிடைத்த கௌரவமாகும்.



உயர்திரு சுப்பிரமணியம் தியாகலிங்கம்
அதிபர் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
(BA, Dip.in. Edu., M.Ed, SLPS III)

### விழா நாயகன் மங்களம் கண்டென்றும் வாழ்கவே

தியாகலிங்கம் ஜெயமலர் திருவுடைத் தம்பதியர்
நியாயமாய் நிறைந்தவய தறுபதில் - தயாபரனின்
அருளினால் மணிவிழாக் கண்டுமே அவனியில்
பெருமையாய் வாழ்கபல் லாண்டு

அன்புசெய் மனமும் ஆற்றல்மிகு உழைப்பும்
பண்புடைக் கல்வியும் பதவியும் - இன்புடன்
தியாகலிங்கம் பெரியோன் தேடிய புகழவரின்
தயாளகுணமும் தாலமைந்த வாழ்வு

ஆசான், அதிபர், அன்புடைய தந்தை
தேசாகும் இல்லறத் துணைவன் - நேசமுள்ள
நல்லாள் மனைவி நன்மக்கள் மூவரெனச்
செல்லட்டும் வாழ்க்கை இனிது

பண்ணிறைந்த பாடலாய் பயனளிக்கும் விளைநிலமாய்
விண்ணிறைந்த வெண்ணிலவின் ஒளியதாய்- மண்ணுலகில்
மணிவிழாத் தம்பதியர் மாண்புடன் வாழ்கவே!
[illegible]

[illegible]

### அதிபரின் வாழ்வும் பணியும் ஒரே பார்வையில்

பிறப்பு : ஆண்டு 21.07.1953
இடம் : நெடுந்தீவு மேற்கு
பெற்றோர் :
தந்தையார் பண்டிதர் ஆறுமுகம் சுப்பிரமணியம் தலைமையாசிரியர்.
தாயார் திருமதி தங்கம்மா சுப்பிரமணியம்

**கல்வி :**
ஆரம்பக்கல்வி - நெடுங்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்
இடைநிலைக் கல்வி - யாழ் இந்துக் கல்லூரி
உயர்கல்வி - கலைப்பட்டதாரி, 1997
பட்டப்பின் கல்வி டிப்ளோமா - 2001
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
கல்வி முதுமாணி 2003, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**தொழில் :**
ஆசிரியர்
பண்டாரவளை வெவல்கின்ன அ.த.க பாடசாலை 1977.06.07- 1978.01.17
பண்டாரவளை தெமோதர வித்தியாலயம் 1978.01.18 -1979.09.11
நெடுந்தீவு மகா வித்தியாலயம்,
நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
ஆசிரியர் - 1987.07.08
தரஇணைப்பாளர் - 1988.01.05-1990.12.31
பகுதித்தலைவர் - 1991.01.04-1997.02.14
பிரதி அதிபர் - 1997.02.15-2009.11.13
அதிபர் - 2009.11.13-2013.07.20

**குடும்பம் :**
மனைவி - திருமதி.ஜெயமலர் தியாகலிங்கம்
B.A. Dip.in.Ed, M.phil(Ed), SLEAS- III, SLTES-III
உபபீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

**பிள்ளைகள் :**
தி.ஆரணி ஆங்கிலமொழி பட்டதாரி
தி.தியாசாயினி - டிப்ளோமா கணிதத்துறை பயிற்சி (ஆங்கில மொழி மூலம்)
ஆசிரியர், வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை
தி.மயூரசாகித்தியன் -
மாணவன் யாழ் இந்துக் கல்லூரி 2013 A/L கணிதத்துறை

**சமூகப் பணி:**
சனசமூக நிலையத் தலைவர் - நெடுந்தீவு மேற்கு
விளையாட்டுக் கழக உறுப்பினர் - நெடுந்தீவு மேற்கு
ஆலய பரிபாலனசபை உறுப்பினர் - நெடுந்தீவு மேற்கு
கிராமிய சிவில் பாதுகாப்புக் குழு தலைவர் - J/102
யாழ்ப்பாண லயன்ஸ் கழகத் தலைவர், வலயத் தலைவர்,
தற்போது உறுப்பினர்.

(சி-4063)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபை தேர்தலில் தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களுக்கு முன்னுரிமை

## ஜே.வி.பி. பிரசார செயலாளர் விஜிதஹேரத்

(கொழும்பு)

**வடமாகாண சபைத் தேர்தலில் 5 மாவட்டங்களிலும் ஜே.வி.பி.தனித்து போட்டியிடும். இதில் தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களுக்கு அதிக வாய்ப்பளிக்கப்படவுள்ளதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் எம்.பியுமான விஜித ஹேரத் தெரிவித்தார்.**

மாத்தளை மாவட்டங்களிலும் தமிழ் வேட்பாளர்களை களமிறக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாகாண சபை தேர்தல்கள் தொடர்பில் ஜே.வி.பியின் நடவடிக்கைகள் தொடர்பாக வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபை தேர்தலுக்கான எமது கட்சியின் வேட்பாளர்கள் தெரிவு தற்போது இடம்பெற்று வருகிறது.

வடக்கில் 5 மாவட்டங்களிலும் கணிசமான அளவு தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களையும் அதேபோன்று சிங்கள வேட்பாளர்களையும் களமிறக்கவுள்ளோம்.

வட மேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கும் மூவின வேட்பாளர்களையும் நிறுத்தவுள்ளோம்.

வடக்கு வேட்பாளர் தெரிவுக்குழுவின் தலைவராக சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி. நியமிக்கப்பட்டுள்ளதோடு, வடமேல் மாகாணத்திற்கு அநுரதிசாநாயக்க எம்.பி. மற்றும் விமலரத்னாயக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதோடு, மத்திய மாகாணத்திற்கு நானும், லால் காந்தவும் நியமிக்கப்பட்டுள்ளோம்.

விரைவில் வேட்பாளர்கள் தெரிவு பூர்த்தி செய்யப்படும். இதன் பின்னர் பெயர்கள் வெளியிடப்படும். தேர்தலுக்கான தொனிப் பொருள் இது வரை தீர்மானிக்கப்படவில்லை.

மாகாண சபை முறைமையால் தேசிய பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது. இதனை 1987 முதல் நாம் எதிர்க்கின்றோம். ஆனால் அது அரசியலமைப்பில் சட்டமாக்கப்பட்டுள்ளது. எனவே மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுகின்றோம்.

இதன் போது மாகாண சபை முறைமையால் நாட்டுக்கோ, மக்களுக்கோ நன்மை இல்லை என்பதை தெளிவுபடுத்துவோமென்றும் அவர் தெரிவித்தார். (அ-2)



6 ஆவது வடமாகாண மெய்வல்லுநர் போட்டி அண்மையில் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்கள் 13 பதக்கங்களைப் பெற்று சாதனையுடன் கூடிய வெற்றிகளைப் பெற்றுள்ளனர். அத்துடன் வெற்றி பெற்ற மாணவர்கள், பாடசாலை அதிபர் மற்றும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

# அரசுக்கு எதிராக செயற்பட்டால் புலிப்பட்டம் கிடைக்கும்-மங்கள

தமக்கு எதிராக ஈடுபடுபவர்களுக்கு புலிப்பட்டம் சூட்டி நாட்டு மக்களை ஏமாற்றும் அரசாங்கத்தினால் ஜனநாயகத்திற்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ராஜகிரியவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு புலிப்பட்டம் சூட்டும் அரசாங்கம் தற்போது பறக்கும் மீன் திரைப்படக் குழுவிற்கு எதிராக புலிப்பட்டம் சூட்டியுள்ளது.

பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்ட அனைத்து புலி உறுப்பினர்களையும் தம்முடன் வைத்துக் கொண்டு ஏனையோர்களுக்கு புலி முத்திரை குத்தும் அரசின் செயற்பாடு வேடிக்கையானதாகும்.

இந்நிலையில் அத்திரைப்பட குழுவிற்கு புலம்பெயர் தமிழர்கள்தான் நிதியுதவி வழங்கியதாகவும் இதன் பின் புலத்தில் புலி ஆதரவுகள் இருப்பதாகவும் அரசாங்கம் கூறுகின்றது.

அத்துடன் திரைப்படத்தின் இயக்குநரான சஞ்ஜீவ் புஷ்பகுமாரவிற்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

திரைப்படத்தைதடைசெய்யதிரைப்படக் கூட்டுத்தாபனமும் திரைப்பட தணிக்கை குழுவும் இருக்கையில் பாதுகாப்பு செயலர் இது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வது அநாகரிகமான செயலாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் யாழ்.மேல்நீதிமன்றால் நிராகரிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உறுப்பினராக இருந்து இலங்கை கடற்படையினருக்கு எதிராக தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதானவரின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை யாழ். மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஆனி மாதம் 15 ஆம் திகதி இராணுவத்தினரால் முள்ளிவாய்க்காலில் வைத்து தமிழரசன் என அழைக்கப்படும் சாகரப்பிள்ளை பிரபாகரன் (வயது 30) என்பவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இவர் பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டதன் பின்னர் இவரால் வழங்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை ஒருசான்றாக வைத்து யாழ். மேல் நீதிமன்றில் கடந்த மார்ச் மாதம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்பான விசாரணை இடம்பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிறேம்சங்கர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேக நபர் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி மு.றெமீடியஸ் குறித்த நபரால் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சுயமாக அவரினால் வழங்கப்படவில்லை எனவும் கட்டாயப்படுத்தப்பட்டே வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளது எனவும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இந்நிலையில் விசாரணை செய்த நீதிபதி குறித்த நபரால் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்ற குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் உரிய சட்டங்களுக்கு ஏற்ப பதிவு செய்யப்படவில்லை என கூறி, குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்தார்.

இவருக்கு எதிராக வேறு ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் உள்ளனவா என்பதை பரிசீலிப்பதற்காக குறித்த வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 07 ஆம் திகதி மீண்டும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (அ-4)

# முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலைய அனுசரணையில் யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்துடன் இணைந்து செயற்படும் ஞானக் குழந்தை இல்ல அறிவொளி முன்பள்ளி விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.வண்.ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அறிவொளி சனசமூக நிலைய தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் இடம் பெறும் இவ் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பாலர் கல்விக் கழகத் தலைவர் திருமதி எஸ்.பி.காசிநாதன், யாழ். மாநகரசபையின் பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் ச.லோகசிவம், ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாலய அதிபர் திருமதி புஸ்பவதி சண்முகராசா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஜே/88 பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.மதிவதனா, புதியசோனக தெரு ஜே/88 பிரிவு கிராம அலுவலர் பஞ்சலோகரஞ்சன், ஜே/103 பிரிவு கிராம அலுவலர் ந.தவநேசன், யா.கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் இ.சந்திரதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்க மாதாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சங்கச் செயலாளர் ந.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (அ-5)

# திருமுறை பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தி ஸ்ரீஞானவைரவர் தேவஸ்தான பரிபாலன சபையின் அனுரசணையுடன் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் நடத்தப்படும் திருமுறைப் பெருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 7மணிக்கு வைரவர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் தேவாரப் பண்ணிசை, கௌரவிப்பு, சொற்பொழிவு என்பன நடைபெறவுள்ளன. (அ-5)

# அவுஸி.வரும் அகதிகள் குறித்து இறுக்கமான தீர்வுத்திட்டம்

## ஆஸி. பிரதமர் விரைவில் அறிவிப்பார்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை உள்ளிட்ட நாடுகளின் அகதிகளுக்கு எதிராக அடுத்த வாரம் அவுஸ்திரேலியாவின் பிரதமர் கெவின்ரூட் இறுக்கமான சட்டதிட்டம் ஒன்றை அமுலாக்குவார்என அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமது ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்தும் வகையில், அவர் இந்தத் தீர்வினை அறிவிப்பார் என்று அவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

கெவின் ரூட் மற்றும் ஜுலியா கிளார்ட் தலைமையிலான தொழில் கட்சியினால் கடந்த பல வருடங்களாக இலங்கை உள்ளிட்ட நாடுகளின் அகதிகள் குறித்த விவகாரம் தீர்க்கப்படாமலே இருந்து வருகிறது. இந்த பிரச்சினைக்கு சரியான தீர்வுகள் எதனையும் யாரும் இது வரையில் முன்வைக்கவில்லை.



இந் நிலையில் கடந்த சில மாதங்களில் ஈரானில் இருந்து வருகின்ற அகதிகளின் எண்ணிக்கை இரட்டிப்பு அதிகரிப்பை காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது. இது தற்போது அரசாங்கத்துக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இந் நிலையில் பிரதமர் பொறுப்பை மீண்டும் பொறுப்பேற்றுள்ள கெவின் ரூட், இந்த விடயம் குறித்து அடுத்த வாரம் இறுக்கமான தீர்வு ஒன்றை அறிவிக்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வருட ஆரம்பத்தில் இருந்து இதுவரை சுமார் 5 ஆயிரம் சட்ட விரோத குடியேறிகள் அவுஸ்திரேலியா பயணித்துள்ளனர். இலங்கை, ஈரான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து ஏராளமான சட்டவிரோத குடியேறிகள் அவுஸ்திரேலியா நோக்கி செல்கின்றனர்.

அவர்களில் ஈரான் பிரஜைகளே அதிகமாக இருப்பதாக அவுஸ்திரேலியா நிர்வாகம் தெரிவித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லி மலை




## ஆன்மீகம் 65

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

இது வரலாறுகளில் இடம் பிடித்த புகழ் வாய்ந்த இடம், சங்க இலக்கியத்திலும் இது பற்றிய பாடல்கள் காணப்படுகின்றன! கடை ஏழு வள்ளல்களில் ஒருவனான வல்வில் ஓரி ஆண்ட அற்புதமான மலை! இந்த மலையைப்போலவே இங்கு வீற்றிருக்கும் புராதன தெய்வம், கொல்லியம் பாவை என்று இலக்கியங்களில் புகழப்படும் கொல்லிமலை பாவையாகும்! இம் மலை அடிவாரத்தில் சிறப்பு பெற்றசெல்லி அம்மன் கோவில் இருக்கிறது. இக் கோவிலுக்கு சென்று வணங்கிய பின் மலை மேல் ஏறத்துவங்கினால் சில மணி நேரங்களில் இதன் சிகரத்தை அடைய முடியுமாம். ஆனால், நாங்கள் சென்றது வெறும் மலையேற்றத்திற் கல்லவா! மூலிகை தேடிச் செல்பவர்கள், இராணுவம் போல் நிறைந்தது எங்கள் இயக்கமாகும். இராணுவத் தளபதி போல் அவர் செல்வார்! அவரைப் பின் தொடர்ந்து நாங்கள் செல்வோம். அதோடு அடர்ந்த காடுகளும், பற்றைகளும், செங்குத்தான ஏற்றங்களும் சற்று அபாயமான சரிவுகளும், கரணம் தப்பினால் மரணம் என இதையும் தாண்டி அங்கு உலாவும், கொடிய மிருகங்களும் நிறைந்த காடாகும்.

ஒரு தாயைப் போல எங்களை ஆசானே அன்னையாக அரவணைத்து போற்றி பாதுகாத்து அழைத்து செல்வர். அப்போது சங்குநாதம் ஒலிக்கக் கட்டளை இடுவார். எப்



போதும் சங்கு ஊதும் பொறுப்பை நானே வேண்டிப் பெற்றேன்! நானும் அவ்வப்போது உற்சாகமாக சங்கு ஊதுவேன். ஏன் இப்படி அடிக்கடி சங்கொலிக்க ஆணையிடுகிறார் சித்தர் பெருமான்? என்று எனக்குப் புரியவில்லை. இதற்கு மலைமேல் தங்கியிருந்த போது விளக்கம் பெரும் வாய்ப்பாக கிடைத்தது! அது மிருகங்களுக்காக, மிருகங்களும் அருகாமை உணர்ந்து தான் அப்படி சங்கொலிக்க சொல்வேன்! அவ்வொலி கேட்டால் மிருகங்கள் விலகிச் சென்றுவிடும்- அதோடு சங்கின் ஒலி தெய்வீக ஒலியல்லவா அது ஓங்காரத்தை ஒலிப்பதால், மிருகங்கள் அதற்கு பணிந்து விலகிச் செல்கின்றன! சங்கினில் காது வைத்து கேட்டால்-ஓம் எனும் பிரணவ ஒலி ஒலிப்பதை எவரும் கேட்கலாம். அதுமட்டு மல்ல சங்கு சத்தம் கேட்டதும் தேவர்கள் வருகிறார்கள். அவர்கள் போகும் பாதையில் நாம் குறுக்கிடக் கூடாது என்று மற்ற மிருகங்கள் ஒதுங்கி மறைந்து கொள்ளும். சித்த புருஷர்கள் யாராவது தவத்தில் இருந்தால் ஒலி கேட்டதும் யார் ஊதுகிறார்கள் என்று சிந்தித்தாலே போதும், நமது தோஷம் நிவர்த்தி ஆகி நமக்கு வேண்டிய உதவிகளை செய்வார்கள் என்றார்.

இந்த விளக்கத்தை கேட்ட பின் சங்கு ஊதுவதை தெய்வீகப்பணியாக மேற்கொண்டேன். பின் நாட்களில் இது போன்ற மலை பயணங்களில் நான் சங்கை பலமாக ஒலிப்பேன். இதை விந்தையாக நோக்கிய சித்தர் அவர்கள் ஒரு சமயம் உடன் வந்தவர்களைப் பார்த்து- பாருங்கள், சேரன், செங்குட்டுவன் வெற்றிச் சங்கு ஊதுவதைப் பாருங்கள் என்றார்! நான் குழம்பிப்போனேன், சாமி ஒருவேளை என்னனைக் கேலி செய்கிறாரோ? என்ற எண்ணம் என்னுள் எழுந்தது! சமயம் வந்தபோது இதை சித்தர் பெருமானிடமே கேட்டேன்.

இது கேட்டுச் சிரித்தவர்- கேலி செய்தேனா? இது இப்போது உனக்கு புரியாது! புரியும் காலத்தில் புரிந்து கொள்வாய் என்றார். நான் தவறாக கேட்டு இருந்தால் என்னை மன்னித்து விடுங்கள் என்றேன், இதில் மன்னிக்க என்ன இருக்கிறது. மனதில் பட்டதை கேட்டீர்கள் காலம் உங்களுக்கு விடையளிக்கும். பொறுமையாக இருங்கள் என்று கூறினார்கள். இதை கேட்டு எனக்கு சிறு வயது விடயங்கள் நினைவிற்கு வந்தது. நிம்மதியடைந்தேன். அப்போது பத்து வயதில் ஒரு குச்சியை எடுத்து கத்திச் சண்டை போடுவது போல் நான் ஒரு போர்வீரன் போல், இருக்கின்ற செடி கொடிகளை வாயிலில் ரிகார்டிங் கொடுத்து கொண்டே செடிகளின் தலைகளை வெட்டிவிடுவேன். ஏதோ அரசர் போருக்கு போய் ஜெயித்தது போல் எனக்கு நினைவுகள் அசை போடும். அதே போல் தான் அசோகச் சக்கரவர்த்தி கதையை படிக்கும் போது தூங்கிவிடுவேன். நானும் அசோகர் போல் குதிரையில் போவது போல் கனவு வரும். இதெல்லாம் பூர்வீக வாசனை என்று சித்தர்,சேரன், செங்குட்டுவனை சொன்னதும் என் எண்ணம் அதே எண்ணமாகியது.

தொடரும்

# இலங்கையில் புத்தரின் வருகைக்கு முன்னர் வாழ்ந்த- இயக்கர், நாகர், தேவர் ஆகிய பழங்குடி மக்கள்

## பாகம் 04


இரண்டாம் நூற்றாண்டில் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட திவ்வியவதன என்ற பௌத்தநூல் இலங்கையை தம்பபாணி எனக் குறிப்பிடுகிறது. அந்த நூல் வணிகன் ஒருவனது மகன் இலங்கையில் இயக்கிகளைக் கண்டதாகக் குறிப்பிடுகிறது. மேற்குறிப்பிட்ட கதைகள் விஜயன் - குவேனி கதைக்கு வித்திட்டிருக்கலாம் என வரலாற்று ஆசிரியர் ஜி.சி. மெண்டிஸ், தான் எழுதிய த ஏளி ஹிஸ்ரி ஒவ் சிலோன் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

இராமாயணத்தில் இலங்கை லங்காதுபீபம் என அழைக்கப்பட்டது. தீப என்றால் தீவு என்று பொருள். சாவகர் (javanese)அலன்கோ என்று அழைத்தார்கள். இதன்பொருள் இராவணனது இராச்சியம் என்பதாகும். மகா அலெக்சான்டர் காலத்தில் இலங்கை தப்பிரப்பேன் (tambaparani) என அழைக்கப்பட்டது. பின்னர் தம்பபன்னி என்று அழைத்தார்கள். தம்பபன்னி என்பது தாமரபரணி என்பதன் சிதைவாகும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த "தொலமிச லைய்" என மக்களையும் சலிகா என நாட்டையும் குறிப்பிட்டார். அரேபியர் செறன்டிப் என அழைத்தனர்.

பழந்தமிழ் இலக்கியங்களில் இலங்கை ஈழம் என அழைக்கப்பட்டது. "ஈழத்துணவு, ஈழத்துப் பூதன் தேவனார்" போன்ற சொற்கள் இலங்கைத்தீவின் தொடர்புகளைக் காட்டி நிற்கின்றன. மதுரை ஈழத்துப் பூதன்தேவனார் பாடிய ஏழு படல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய சங்க நூல்களில் காணப்படுகின்றன. தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள கடற்பகுதி, அன்று நிலப்பகுதியாக இருந்த காலத்தில், அந்த நிலத்தை ஊடறுத்து இலங்கையில் உள்ள புத்தளம் வரை தமிழகத்திலும் தாமிரபரணி ஆறு பாய்ந்திருக்க வேண்டும்.

இலங்கையில் விஜயன் வந்திறங்கியதாகக் கூறப்படும் புத்தயத்திற்கருகே உள்ள பகுதிதான் தப்பரபேன் என்று பல வரலாற்றறிஞர்கள் கருதுகிறார்கள். விஜயன் இலங்கையில் தப்ரபனே என்று பல வராலாற்றறிஞர்கள் கருதுகிறார்கள். விஜயன் இலங்கையில் வந்திறங்கிய இடம் தம்பபாணி என்ற மகாவம்சம் கூறுகின்றது.

இலங்கை தமிழர்களின் பூர்விகம் தாயகம் என்பதை மகாவம்சம் மறைக்க முயன்றாலும் வரலாற்றுச் சான்றுகளும் பழந்தமிழ் இலக்கியங்களும் அதனை மறுக்கின்றன. இராமாயணம், இலங்கை, இயக்கர் வாழ்ந்த நாடு என்றும் அதனை இராவணன் ஆண்டான் என்றும் செப்புகிறது. மகாவம்சத்தில் பதினைந் ›Vkm ¶Ý].BVB\V! "மகா விகாரை" யிலும், "புத்தர் வருகை" எனும் முதல் [illegible] இலங்கைக்கு [illegible] வருகைகள் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.



முதல் வருகையின் போது மகாநாக வனத்தில் (மஹியங்கனாவில்) வாழ்ந்த இயக்கர்களை (யக்கர்கள்) அங்கிருந்து விரட்டுவதற்காக சென்றார் எனவும் இரண்டாவது விஜயத்தின் போது, நாகவம்ச அரசர்களான மகோதரனுக்கும், குலோதரனுக்கும் இடையில் மூண்ட போரைத் தீர்த்துவைப்பதற்காக நாகதீபத்திற்குச் சென்றாரெனவும்( நாகர்களை அடக்கினார் எனவும்) மூன்றாவது வருகையின் போது, நாக மன்னன் மணியக்கியன் அழைப்பின் பேரில் கல்யாணி நாட்டிற்குச் சென்றார் எனவும் கூறப்பட்டுள்ளது.

மகாவம்சம் புத்தர் வருகை எனும் முதல் அத்தியாயத்தில் மகாதேசத்தில் [illegible] எனும் இடத்திலுள்ள அரச மரத்தின் அடியில் ஒரு வைகாசி மாதத்துப் பௌர்ணமி நாளில் கவுதம புத்தர் (கிமு560- 480) அமர்ந்திருக்கின்றார். அப்போது அவருக்குச் சில நிகழ்ச்சிகள் புலனாகின்றன.

அவர் ஞானமடைந்த ஒன்பதாவது மாத்தில் பூச நட்சத்திரத்திம் பௌர்ணமியன்று இலங்கையைப் புனிதப்படுத்தும் நோக்கோடு புத்தர் புறப்பட்டார்.

புத்தரின் முதலாவது வருகை பற்றிய கதை

தமது மார்க்கம் பிற்காலத்தில் போற்றிப் புகழுடன் திகழப்போகும் இடம் இலங்கை என்பது அவருக்கு அப்போதே தெரிந்திருந்தது. அப்போது இலங்கையில் இயக்கர்கள் நிரம்பியிருந்தனர் அவர்களை அங்கிருந்து முதலில் விரட்டவேண்டும் என்பது அவருக்குத் தெரியும். இலங்கையின் மத்தியில் அழகிய நதிக்கரையில் இயக்கர்கள் வழக்கமாக ஒன்றுகூடும் இடம் உள்ளது என்பதும் அவருக்குத் தெரியும் . ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு நதியின் அருகே உள்ள மகாநாகவனம் இயக்கர்களது ஒன்றுகூடல் இடமாக இருந்தது. இயக்கர்கள் அந்த இடத்தில் கூடியிருந்தனர்.

நக்கீரன்

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்னபூரணியும் பக்தர்களும்



தேவிபுரம் எனும் கிராமத்தில், சிவதாசர் என்ற ஜமீன்தார் வசித்து வந்தார். அன்னதானத்தில் மிகவும் நம்பிக்கை கொண்டிருந்த அவர், தன் வீட்டை நாடி யார் வந்தாலும் அவர்களுக்கு வயிராற உணவு அளித்தார். ஒரு நாள் இரவினில், ஒரு கிழவி அவர் வீடு தேடி வந்தாள். ஜமீன்தார் அவளை மரியாதையுடன் வரவேற்றார். "என்னப்பா சிவதாசா? ஊருக்கெல்லாம் அன்னதானம் செய்கிறாயே! எனக்கு ஏதாவது தருவாயா?" என்று கேட்டாள்.

"உங்களுக்கில்லாமலா? வந்து அமருங்கள்!" என்று சிவதாசர் சொன்னதும், "நான் உன்வீட்டில் உணவருந்த வேண்டுமென்றால், ஒரு நிபந்தனை" என்றாள் அவள். "என்ன நிபந்தனை பாட்டி?" என்று சிவதாசர் கேட்க. "நான் மிகவும் சிரமப்படுகிறேன். என்னுடைய துன்பங்களையெல்லாம் நீ எடுத்துக் கொள்வதாக வாக்களித்தால் தான், உன் வீட்டில் சாப்பிடுவேன்!" என்றாள். "இந்த நிமிடமே, உன்னிடம் உள்ள துன்பங்கள் அனைத்தையும் என்மீது எடுத்துக்கொள்கிறேன்! சாப்பிட வாருங்கள்!" என்றார் சிவ

**அம்புலிமாமா கதைகள்**

தாசர். "எனக்கு மிகவும் பசியாயிருக்கிறது. ஆயிரக்கணக்கான மக்கள் சாப்பிடும் உணவுஎனக்கு ஒரேநாளில் இப்போதே தேவை! நீ போய் உணவு எடுத்துவா! நான் உள்ளே வரமாட்டேன்! இதோ இங்கேயே, உன் வீட்டுத் தோட்டத்தில் அமர்ந்து கொள்கிறேன்" என்றாள். "சரி பாட்டி!" என்று சிவதாசர் உள்ளே சென்றார். "சொல்ல மறந்து விட்டேன்! எனக்கு கம்பு அடை (கம்பு-தானியவகையில் தயார் செய்யப்பட்ட சிற்றுண்டி) என்றால் மிகவும் பிடிக்கும்."

தன் மனைவியிடம், "கிழவி விரும்புவது கம்பு அடை ஆகையால் நீ சென்று கம்பு அடை தயார் செய்!" என்றார். கம்பு அடை தயாரானதும், சிவதாசர் அதை எடுத்துக் கொண்டு, தோட்டத்தை நோக்கி நடந்தார். ஆனால், கிழவியை அங்கே காணவில்லை. அவள் அமர்ந்திருந்த இடத்தில் அன்னபூரணியின் விக்கிரகம் ஒன்று இருந்தது. சிவதாசரின் மெய்சிலிர்த்துப் போயிற்று. வந்திருந்த சாட்சாத் தேவி அன்னபூரணி என்று உணர்ந்தார். பக்தி பரிவாகத்துடன், "அம்மா, தாயே! அன்னபூரணி! என் வீட்டைத் தேடி நீவர நான் என்ன பாக்கியம் செய்திருக்கிறேன்!" என்று கூறி உணர்ச்சி வசப்பட்டார். அதற்குள் செய்தி கிராமம் எங்கும் பரவிவிட, அந்த இரவு நேரத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் ஜமீன்தார் வீட்டிற்குத் திரண்டுவந்து அன்னபூரணியின் விக்கிரகத்தின் முன் விழுந்து வணங்கினர். மூன்று மாதத்திற்குள் அன்ன



பூரணியின் கோயில் உருவாகியது. கோயிலைக் காணவரும் பக்தர்களை கிராமத்தினர் தங்கள் வீட்டிற்கு அழைத்து, "உங்கள் துன்பங்களை நான் எடுத்துக் கொள்கிறேன்!" என்று கூறிவிட்டு கம்பு அடையைப் படைப்பர். அன்னபூரணிக்கு நிவேதனம் செய்யப்பட்ட அந்த அடை மிகமிக ருசியாயிருப்பது வழக்கம். இந்த செய்தி, ராஜாவின் செவிகளை எட்டியது. உடனே அவர் தன் பிரதான சமையற்காரனை அழைத்து, "தேவிபுரத்து கம்பு அடை மிகமிக ருசியாயிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். நீ அங்கு சென்று அவர்கள் அதை எப்படித் தயாரிக்கின்றார்கள் என்று பார்த்துவா" என்றார். அதற்கு சமையற்காரன், "மகாராஜா! கம்பு அடை சுவையாயிருப்பதன் காரணம் தயாரிப்பதில் இல்லை. விருந்தளிப்பவர்களின் பக்திதான் காரணம்! விருந்தினர்கள் எத்தனை நல்லவர்கள் என்பதையும் அது பொறுத்துள்ளது. ஏனெனில், அதைப்பற்றி நான் நன்கறிவேன்!" என்றான். "அப்படியா? உனக்கு என்ன தெரியும்?" என்று ராஜா கேட்க, அவன் சொல்லத் தொடங்கினான். தேவிபுரத்திற்கு அருகில் இருந்த மங்காபுரம் என்ற கிராமத்தில், சேத்தன் என்ற திருடன் ஒருவன் இருந்தான்.

அவன் திருட்டுத்தொழிலில் ஈடுபட்டிருந்தது அவன் மனைவி கௌரிக்கு சிறிதும் பிடிக்கவில்லை. ஆகையால் திருட்டுத்தொழிலுக்கு முழுக்குப்போட எண்ணினான். ஆனால், நேர்மையாக உழைத்தாற் சொற்ப வருமானம் தான் கிடைக்கும் என்பதால், பெரிய அளவில் ஒருமுறை திருடிவிட்டு, அதில் கிடைக்கும் பணத்தை வைத்து எஞ்சிய நாட்களை சிரமமின்றி கழிக்கலாம் என்று தோன்றியது. தேவிபுரம் ஜமீன்தார் சிவதாசரைப் பற்றிக் கேள்விப்பட்ட அவன், அவர் வீட்டில் ஒருமுறை திருடினால், ஏராளமான பணம் கிடைக்கும் என்று நினைத்து அங்கு சென்றான். தேவிபுரத்தை அடைந்தவுடன் எதிர்ப்பட்ட ஒருதேவிபுர கிராமத்தான் அவனைத் தன் வீட்டில் சாப்பிட அழைத்தான். சேத்தனும் அவனுடன் சென்றான். "உங்களுடைய துன்பங்கள் என்னை வந்து அடையட்டும்! நீங்கள் நலமாக இருப்பீர்கள்!" என்று அவன் வாழ்த்தியபிறகு, சேத்தனுக்கு இலையில் அடை பரிமாறினான். ஆனால், ஜமீன்தார் வீட்டில் திருடுவதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்த சேத்தனுக்கு அடை சுவையாகவே இல்லை. விருந்தளித்தவனுக்கு நன்றி கூறிவிட்டு, இரவு நேரத்தில் ஜமீன்தார் மாளிகையை அடைந்தான். ஆனால், அங்கு திருட முயற்சிக்கையில் சேத்தன் பிடிபட, அவனை வேலைக்காரர்கள் அடித்துதுவைத்தனர். சிவதாசர் குறுக்கிட்டு அவனை மன்னித்து அனுப்பினார். வீட்டையடைந்த சேத்தனின் அலங்கோல நிலையைக் க்ண்டு கௌரி கோபத்துடன், "நீ திருந்தவே மாட்டாயா? நல்ல வேளை உன்னை இத்துடன் விட்டு விட்டனர்! இனி மேலாவது திருட்டுத் தொழிலை விடு! உனக்காக நான் இன்று தேவிபுரம் சென்றிருந்தேன். அன்னபூரணியை உனக்கு நல்ல புத்தியை தரும்படி வேண்டிக்கொண்டு,



எனக்கு அன்னதானம், அளித்த வீட்டில் உனக்காக அடைகேட்டு வந்தேன். இனித் திருடமாட்டேன் என்று உறுதி கூறிவிட்டு, இதை சாப்பிடு!" என்றாள். அதை சாப்பிட்ட சேத்தன், "ஆகா! நீ கொடுத்தது மிக சுவையாக இருக்கிறது.

ஆனால், இன்று காலை எனக்கு ஒரு வீட்டில் கிடைத்த அடை சுத்த மோசம்!" என்றான். "என்ன நீயும் இன்று தேவிபுரம் சென்றிருந்தாயா?" என்று ஆச்சரியத்துடன் கேட்ட கௌரி, "அன்னபூரணியை தரிசித்துவிட்டு, பிரசாதமும் உண்ட பிறகும் உன் திருட்டு புத்தியை விடவில்லையா? திருடுவதற்காகவா அங்கு சென்றாய்?" என்றாள். "என்னை மன்னித்துவிடு கௌரி! இனி நான் திருடவே மாட்டேன்! இது சத்தியம்!" என்றான் சேத்தன்.

"அதிருக்கட்டும்! தேவிபுரத்தில் யார் வீட்டில் சாப்பிட்டாலும் அடை பிரமாதமாக இருக்கும் என்பார்களே! அப்படியானால், நான் இன்று சாப்பிட்ட வீட்டில் ஏன் மோசமாக இருந்தது!" என்று கேட்டான். "தவறு அடைசெய்ததில் இல்லை! உன் மீது தான் இருந்திருக்கும்! உன்னுடைய துன்பங்களை எனதாக்கிக் கொள்கிறேன்!" என்று நல்லமனத்துடன் வாழ்த்தும் ஒருவர் வீட்டில் அளித்த பிரசாதத்தை சாப்பிட்டுக்கொண்டே நீ திருடுவதைப் பற்றி யோசித்திருக்கிறாய். அதனால்தான் அது ருசிக்கவில்லை. இப்போது திருடமாட்டேன் என்று சத்தியம் செய்ததால்,அடை சுவையாக இருக்கிறது" என்றாள் கௌரி. அன்று முதல் சேத்தன் திருட்டுத் தொழிலை விட்டுவிட்டான். மற்றபடி அவனுக்குத் தெரிந்த ஒரே தொழிலான சமையலில் முழுமனத்துடன் ஈடுபட்டான். தனது திறமையினாலும், உழைப்பினாலும் படிப்படியாக முன்னேறிய அவனுக்கு அரண்மனையிலேயே வேலை கிடைத்து விட்டது. இந்த இடத்தில் கதையை நிறுத்திய சமையற்காரன், "மகாராஜா! அந்த சேத்தன் நான் தான்!" என்றதும், மன்னர் அன்புடன் அளிக்கப்படும் அன்னதானத்தின் மகிமையை உணர்ந்தார். சில நாட்கள் கழித்து, மன்னர் தன் குடும்பத்துடன் தேவிபுரம் கோயிலுக்குச் சென்று அன்னபூரணியை வழிபட்டார். அவரை ஒரு விவசாயி அன்புடன் விருந்துண்ண அழைக்க, மன்னரும் அவன் வீட்டிற்குச் சென்றார். விவசாயி அடை படைத்தவுடன், "என் நாட்டு மக்கள் நலமாக இருக்க வேண்டும். வந்தாருக்கு வயிராற அன்புடன் உணவளிக்கும் தேவிபுரம் செழித்தோங்கவேண்டும்" என்று பிரார்த்தனை செய்து கொண்டே அடையை சுவைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

# 17.07.2013-16.08.2013



## கும்பம்

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**பிறர்போற்றும் வாழ்க்கையை அமைக்க விரும்பும் கும்ப இராசிநேயர்களே! குருவின் பார்வையால் குழப்பங்கள் அகலும்!**

## குருவின் பார்வையால் குழப்பங்கள் அகலும் அனுகூலத் தகவல்கள் வீடு வந்துசேரும்

ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சனி வக்ர நிவர்த்தியாகி ஒன்பதாம் இடத்தில் ராகுவுடன் இணைந்து சஞ்சரிக்கின்றார். மிதுன குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. தன லாபாதிபதியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் தனவரவு தாராளமாக வந்து சேரும். மனதளவில் செய்ய நினைத்திருந்த காரியத்தை மறுநிமிடமே செய்து முடிப்பீர்கள்.

குரு மங்கல யோகத்தின் அடிப்படையில் இல்லத்தில் சுபகாரியப்பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைத்து சேமிப்பை சொத்துக்களாகவோ, விலை உயர்ந்த பொருட்களாகவோ மாற்றி அமைத்துக் கொள்வீர்கள். கேது மூன்றில் இருப்பதால் சகோதரர்களை அனுசரித்துச்செல்வது நல்லது. உடன்பிறப்புகள் வழியில் பூர்வீக சொத்து சம்பந்தமாக எடுத்த முடிவில் மாற்றம் ஏற்படலாம்.

உச்சம் பெற்ற சனியை குரு பார்ப்பதால் பாகப் பிரிவினைகள் சுமூகமாக முடியும். பிள்ளைகள் வழியில் கல்வி நலன்கருதி எடுத்த முயற்சிகளும் கைகூடும். திடீர் தனலாபங்கள் வரும். வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

சனிக்கிழமை தோறும் சனீஸ்வரர் வழிபாடும், ஆஞ்சநேயர் வழிபாடும் முறையாக செய்து வருவதோடு வியாழக்கிழமை தோறும் தென்முகக் கடவுள் வழிபாட்டை திருப்திகரமாக செய்து வந்தால் நன்மைகளை மட்டுமே வரவழைத்துக்கொள்ள இயலும்.

**சிம்ம சுக்ரனும் கன்னி சுக்ரனும்**

ஜுலை 18 ஆம் திகதி சிம்ம இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். 4,9 க்கு அதிபதி ஏழில் சஞ்சரிக்கும் பொழுது குடும்ப உறவு திருப்திகரமாக இருக்கும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். அயல்நாட்டிலிருந்து அனுகூலத் தகவல் வந்துசேரும்.

ஆகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி இராசியில் நீச்சம் பெறப்போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. சுகாதிபதி நீச்சம் பெறும்பொழுது ஆரோக்கியத்தில் பாதிப்புகள் ஏற்படலாம். வீண் விரயங்கள் அதிகரிக்கும். நகைகளை அடகு வைத்து பணம் புரட்டும் சூழ்நிலைகூட ஒரு சிலருக்கு உருவாகலாம். பெற்றோர் வழி யில் அனுசரித்துச் செல்வது நல்லது.

**கடக புதனும் சிம்ம புதனும்**

ஜுலை 30 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் ஆறில் சஞ்சரிக்கும் பொழுது உத்தியோகத்தில் மாற்றங்கள் ஏற்படலாம். ஊர்மாற்றச் சிந்தனை மேலோங்கலாம். குழந்தைகளின் வழியே விரயங்கள் ஏற்படலாம். கொடுக்கல்- வாங்கல்களிலும் ஒருசில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடலாம். அரசு வழிச்சலுகைகள் பெறுவதில் தாமதம் ஏற்படலாம்.

ஆகஸ்ட் 16 ஆம் திகதி சிம்ம இராசியில் புதன் சஞ்சரிக்கும்பொழுது பிள்ளைகளின் கல்யாண வாய்ப்பு கருதியோ, கடல் தாண்டும் முயற்சியை முன்னிட்டோ செய்யும் செயற்பாடுகளில் வெற்றி கிட்டும். தொழில் வளர்ச்சி சீராக இருக்கும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து லாபத்தைப் பெருக்கிக் கொடுப்பர்.

கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் அனுசரிப்பால் பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும். வெளிவட்டார பழக்க வழக்கம் விரிவடையும். என்றைக்கோ கைமாற்றாக கொடுத்த தொகை இப்பொழுது வந்து மகிழ்ச்சியை வழங்கும். இம் மாதம் ஆதியந்த பிரபு வழிபாடு ஆனந்தம் வழங்கும்.


**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் மாதமாக கருதலாம். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வசதி வாய்ப்புகள் பெருகும். பிள்ளைகள் உங்கள் சொல் கேட்டு நடக்க முன்வருவர். பொதுநல ஈடுபாடு கொண்டவர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரும். கணவன்- மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். தங்கம், வெள்ளி போன்றவைகளை வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள். துர்க்கை வழிபாடு துயரங்களைப் போக்கும்.

## சிவல்புரி சிங்காரம்

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**சவால்களைச் சமாளிக்கும் ஆற்றல் பெற்ற மீன இராசி நேயர்களே! அஷ்டமத்தில் சனியின் ஆதிக்கம், அலைச்சலால் வந்திடும் ஆதாயம்!**



## மீனம்

## அஷ்டமத்தில் சனியின் ஆதிக்கம் அலைச்சலால் வந்திடும் ஆதாயம்!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் குரு, புதன், செவ்வாய் மூவரும் கூடிச் சஞ்சரிக்கிறார்கள். எனவே, ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயம் கிட்டும். உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கவில்லையே என்று ஒவ்வொரு நாளும் சொல்லிக் கொண்டிருந்த உங்களுக்கு இப்பொழுது நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரப்போகிறது.

ஆறுக்கு அதிபதி சூரியன் ஐந்தில் சஞ்சரிப்பதால் பிள்ளைகள் வழியில் ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். பூர்வீக சொத்து சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் இருந்த தடைகள் அகலும். அரசியல்வாதிகளின் ஒத்துழைப்போடு ஒருசில காரியங்களை முடித்துக் கொள்வீர்கள். வாக்குஸ்தானத்தில் கேது இருப்பது அவ்வளவு நல்லதல்ல.

அஷ்டமத்து சனியை குரு பார்ப்பதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி விடும். குற்றம் பார்க்கின் சுற்றமில்லை என்பார்கள். எனவே, மற்றவர்கள் செய்யும் குற்றத்தை எடைபோட்டுப் பார்த்துக்கொண்டிருக்காமல் அனுசரித்துச் செல்வதே நல்லது. பழைய பங்குதாரர்கள் விலகி, புதிய பங்குதாரர்கள் வந்திணையலாம். உத்தியோக மாற்றம், இலாகா மாற்றங்களாகக் கூட மாறலாம். அருகில் இருக்கும் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.

சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனி பகவானை வழிபட்டு வருவது நல்லது. அது மட்டுமல்லாமல் சிறப்பு ஸ்தலங்களுக்கும் சென்று சனிக்கு எள்தீபம் ஏற்றி வழிபாடு செய்து வந்தால் எண்ணங்கள் நிறைவேறுவதில் இருந்த இடையூறுகள் அகலும்.

**சிம்ம சுக்ரனும் கன்னி சுக்ரனும்**

ஜுலை 18 ஆம் திகதி சிம்ம இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இதன்விளைவாக நற்பலன்கள் உங்களுக்கு வந்துசேரும். 3,8 க்கு அதிபதி ஆறில் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில் பலன்கள் சேரும். நடக்குமோ, நடக்காதோ என்று சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்த காரியம் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். பொன், பொருள் சேர்க்கைக்கும் அஸ்திபாரமிடுவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

ஆகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக மேலும் நற்பலன்கள் உங்களுக்கு வந்து சேரும். காரணம் அஷ்டமாதிபதி நீச்சம் பெறுகிறார். எனவே, இழப்புகளை ஈடு செய்ய வாய்ப்புகள் கைகூடி வரும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வருவீர்கள்.

**கடக புதனும் சிம்ம புதனும்**

ஜுலை 30 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். 4,7 க்கு அதிபதி ஐந்தில் சஞ்சரிப்பது நன்மைதான். வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இடமாற்றங்கள் இனிய மாற்றங்களாக அமையும். கடன் சுமை எப்படி குறைந்தது என்று நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்.

ஆகஸ்ட் 16 ஆம் திகதி சிம்ம இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். 4,7 க்கு அதிபதி ஆறில் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். வீடு, மனை வாங்க போட்ட திட்டங்கள் நிறைவேறும். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்பு மாறும். தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது. இம்மாதம் குருவழிபாடும் அனுமன் வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**


இம்மாதம் சென்ற மாதத்தைக் காட்டிலும் சிறப்பான மாதமாகவே கருதலாம். வாழ்க்கைத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். மற்றவர்களுடைய பணம் உங்களுடைய கைகளிலேயே புரண்டு கொண்டிருக்கும். வீடு வாங்க அல்லது கட்ட எடுத்த முயற்சிக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். கணவன்- மனைவிக்குள் பாசம் பொங்கும். நேசம் கூடும். சேமிப்புச் சீட்டுக்களில் பரிசு கிடைக்கும் வாய்ப்பு உண்டு. சனி பகவானுக்கு இராகு கேதுக் களுக்கு பரிகாரம் செய்வது சகல யோகங்களையும் வழங்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவில் விரிவடைந்துவரும் கடல் பாதுகாப்பு ஒப்பந்தங்கள்

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இலங்கை விஜயமும், அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் புதுடெல்லிப் பயணமும், அரசியல் தளத்தில் பல உரையாடல்களை ஏற்படுத்தியுள்ளது. 13 -வது திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வரும் வகையில், தென்னிலங்கையில் உருவாகும் கடுமையான நிலைப்பாடு குறித்து, இருவரும் விவாதித்துள்ளார்கள்.



வடமாகாணசபைத் தேர்தலுக்கு முன்பாக, 13-வது அரசியல் திருத்தச் சட்டத்தில், திருத்தங்கள் கொண்டு வரப்படுவதை இந்தியா விரும்பவில்லை என்கின்ற செய்தி பசில் ராஜபக்ஷவிடம் கூறப்பட்டுள்ளது. அவ்வாறான நடவடிக்கை, இந்தியத் தரப்பிற்கு சிக்கலை ஏற்படுத்தலாம் என்பதால், இந்த விடயத்தில் இந்தியாவானது கடுமையான நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளது போலொரு தோற்றப்பாடு காண்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டாத பசில் ராஜபக்ஷ, வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்சித்துடன் மட்டும் உரையாடிய விவகாரம், 13- இல் மாற்றம் கொண்டுவரும் இலங்கை அரசின் நிலைப்பாடு குறித்து, இந்தியா அதிருப்தி கொண்டுள்ளது என்பதைனை உணர்த்துவதாக அமையாது.




இருப்பினும், மக்களோடு உரையாடி, சரியானதொரு முடிவினை எடுப்போம் என்று இந்தியத் தரப்பிற்கு பசில் ராஜபக்ஷ அளித்த விளக்கத்தின் மறுபக்கத்தில், 13-வது திருத்தச் சட்டம் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தும் திட்டம், அரசிற்கு இருப்பதை உணர்த்துவது போலுள்ளது.

அதேவேளை, பசில் ராஜபக்ஷவின் பயணத்தின் பின்னர் இலங்கைக்கு வருகைதந்த சிவ்சங்கர் மேனன், கூட்டமைப்பு, முஸ்லீம் காங்கிரஸ் போன்ற வட-கிழக்கு மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளோடு 13 குறித்து பேசியுள்ளார்.

அத்தோடு ஜனாதிபதியுடன் அவர் உரையாடியபோது, காணி காவல் துறை அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவது தொடர்பான விடயம் முக்கியத்துவம் பெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அங்கும், இது குறித்து விவாதிப்பதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழுவே சிறந்த பொறிமுறை என்கிற நிலைப்பாட்டில் ஜனாதிபதி உறுதியாக இருந்துள்ளார்.

இவை தவிர, தெரிவுக்குழுவிற்குள் செல்லுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்கிற ஆலோசனையையும் மேனனிடம் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எப்படியாவது கூட்டமைப்பை, நாடாளுமன்ற தெரிவுக்குழிக்குள் வீழ்த்திவிட வேண்டுமென்பதில், ஆளும் தரப்பு தீவிரமாகத்தானிருக்கிறது. தீர்வு குறித்த விவகாரத்தினை இழுத்தடிப்பதற்கு, தெரிவுக்குழு தேவையானதொன்றாக இருப்பதை இது உணர்த்தும்.

கொழும்பு பயணத்தின் நிகழ்ச்சி நிரலில், இந்திய- இலங்கை ஒப்பந்தத்திலுள்ள 13-வது திருத்தம் தொடர்பாகப் பேசப்படும் என்று ஊடகப் பரப்பில் பெரிதாகப் பேசப்பட்டாலும், கடல்சார் பாதுகாப்பு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்ப்ட்ட விவகாரத்தை இரண்டாம் நிலைக்குத் தள்ளிவிட முடியாது. ஏனெனில் மேனனின் பயணத்தின் முக்கிய அம்சமே அதுதான்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில், இந்தியாவைச் சூழவுள்ள நாடுகளில், தனது பொருண்மிய ஆதிக்கத்தின் ஊடாக காலூன்றும் சீனாவின் தந்திரோபாய நகர்வுகள் குறித்து, இந்தியா கவலையடைவதை பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

சீனாவுடனான இருதரப்பு வர்த்தகத்தை 100பில்லியன் டொலர்களாக உயர்த்தினாலும், தனது பிராந்திய மேலாதிக்கத்தையும், தேசிய பாதுகாப்பினையும் எவருக்கும் விட்டுக் கொடுக்க இந்தியா உடன்படாது என்பதுதான் யதார்த்தம்.

அந்த வகையில், இலங்கை மற்றும் மாலைதீவோடு இணைந்து இந்தியா, மேற்கொண்ட கடல் போக்கு வரத்துப் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் முக்கியமானதொரு நகர்வாகக் கருதலாம்.

இதற்கு முன்பாக, இவ்வருடம் ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதியன்று, இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே காங்கேசந்துறையின் வடகடலில், 22-வது சர்வதேச கடல்சார் எல்லைக் கோடு குறித்த சந்திப்பு நிகழ்ந்தது. இந்த கடல்சார் எல்லைக்கோடு பற்றிய சந்திப்பு, இரு நாட்டு கடற்படை உறவினைப் பலப்படுத்தும் வகையில், வருடத்தில் இரண்டு தடவைகள் நடாத்தப்படும். அதேவேளை, தற்போது உருவாக்கப்பட்டுள்ள ஒப்பந்தமானது, இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் கடல் பாதையில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மாலைதீவையும் இலங்கையும் உள்ளடக்கியதாக அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது.

குறிப்பாக, இலங்கை மற்றும் மாலைதீவு கொடிகளைத் தாங்கிய வணிகக் கப்பல்களை கண்காணிப்பதற்கும், அவற்றினை அடையாளம் காண்பதற்கும், இந்தியாவின் தொலைதூர கண்காணிப்பு தகவல் நடுவம் என்பதன் அனுசரணையைப் பெறுவதோடு, தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் கடல்சார் உறவுகளைப் பலப்படுத்த இவ் ஒப்பந்தம் வழிசமைக்கிறது. 2014 இல் நடைபெறும் அடுத்தகட்ட சந்திப்பில், ஒப்பந்தம் மற்றும் அதுகுறித்தான நடைமுறைச் சிக்கல் என்பன மீளாய்விற்கு உட்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், தென்சீனக்கடலைத் தாண்டிய சீனாவின் ஆதிக்க நகர்வுகளை, பாதுகாப்பு ஒப்பந்தங்கள் ஊடாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கட்டுப்படுத்தலாம் என்று இந்தியா செயற்படுகிறது என்பது போலான தோற்றப்பாடு தென்பட்டாலும், அண்மையில் ஊடகங்களில் கசிந்த உத்தேச அமெரிக்க- மாலைதீவு ஒப்பந்தம் என்கின்ற விவகாரமும் இங்கு உள்வாங்கப்பட்டிருக்கும் என்று நம்பலாம்.

இதுபோன்று, ஆசியப்பிராந்தியத்தில், உடன்பாடுகள் எட்டப்படாமல் முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதையும் நோக்க வேண்டும்.

கடற்பாதுகாப்பு குறித்த விவகாரத்தில், பரந்துபட்ட ஒத்துழைப்பினை உருவாக்கும் வகையில், இந்தியா- ஜப்பான்- அமெரிக்காவுற்கு இடையில் முதற்கட்ட முத்தரப்பு பேச்சுவார்த்தை 2011-இல் வாசிங்டனிலும், அதன் இரண்டாம் கட்டம் டோக்கியோவிலும், மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தை 29 அக்டோபர் 2012 அன்று புதுடில்லியிலும் நடந்தது. இந்த முத்தரப்பு நகர்வானது, ஆசிய- பசுபிக் பிராந்தியத்தில், கடல் பாதுகாப்புத் தொடர்பான புதிய செயற்பாட்டு வடிவமொன்றினை கட்டமைக்கும் என்று எதிர்வு கூறப்படுகிறது.

தற்போது, ஜப்பானோடு இராஜதந்திர- பொருண்மிய உறவுகளை மேம்படுத்த பலத்த முயற்சிகளை மேற்கொள்ளும் இந்தியாவிற்கு, அமெரிக்காவின் வகிபாகமானது, சீனாவை எதிர்நிலைக்குத் தள்ளி வைக்க அல்லது அந்நியப்படுத்த தேவைப்படுகிறது.

கடல்பாதுகாப்பு என்ற விடயத்திற்கு அப்பால், இம் முத்தரப்பிற்கு இடையே, ஆபிரிக்கா மற்றும் ஆப்கானிஸ்தானில், ஒன்றிணைந்த வகையில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது குறித்த பேச்சுவார்த்தையும் நடந்துள்ளது.

ஆசியாவில் புதிய அணி சேர்க்கைகள் நடைபெறும் அதேவேளை, கடந்த மாதம் 8 ஆம் திகதியன்று, சீனாவில் *நீல நூல்* ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. 350 பக்கங்களைக் கொண்ட இந்நூலில், இந்துசமுத்திரப் பிராந்தியம் குறித்து, சீன அரசால் பெரிதும் மதிக்கப்படும் ஆய்வாளர்கள் எழுதியுள்ளார்கள்.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவாலை எதிர்கொண்டு பொதுநலவாய மாநாட்டை நடத்த துணிந்து விட்டோம்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய உச்சி மாநாடு இலங்கையில் நடத்தப்படுவதை குழப்பியடிக்கும் நோக்கில் சில சக்திகள் சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் அவற்றுக்கு சளைக்காது வெற்றிகரமாக இந்த மாநாட்டை முன்னெடுப்பதே எமது ஒரே குறிக்கோள் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மாகாண ஆளுநர்கள் மற்றும் மாகாண கல்விச் செயலாளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டை தொடர்ந்து நாட்டின் பொருளாதாரத் துறை பல்வேறு வழிகளிலும் அபிவிருத்தியடையும் என எதிர்பார்ப்பதாக அமைச்சர் பீரிஸ் சுட்டிகாட்டியுள்ளார்.

பொருளாதார வளர்ச்சியை வீழ்த்தும் நோக்கில் மனித உரிமைகள் எனும் ஆயுதத்தை உபாயமாக பயன்படுத்தி வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையை தடை செய்ய சதித்திட்டம் தீட்டுபவர்களுக்கு இந்த உச்சி மாநாடு பெரும் சவாலாக அமையுமெனவும் சுட்டிக்காட்டினார்.

பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் உட்பட 53 நாடுகளின் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவர்களுடைய வருகை சர்வதேசம் மத்தியில் இலங்கை தொடர்பில் இருந்து வந்த தவறான கருத்துக்கள் மற்றும் பொய்ப் பிரசாரங்களை முறியடித்து உண்மை நிலைவரங்களை உலகிற்கு உணர்த்த வழியமைக்குமெனவும் அமைச்சர் கூறினார்.

பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூகத்தினருக்கான சமவுரிமைகள் என்னும் தொனிப் பொருளில் நடத்தப்படவிருக்கும் பொதுநலவாய உச்சி மாநாட்டில் நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் பங்கெடுக்க வேண்டுமென்பதே ஜனாதிபதியின் விருப்பமாகும்.

அந்தவகையில் பாடசாலை மாணவர்களையும் இதற்குரிய வேலைத் திட்டங்களில் சேர்த்துக் கொள்ள விரும்புதாகவும் அமைச்சர் கூறினார். (அ-2)

# போர்க்குற்றங்களுக்காக மரண தண்டனை விதிப்பு

(கொழும்பு)

பங்களாதேஷில் முன்னணி இஸ்லாமியவாத அரசியல்வாதி அலி ஆஹ்ஸான் மொஹமட் முஜாஹித்துக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1971ஆம் ஆண்டில் பாகிஸ்தானிடமிருந்து பிரிவினைகோரி நடத்தப்பட்ட சுதந்திரப் போரின் போது பங்களாதேஷில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்களுக்காகவே இவருக்கு இந்த மரண தண்டனை விதிக்கப்பட் டுள்ளது.

பங்களாதேஷ் சுதந்திரமடைந்த பின்னர் தலைமறைவாகியிருந்த இவர் 6 ஆண்டுகளின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட இராணுவ சதிப் புரட்சியில் ஆட்சி மாறிய போது இவர் மீண்டும் ஆட்சிக்கு வந்திருந்தார்.

2001 தொடக்கம் 2006 ஆண்டு காலப்பகுதியில் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தில் சமூக நல அமைச்சராக இவர் பதவி வகித்திருந்தார்.

இந்நிலையில் இவர் மீது சுமத்தப்பட்டி ருந்த கூட்டுப் படுகொலைகள் மற்றும் சித்திரவதைகள் உள்ளிட்ட ஏழு குற்றச்சாட்டுக்களில் ஐந்து குற்றச்சாட்டுக்கள் உறுதி செய்யப்பட்டதை அடுத்தே டாக்காவில் அமைந்துள்ள சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தால் இவருக்கு இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியின் ஆன்மீக போதகர் குலாம் அஸாமுக்கு கடந்த திங்கட்கிழமை 90ஆண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கச்சதீவை இந்தியா விரைவில் பெற்றுக் கொள்ளுமாம்?

## ரவி எம்.பி. கூறுகின்றார்

கச்சதீவை இந்தியா விரைவில் மீளப்பெற்றுக்கொள்ளக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

13 ஆவது திருத்தச்சட்டம் இரத்து செய்யப்பட்டால் இந்தியா கச்சதீவை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இராஜதந்திர உறவுகளின் அடிப்படையிலேயே இந்தியா- இலங்கைக்கு கச்சதீவை ஒப்பந்தத்தின் ஊடாக வழங்கியது என அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

தமிழக மீனவர்களின் எதிர்ப்பையும் மீறியே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் ராஜபக்ஷ அரசாங்கம் தேவையற்ற வகையில் இந்தியாவுடன் பகைமையை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு அளிக்கும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு, பொது நலவாய நாடுகள் அமைப்பு போன்றவற்றுடன் செயற்படும் போது நிதானமாக செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)




❖ 1304 - லண்டனின் முதலாம் எட்வேர்ட் ஸ்கொட்லாந்தின் ஸ்டேர்லிங் அரண்மனையைக் கைப்பற்றினான்.

❖ 1618 - புளுட்டோ பூமிக்கு மிக அண்மைக்கு வந்தது. இதன் அடுத்த நிகழ்வு 1866 இல் நிகழ்ந்தது. மீண்டும் இது 2113 இல் நிகழும்.

❖ 1656 - பத்தாம் சார்ல்ஸ் குஸ்டாவ் மன்னனின் சுவீடனின் படையினர் வார்சாவில் இடம்பெற்ற போரில் போலந்து-லித்துவேனியப் படைகளை வென்றனர்.

❖ 1810 - நியூகிரனாடாவின் பகோட்டா (கொலம்பியாவின் தலைநகர்) நகர மக்கள் ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தனர்.

❖ 1871 - பிரித்தானியக் கொலம்பியா கனடாவுடன் இணைந்தது.

❖ 1917 - முதலாம் உலகப் போர்: யூகொஸ்லாவிய இராச்சியம் உருவாக்கப்பட்டது.

❖ 1922 - பன்னாட்டு அமைப்புஆபிரிக்காவில் டோகோலாந்து பிரான்சுக்கும் தங்கனீக்கா ஐக்கிய இராச்சியத்துக்கும் வழங்கியது.

❖ 1924 - அமெரிக்க உதவி தூதுவர் "ரொபேர்ட் இம்ரி" சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து ஈரானின் தெஹ்ரான் நகரில் இராணுவச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

❖ 1940 -டென்மார்க் பன்னாட்டு அமைப்பில் இருந்து விலகியது.

❖ 1944 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனிய இராணுவத் தளபதி ஒருவனால் ஹிட்லர் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியில் இருந்து அவர் தப்பித்தார்.

❖ 1947 - பர்மியப் பிரதமர் ஓங் சான் மற்றும் 7 அமைச்சர்கள் கொலை தொடர்பாக முன்னாள் பிரதமர் ஊ சோ கைது செய்யப்பட்டார்.

❖ 1949 - 19 மாதப் போரின் பின்னர் இஸ்ரேலும் சிரியாவும் போர் நிறுத்தத்துக்கு உடன்பட்டன.

❖ 1953 - யுனிசெப் அமைப்பை நிரந்தரமாக்கும் முடிவு ஐ.நாவில் எட்டப்பட்டது.

❖ 1954 - வியட்நாமை இரண்டாகப் பிரிக்கும் உடன்பாடு ஜெனீவாவில் எட்டப்பட்டது.

❖ 1960 -இலங்கையின் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவானார். இவரே நாடொன்றின் தலைவராகத் தெரிவான முதற் பெண் ஆவார்.

❖ 1960 - கொங்கோவில் தனது அதிகாரத்தை நிலைநிறுத்த பெல்ஜியம் ஐ.நா. பாதுகாப்பு அவையில் வாதாடியது. கொங்கோ அரசு சோவியத் உதவியை நாடியது.

❖ 1969 - அப்பல்லோ 11 சந்திரனில் இறங்கியது. நீல் ஆம்ஸ்ட்ரோங், எட்வின் ஆல்ட்ரின் ஆகியோர் சந்திரனில் காலடி வைத்தனர்.

❖ 1974 - சைப்பிரசில் ஜனாதிபதி மூன்றாம் மக்காரியோசுக்கு எதிராக இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து துருக்கியப் படைகள் அங்கு முற்றுகையிட்டன.

❖ 1976 - வியட்நாம் போர்: அமெரிக்கப் படைகள் தாய்லாந்தில் இருந்து முற்றாக வெளியேறின.

❖ 1976 - வைக்கிங் 1 சந்திரனில் இறங்கியது.

❖ 1979 - இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

❖ 1980 - இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேம் நகரை ஐ.நா. உறுப்பு நாடுகள் அங்கீகரிக்க முடியாதவாறு ஐ.நா. பாதுகாப்பு அவை 14:0 என்ற வாக்குகளால் தடையுத்தரவைப் பிறப்பித்தது.

❖ 1989 - பர்மாவின் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூ கீ இராணுவ ஆட்சியாளர்களால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

### பிறப்புகள்

❖ கிமு 356 - மகா அலெக்சாந்தர், கிரேக்க மன்னன் (இ. கிமு 323)

❖ 1822 - கிரிகோர் ஜோஹன் மெண்டல், ஆஸ்திரிய மரபியல் அறிவியலாளர் (இ. 1884)

❖ 1919 - சேர் எட்மண்ட் ஹிலாரி, எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் மனிதர், நியூசிலாந்தின் மலையேறி

❖ 1923 - மு. சிவசிதம்பரம், ஈழத் தமிழ் அரசியல்வாதி (இ. 2002)

❖ 1929 - ராஜேந்திர குமார், இந்திய நடிகர் (இ. 1999)

❖ 1975 - ரே ஏலன், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

❖ 1937 - மார்க்கோனி, வானொலியைக் கண்டுபிடித்தவர் (பி. 1874)

❖ 1973 - புரூஸ் லீ, தற்காப்புக்கலை வல்லுநர், ஹொலிவுட் நடிகர் (பி. 1940)

### எட்மண்ட் ஹிலாரி



எட்மண்ட் ஹிலாரி நியூசிலாந்து நாட்டுப் புகழ்பெற்ற மலையேறுநர். 1919ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் திகதி பிறந்த இவர் தனது 33ஆவது வயதினில் ஷெர்ப்பா மலையேறுநர் டென்சிங் நோர்கேயுடன் இணைந்து முதன்முதலாக எவரெஸ்ட் மலையின் உச்சியேறி வெற்றி நாட்டினார். இவர் எவரெஸ்ட் மீது ஏறியது ஜான் ஹண்ட் என்பார் தலைமையில் பிரித்தானியரின் ஒன்பதாவது முறையாக எடுத்த முயற்சியின் பகுதியாகும். இவர் 88ஆவது அகவையில் இருதய நோயால் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் தோட்டத்தில் பூக்கும் தாவரங்களை வளர்த்து அயன்மகரந்த சேர்க்கையாளர்களை ஊக்குவிக்க வேண்டும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 28-I



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

நீங்கள் நலமாக இருக்கின்றீர்களா? இப்படி விளித்து ஆரம்பிக்க வேண டியிருக்கின்றது. யார் சுகதேகி? யர்ர் நோயாளி ? என்பது தெரியாமல் நாம் தினந்தினம் திக்குமுக்காடிக் கொண்டிருக்கின்றோம். அது தானே உண்மை. இன்றிருப்பவர் நாளை இல்லை. என்ன நடந்தது எனவும் தெரியாமல் எல்லாமே நடந்து முடிகின்றது. இதற்கும் நாமே காரணம். எமது சூழலை நாம் மாசுபடுத்திக் கொண்டிருப்பதன் விளைவு எமது சுகநல குறைவின் மூலம் எமக்கு மெல்ல மெல்லத் தெரியத் தொடங்கியிருக்கின்றது. புற்றுநோயின் தாக்கம் எம்மவர்களை அதிகமாக வாட்டி வருகின்றமை இங்கொரு காரணம் என கூறலாம். சூழல் மாசடைதலை தடுக்க நாம் எடுக்கும் முயற்சிகள் பெரிதாக கைகூடவில்லை என்பதுடன் எம்மால் முழுமையாக அதனை தடுக்க முடியவில்லையென்பதனை ஒருபுறம் ஒத்துக்கொண்டாலும் அதற்கு உள்ள மாற்று வழிகளைப் பற்றியும் இன்னும் நாம் கொஞ்சமாவது வருங்கால தலைமுறையையிட்டு சிந்திக்கத் தலைப்பட வேண்டும். மேலும் அதனை விரைந்து நடைமுறைப் படுத்தவும் வேண்டும். அதற்கான வழியொன்று இங்கே விளக்கப்பட்டிருக்கின்றது.

பசுமைப்புரட்சியின் பக்கமாக பார்த்தால் பலருக்கு உணவினை உற்பத்தி செய்து கொடுக்க முடிந்ததை அதனது வெற்றியாக கொண்டாடினாலும் மறுபக்கத்தில் எவருமே எதிர்பாராத பக்கவிளைவுகளை அது தந்திருக்கின்றது. இதனை இன்றும் எவராலும் மறுக்கமுடியவில்லை. விளைவு பாரதூரமானதாகவே அமைந்துவிட்டது. ஒருபக்கத்தில் வெற்றிக்களிப்பிலிருந்த விஞ்ஞானிகளால் அன்றைய நாட்களில் சூழலுக்கு நிகழப்போகும் பின்விளைவுகளைப் பற்றி அலட்டிக்கொள்ள வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. அதுவே விஸ்வரூபமெடுத்து இப்போது எம்மையெல்லாம் திக்குமுக்காட வைத்திருக்கின்றது. விளைவுகளைப்பற்றி சிந்திக்காததன் விளைவு இதுவெனிலும் அது ஆண்டாண்டு காலமாக பலரையும் துன்பத்துக்குள் உள்வாங்கியிருக்கின்றது, இன்னும் உள்வாங்கிவருகின்றது. இனனும் இது தொடர்கதையாகி நீண்டுகொண்டேயிருக்கின்றது. சூழல் மாசுற்றிருப்பதை நாம் உணருகின்றோம். குறிப்பாக சூழலிலுள்ள உயிரினங்களின் தொகை மாறிவிட்டுள்ளது. நன்மைதரும் உயிரினங்களை இழந்துவிட்டோம். அதிலும் குறிப்பாக மகரந்த சேர்க்கையிலீடுபடும் பூச்சியினங்கள் மற்றும் நுண்ணுயிரினங்கள் என பலவற்றின் எண்ணிக்கை கணிசமான அளவிற்கு குறைந்து விட்டது. இதனை நாமனைவரும் எக்காலத்திலும் அவதானிக்கவில்லை. அவதானித்திருப்பினும் அதற்கான மாற்று வழிகளினை செயற்படுத்த முனையவில்லை. சூழலியலாளர்களின் கருத்துப்படி நன்மை தரும் பூச்சியினங்கள் எமது சூழல் தொகுதியிலிருந்து வகைதொகையின்றி அழிக்கப்பட்டுள்ளன என்பதாகும். அதிலும் நாம் உற்பத்தி செய்யும் பயிர்களில் அயன் மகரந்த சேர்க்கை மூலம் உணவுற்பத்தியாகும் பயிர்கள் மிகவும் அதிகமாகும். இவ்வாறு அயன்மகரந்த சேர்க்கையினை செய்யும் பூச்சியினங்களில் தேனீக்கள் மிகமுக்கியமானவை. அவற்றின் உதவியின்றி இவ்வகைப்பயிர்களில் விளைச்சலை எக்காலத்திலும் அதிகரிக்க முடியாது.

அயன்மகரந்த சேர்க்கைக்காக விளைநிலத்தை நோக்கி வரும் தேனீக்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்திருக்கும் போது மகரந்த சேர்க்கை நிகழாது பயிருற்பத்தி கணிசமான அளவுக்கு குறைந்துவிட வாய்ப்பாகி அதுவே நாம் தற்போது மிகவும் குறைந்தளவு உற்பத்தியை பெற்றுக் கொள்ள



வேண்டியதாகியது. தேனீக்களை கவருவதற்கு அவற்றுக்கான பூக்கும் தாவரங்களை நாம் விளைவிக்க வேண்டும். அதிலும் பூக்கும் தாவரங்களில் பலவகையுண்டு. தேனீக்கள் தேடாத தன்மகரந்த சேர்க்கையை நாடியிருக்கும் தாவரங்களை தவிர்த்து தேனீக்கள் விரும்பும் பூக்கும் தாவரங்களை நாம் விளைவிப்பது சாலச் சிறந்தது. தேனீக்களுக்கு பூக்களில் மகரந்த மணிகள், தேன் சுரப்பு என்பன தேவைப் படுகின்றன. இவற்றை வழங்கும் பூக்கும் தாவரங்களை விளைநிலத்தில் பயிரிடும் போதும் வீட்டுத்தோட்டத்தில் விளைவிப்பதற்கும் வழிவகைகளை இனங்கண்டு பரிந்துரைக்க வேண்டும். எமது பிரதேசத்தில் எளிமையாக வளரும் இவ்வகைத்தாவரங்களை இனங்கண்டு பரிந்துரைப்பது அவசியமாகும். எமது பிரதேசத்தில் நாம் கவனியாது விட்ட பலவகைத்தாவரங்கள் தேனீக்களுக்கு பரீச்சயமானதாக இருக்கும். அவற்றை இனங்கண்டு மேலும் விருத்தி செய்து பயிரிடும் போது சூழலுக்கியைவான அங்கிகளின் அரவணைப்பும் கிடைக்கும். சூழலும் பாதுகாக்கப்படும்.

குறிப்பாக சில தாவரங்களை தேனீக்கள் விரும்புவதுண்டு. அதனால்தான் கிடைக்கின்ற தாவரங்களது தேன்சுரப்பினது தன்மைக்கேற்ப தேனின் சுவையும் மாறுபடுவதுண்டு. தேனீக்களுக்காக மகரந்த மணிகளை உணவாக வழங்கும் தாவரங்களை நாம் தெரிவு செய்து வளர்க்கலாம். அதனுடன் தேன்சுரப்பை வழங்கும் தாவரங்களையும் இனங்கண்டு அவற்றை அதிகளவில் வளர்ப்பது சிறந்தது. பயிர்ச்செய்கையில் நாம் தொடர்ச்சியாக அதிகளவில் பயன்படுத்திய பீடைநாசினிகளின் தாக்கத்தினால் பயிர்களை நோக்கி தேனீக்கள் வருவது வெகுவாகக் குறைந்துவிட்டது. மேலும் மேற்படி பீடைநாசினிகளினால் தேனீக்களும் அழிக்கப்பட்டுவிட்டன. ஆதலால் தேனீக்களை பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டில் நாமனைவரும் உள்ளோம். அவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் அயன்மகரந்த செய்கையை ஊக்குவிப்பதோடு உணவுற்பத்தியையும் கணிசமான அளவிற்கு அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு. பீடைநாசினிகளின் பக்க விளைவுகளுள் பாரதூரமானது இவ்வாறான மகரந்த சேர்க்கையிலீடுபடும் உயிரினங்களின் அழிப்பும் ஏனைய நன்மைதரும் உயிரினங்களின் அழிவும் என கூறலாம். இந்நிலையில் எமது சூழலைப்பாதுகாக்கும் வ்கையில் பீடைநாசினிகளின் பயன்பாட்டை குறைத்து இன்னும் தவிர்த்து இவ்வாறான உணவுற்பத்திக்கு கணிசமான அளவில் பங்களிக்கும் தேனீக்களையும் ஏனைய மகரந்தச் சேர்க்கையிலீடுபடும் உயிரினங்களை ஊக்குவிப்பதுமாகும். ஏற்கனவே விளைநிலத்தில் பீடைநாசினி பிரயோகம் நடைபெறுவதனால் வீட்டுத்தோட்டத்தில் தேனீக்கள் விரும்பும் பூக்கும் தாவரங்களை வளர்த்து அவற்றின் எண்ணிக்கையை பெருக்க வழிவாய்ப்புக்கள் உண்டு.

வழக்கமாகவே வீட்டுத்தோட்டம் எனும் போது அழகுக்கான தாவரங்களையே நாம் தெரிவு செய்வது வழக்கம். அதிலும் அத்தாவரங்களில் தேனீக்களை கவருவதற்கான மகரந்த மணிகளோ அல்லது தேன்சுரப்போ இருக்காது. இத்தகைய தாவரங்களில் அதிக நாட்டம் காட்டுவதைத் தவிர்த்து தேனீக்களின் வருகையை அதிகரிக்கக்கூடிய அழகுத்தாவரங்களை நடுகை செய்ய எம்மவர்களை ஊக்குவிக்க வேண்டும். அவரையின பயிர்கள், சூரியகாந்தி, வாழை, இக்சோரா, அக்கேசியா மாஞ்சியம் இன்னும் பல்லாண்டு தாவரங்கள் (மரங்கள்) கூட இதற்காக நடுகை செய்யப்பட்டு தேனீக்களின் வருகையை உறுதிசெய்து கொள்ளலாம். புளி, கிளிறிசிடியா, பாலை, வாழை என்பன தேனீக்கள் எடுக்கும் தேன்சுரப்பிற்காக வளர்க்கப்படலாம். வீட்டுத் தோட்டத்தில் பீடைநாசினி விசிறப்படுவதில்லை என்பதனால் தேனீக்களின் வருகையை நிச்சயமாக உறுதிசெய்து அவற்றின் எண்ணிக்கையையும் நாம் பெருக்கிக்கொள்ளலாம். இன்னும் தேனீக்களை பாதுகாக்கும் இடமாகவும் வீட்டுத்தோட்டம் அமையும் அல்லவா. நாம் உணவுக்காக பயிரிடும் தாவரங்களுடன் சேர்த்து அழகுக்காக வளர்க்கும் தாவரங்களையும் தேனீக்கள் விரும்பும் தாவரங்களாக பயிர்செய்ய அனைவரையும் ஊக்குவிக்கவேண்டும்.

வடபகுதியில் இடத்துக்கு இடம் வளர்க்கப்படும் பயிர்கள் வேறுபட்டவை என்பதனால் பரந்து பட்ட பிரதேசத்தில் வளர்க்கப்படும் இப்பயிர்களை இனங்கண்டு அவற்றின் பயன்பாட்டிற்கேற்ப வகைப்படுத்தி மேலும் வளர்க்க ஊக்குவிக்க வேண்டும். எமது சூழலைப் பேணிப்பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய அதிமுக்கிய பணியாக நாம் இதனைக் கருதவேண்டும். இதற்காக அதிகமாக அலட்டிக்கொள்ளாமல் அவரவர் வீடுகளில் உருவாக்கப்படும் வீட்டுத் தோட்டத்தில் இந்த முயற்சிக்கு ஆதரவு தரலாம்.

நாம் வாழும் சூழலின் உயிர்ப்பல வகைமையை நாம் உறுதிசெய்து கொள்ளும் அதேவேளையில் அதனை ஊக்குவிக்கும் காரணிகளை இனங்கண்டு மேம்ப்டுத்த வேண்டும். கவனிப்பாரற்று ஆனால் இவ்வாறான தேனீக்களுக்கு விருந்து கொடுக்கும் தாவரங்களை எமது பிரதேசத்தில் தேடிக்கண்டுபிடித்து அவற்றை வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கலாம். வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட சில தாவரங்களும் தேனீக்களுக்கு மிகச்சிறந்ததாக இருப்பதனால் அவற்றைப்பற்றியும் சிந்திப்பது நல்லது. அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கலியான்றா எனும் தாவரம் சிறந்த தேன்சுரப்பு வழங்கியாக அவதானிக்கப்பட்டுள்ளது. அது போல உள்ள தாவரங்களை நாம் மேலும் வளர்க்க ஆவன செய்யலாம்.

சிறுகச்செய்தால் வீட்டுத்தோட்டம். அதனையே பெருகச்செய்தால் அது பசுமைப் புரட்சி. இன்னொரு பசுமைப்புரட்சியில் நாம் அதிகளவிலான உற்பத்தியை முன்னோக்காகக் கொண்டிருப்பினும் நாம் வாழும் சூழலையும் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்பதனையும் கருத்தில் கொண்டிருப்பது நல்லது. அயன்மகரந்த சேர்க்கையிலீடுபடும் உயிரினங்களை நாம் ஊக்குவிப்பதன் மூலம் பல்வகைமையை மேம்படுத்த வாய்ப்புக்களதிகம். வாருங்கள் இதிலாவது ஒன்றிணைவோம்.

# மாகாணசபை முறைமையை நீதிமன்றத்தால் ஒழிக்க முடியாது

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாணசபை முறைமையை எதிர்ப்பவர்கள் எதிர்வரும் மாகாணசபை தேர்தல்களில் மக்கள் வாக்களிக்காது பகிஷ்கரித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டுமென்ற பிரசாரத்தை முன்னெடுப்பார்களா? என சவால் விடுக்கும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ இது தொடர்பாக மேலும் தெரிக்கையில்,

எமது கட்சி அரசாங்கத்துடன் இணைந்து மாகாண சபை தேர்தலில் போட்டியிடுகின்றது. வடக்கில் வெற்றி பெறும் திட்டங்களுடனேயே போட்டியிடுகின்றோம். அரசாங்கத்தின் அபிவிருத்திகள் வடக்கில் எமக்கு வெற்றி கிடைத்தால் துரிதப்படுத்தப்படும்.

மாகாண சபையை எதிர்ப்பவர்களுக்கு நடைபெறவுள்ள தேர்தல்களில் மக்கள் சிறந்த பாடம் புகட்டுவார்கள். மக்கள் இத்தேர்தலில் வழங்கும் பல இலட்சம் வாக்குகள் மாகாண சபையை எதிர்ப்பவர்களுக்கு சிறந்த பதிலாகும்.

மாகாணசபையை எதிர்ப்பவர்கள் தமது எதிர்ப்பு உண்மையானால் இம்முறை மாகாண சபை தேர்தல் பிரசாரங்களின் போது மக்கள் முன் சென்று தேர்தலை பகிஷ்கரிக்குமாறும் வாக்களிக்க வேண்டாமென்றும் பிரசாரம் செய்ய வேண்டும்.

எதிர்ப்பவர்களுக்கு நான் சவால் விடுக்கின்றேன். முடிந்தால் எதிர்த்து பிரசாரம் செய்யுங்கள். ஆனால், என்ன வேடிக்கையென்றால் மாகாண சபை முறைமையை எதிர்ப்பவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமது வேட்பாளர்களை அதிகளவு போட்டியிடச் செய்வதற்கு முட்டி மோதிக்கொள்கின்றனர்.

மாகாணசபை முறைமையை நீதிமன்றத்தால் ஒழிக்க முடியாது. இது தொடர்பில் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை மட்டும் பாராளுமன்றத்திற்கு வழங்க முடியும்.

இறுதி முடிவை பாராளுமன்றமே எடுக்க வேண்டும். ஏனென்றால் பாராளுமன்றமே இறையாண்மை கொண்டது.

அத்தோடு 13 ஆவது திருத்தம் இலங்கை அரசியலமைப்பில் சட்டமாக உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

**நவீன ஊடகத்துறையும் அதற்கான பயிற்சிகளும்** என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்று இணுவில் சீ.ஐ.எஸ்.நிறுவன விரிவுரை மண்டபத்தில் (இணுவில் திரையரங்கு முன்னால்) எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சூரியன் எவ்.எம்.செய்திப்பிரிவு முகாமையாளர் எம்.இந்திரஜித் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஊடகத்துறையில் ஈடுபாடு கொண்ட மாணவர்கள் உட்பட ஆண், பெண் இருபாலாரையும் பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு 0214909629, 0729158881 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வரவுகளை உறுதிப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ கொக்குத்தொடுவாய் கிராம மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த

# நடவடிக்கை எடுக்குக

(முல்லைத்தீவு)

கடந்த 27 வருடங்களின் பின்னர் சொந்தக் கிராமத்திற்கு மீள்குடியேறியுள்ள கொக்குத்தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மீனவ குடும்பங்கள் தொழிலை மேற்கொள்ள போதிய வளங்கள் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய கிராம மக்கள் கடந்த 2012 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டனர்.

இக்கிராமங்களில் 77 மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் மீள்குடியேற்றப்பட்டு ஒரு வருடம் கடந்துவிட்டது.


இந்நிலையில் மீனவ குடும்பங்களில் பெருங்கடலில் தொழிலை மேற்கொள்ளும் 5 குடும்பங்களுக்கு மீன்பிடி படகுகளும் சிறு கடலில் தொழிலை மேற்கொள்கின்ற 21 குடும்பங்களுக்கு குல்லாவும் வழங்கப்பட்டது. ஆயினும் மீன்பிடிப்பதற்கான படகுகள் வழங்கப்பட்டுள்ளபோதும் வலைகள் எதுவும் வழங்கப்படவில்லை. இதனால் மீனவர்கள் தொழிலை முன்னெடுக்க முடியாமல் உள்ளனர்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த இம் மீனவ குடும்பங்களிடம் சொந்தமாக தொழில் உபகரணங்களை பெறுமளவிற்கான வசதி வாய்ப்புக்கள் இல்லை. இதனால் கடற்றொழிலை நம்பி தமது வாழ்க்கையை நகர்த்த முடியாத திண்டாட்ட நிலைக்குட் பட்டுள்ளனர்.

கொக்குத்தொடுவாய் கிராம மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பின்னரும் தமக்கு இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அன்றாட வாழ்வை கொண்டு நகர்த்த முடியாமல் உள்ளது எனவும் மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்தோடு தொழிலை மேற்கொள்வதற்கான உபகரணங்களை யுத்தத்தினூடாக இழந்துள்ளதாலேயே கஷ்ட நிலை ஏற்பட்டுள்ளது என்றும் மீனவர்கள் குமுறுகின்றனர்.

எனவே, இப்பிரதேச மீனவர்களின் துர்ப்பாக்கிய நிலையைக் கருத்திலெடுத்து தொழிலை மேற்கொள்வதற்கு முல்லை.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினரும் கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனமும் உரிய நடவடிக்கை எடுத்து உபகரணங்களை பெற்றுத் தருமாறு கொக்குத்தொடுவாய் மீனவ குடும்பங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (ம-9-267)



கொழும்பிலிருந்து மாங்குளம் வரையிலான புகையிரத பாதைகளின் புனரமைப்பு வேலைகள் தற்போது துரிதகதியில் இடம்பெற்று வருகின்ற நிலையில் இப்புனரமைப்புக்கான கற்களை அநுராதபுரத்தில் இருந்து ஏற்றிக் கொண்டு 22 பெட்டிகளை உடைய புகையிரதம் கடந்த செவ்வாய்க்கிழமை மாங்குளம் புகையிரத நிலையத்தை நோக்கி வருவதைப் படத்தில் காணலாம். (படம்:- மல்லாவிச் செய்தியாளர்)

## நிறுவை உபகரணங்கள் முத்திரையிடும் நிகழ்வு

(முல்லைத்தீவு)

முல்லை.மாவட்ட செயலக பிரிவின் அளவீட்டு அலகுகள் மற்றும் நியமங்கள் சேவைகள் திணைக்களத்தினால் நிலுவை அளவை உபகரணங்கள் முத்திரையிடப்படும் நிகழ்வு எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் 24 ஆம் திகதி புதன்கிழமையும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 25 ஆம் திகதி வியாழக்கிழமையும் நிறுவை அளவை உபகரணங்கள் முத்திரையிடப்படவுள்ளன.

எனவே, 12 மாத காலப்பகுதிக்குள் இலட்சனையிடப்படாத ஏதேனும் நிறுவை அளவையை கணிக்கும் உபகரணங்களை மேற்குறிப்பிட்ட காரியாலயத்திற்கு வந்து முத்திரைகளை இடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் என்ற சட்டத்தின் 37 ஆம் பிரிவின் கீழ் முத்திரையிடப்படாத நிறுவை உபகரணங்களை பயன்படுத்துவது தண்டனைக்குரியதாகும்.

ஆகவே, வியாபார நோக்கில் நிறுவைக்காக உடைமையில் வைத்திருக்கும் உபகரணங்களை முத்திரையிட்டுக் கொள்ளுமாறு முல்லை. மாவட்ட செயலக பிரிவின் அளவீட்டு அலகுகள் மற்றும் நியமங்கள் சேவை திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (ம-9-267)

## கிணற்றில் விழுந்து குழந்தை உயிரிழப்பு

(குருமன்காடு)

வவுனியா ஆலடி வீதி தோணிக்கல்லில் உள்ள தனது வீட்டில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை தவறுதலாக வீட்டில் உள்ள கிணற்றில் விழுந்ததில் உயிரிழந்துள்ளது.

ஆலடி தோணிக்கல்லை சேர்ந்த சுகுணன் கிருத்திக் (வயது 2) என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்ததாகும்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதாக வவுனியா வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர். (ம-250)

## கரைஎழில் ஆய்வு மலருக்கு கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன

(சிவநகர்)

கரைச்சி பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு விழாவில் வருடாவருடம் வெளியிடப்படும் **கரை எழில்** எனும் ஆய்வு நூலுக்காக தரமான ஆய்வுக்கட்டுரைகள் பிரதேச செயலரும் கலாசார பேரவையின் தலைவருமான கோ.நாகேஸ்வரனால் கோரப்படுகின்றன.

மேற்படி கட்டுரைகள் கலை, இலக்கியம், சமூகம், அறிவியல், ஆன்மீகம் போன்ற துறைகளில் அமைய வேண்டும். கரைச்சி பிரதேசத்தை முதன்மைப்படுத்தும் கட்டுரைகள் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

மேற்படி கட்டுரைகள் பிரதேச செயலர், பிரதேச செயலகம், கரைச்சி எனும் முகவரிக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். (ம-254)




## வடிகான்களுக்கு குழாய்கள் பொருத்தும் நடவடிக்கை தாமதம்

(சிவநகர்)

உருத்திரபுரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள வீதிகளின் சந்திகளுக்கு வடிகான்கள் பொருத்துவதற்காக குழாய்கள் ஒரு வருடத்திற்கு மேலாக கொண்டு வரப்பட்டுள்ள போதும் இதுவரை பொருத்தப்படவில்லை.

அத்துடன் இக்குழாய்கள் வீதியோரங்களில் கிடப்பதால் மழை காலங்களில் நீர் வழிந்தோட முடியாமல் வீதிகள் அரிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுவாக அபிவிருத்தி வேலைகள் அனைத்து பகுதிகளிலும் துரித கதியில் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றபோதிலும் சில கிராமப் பகுதிகள் அபிவிருத்தியில் பின்தங்கிக் காணப்படுவது ஏன் என மக்களால் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ, கிராமத்தை சேர்ந்த பொது அமைப்புக்களோ அக்கறை காட்டாமல் இருப்பது கவலையளிப்பதாகவும் பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், ஆரம்ப குடியேற்ற நிலையிலுள்ள கிராமங்களை அபிவிருத்தி செய்வதுடன் மழை காலங்களில் வீதிகளை ஊடறுத்துப் பாயும் நீரைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து இனிவரும் மழை காலத்திற்கு முன்னர் வடிகான்களை சீர் செய்ய வேண்டும். அத்தோடு உரிய சந்திகளில் நீர்க்குழாய்களையும் பொருத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9-254)

## உதைபந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(பூநகரி)

பூநகரி மத்திய நண்பர்கள் விளையாட்டு கழகத்தால் வருடாந்தம் நடத்தப்படும் முன்னாள் கழக வீரர்களின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9, 10, 11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்கள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர் அல்லது செயலாளர் பூநகரி மத்திய நண்பர்கள் விளையாட்டு கழகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கழகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் 0779902326 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களை அறிய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9-84)

## சட்டவிரோத மீன்பிடிக்கு அபராதம் விதித்தது மன்று

### மீன்பிடி உபகரணங்களும் அரசுடைமை

கொக்கிளாய் கடலில் அனுமதிப் பத்திரம் இன்றி சுருக்கு வலையை ஒளிக்கவர்ச்சியுடன் பாவித்து மீன் பிடித்தமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட 5 முஸ்லிம் மீனவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சுருக்குவலை மற்றும் படகு, எஞ்சின் ஆகியவற்றை அரசுடைமையாக்குமாறும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்குறித்த குற்றத்துடன் தொடர்புடைய 5 நபர்களும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா மேற்படி தீர்ப்பை வழங்கினார்.

முல்லைத்தீவு மீனவர்கள் இவ்வாறான சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர் சங்கங்கள் தொடர்ச்சியாக முறைப்பாடு செய்ததாகவும் கடற்றொழில் நீரியள் வள அதிகாரிகள் மன்றில் தெரிவித்துள்ளனர். (அ-ம)

## இரும்புகளை களவாடியவருக்கு கடூழிய சிறைத்தண்டனை

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் போரில் கைவிடப்பட்ட பழைய இரும்புகளை களவாடினர் என அரச சொத்துக்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவ்வழக்கு கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி குறித்த நபருக்கு எதிராக தொடுக்கப்பட்டு விசாரணை முடிவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேற்படி தீர்ப்பு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவால் வழங்கப்பட்டுள்ளது. (அ-ம)

## சந்தேக நபருக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் 7 வய்து, 9 வயது, 11 வயது, 12 வயது நிரம்பிய சிறுமிகளை பாலியல் ரீதியாக பலாத்காரம் செய்த 55 வயது நிரம்பிய சந்தேக நபரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபரை நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்திய பொலிஸார் குறித்த நபர் தனியார் வகுப்பு ஒன்றை நடத்தி வந்ததாகவும் அங்கு கல்வி கற்க வருகின்ற மாணவர்களுடன் தொடர்ச்சியாக பாலியல் பலாத்கார நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் தெரிவித்தனர்.

வழக்கை விசாரித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வரை குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவின் கொலை குறித்து விசாரித்த வர்மா குழுவின் அறிக்கை அபேஸ்?

## இந்திய மத்திய உள்துறை அமைச்சு

(கொழும்பு)

**முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி கொலை தொடர் பாக விசாரித்த வர்மா குழுவின் அறிக்கை காணாமற்போய் விட்டதாக இந்திய மத்திய உள்துறை அமைச்சு தெரிவித்துள் ளது. 1991 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரிக்க நீதிபதி ஜே.எஸ். வர்மா தலைமையிலான குழு நியமிக்கப்பட்டது.**

ராஜீவ்காந்தி கொலைக்கு பாதுகாப்புக் குறைபாடுகள் காரணமாக அமைந்தனவா? என்பதை ஆராய்வதற்கே இந்த விசாரணைக் குழு அமைக்கப்பட்டது.

இதன் பின்னர் ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்த நீதிபதி ஜெயின் தலைமையிலான குழு ஒன்று நியமிக்கப் பட்டது.

இந்த இரண்டு குழுக்களும் சமர்ப்பித்த அறிக்கைகளைத் தன்னிடம் தரக் கோரி இந்த வழக்கில் மரண தண்டனைக் கைதியாகவுள்ள பேரறிவாளன் மத்திய தகவல் ஆணைக் குழுவிடம் மனுச் செய்திருந்தார்.

அத்துடன் இந்த அறிக்கைகளின் பரிந்து ரைகள் மீது மத்திய அரசு எடுத்த நடவடிக் கைகள் தொடர்பான பிரதிகள், விசாரணைக் குழுவின் ஆய்வு எல்லை என்பன குறித்த விபரங்களையும் அவர் கேட்டிருந்தார்.

இந்த மனுவை ஏற்றுக் கொண்ட ஆணை க்குழு மனுதாரர் கேட்ட தகவல்களை வழங்கு மாறு உள்துறை அமைச்சுக்கு உத்தரவிட்டது.

ஆனால், மத்திய உள்துறை அமைச்சு அந்தத் தகவல்களை வழங்கவில்லை.

இதனால் மத்திய தகவல் ஆணையத்தில் பேரறிவாளன் தரப்பில் மீண்டும் முறையிடப் பட்டது. இது குறித்து மத்திய தகவல் ஆணைக் குழுவில் நேற்று முன்தினம் தகவல் ஆணை யர் சுஷ்மா சிங் விசாரணை நடத்தினார்.

அப்போது நீதிபதிகள் ஜெயின், வர்மா ஆகியோரின் அறிக்கைகள் எங்கு இருக்கின் றன என்று கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் அதனால் தகவல் அளிக்கமுடிய வில்லை என்றும் உள்துறை அமைச்சின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் தீவிர முயற்சி எடுத்து நீதிபதி ஜெயின் குழுவின் அறிக்கையின் சில பகுதி கள் இருக்கும் இடத்தை மட்டும் கண்டுபிடித் துள்ளதாகவும் ஆனால், நீதிபதி வர்மாவின் முழுமையான அறிக்கை எங்குள்ளது என்று கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் மத்திய உள்துறை அமைச்சு கூறியுள்ளது.

இதையடுத்து பேரறிவாளன் கேட்டுள்ள விசாரணை அறிக்கைகளின் பிரதிகள், அவற் றின் பரிந்துரைகள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை விபரங்கள் ஆகியவற்றை ஒரு வாரத்துக்குள் வழங்க வேண்டும் என்று தக வல் ஆணையர் உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# துடுப்பாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் போட்டிகள்

(மானிப்பாய்)

இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற் பாட்டில் யாழ். மாவட்ட துடுப்பாட்டக் கழகங்க ளின் பிரிவு-3 அணிகளுக்கிடையில் 50 பந்து பரிமாற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டிகள் தற்போது நடை பெற்று வருகின்றன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத் தில் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் கிறாஸ் கோப்பர் அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற மானிப்பாய் பரிஷ் அணி 38 பந்து பரிமாற்றங்களை எதிர்கொண்டு 195 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அவ்வணி சார் பாக துடுப்பாட்டத்தில் வினோத் 51 ஓட்டங் களையும், ஹரிகரன் 48 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கிறாஸ்கோப்பர் அணி சார் பாக, ஜனந்தன் 4 இலக்குகளையும், அஜித் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

196 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் கள மிறங்கிய கிறாஸ் கோப்பர் அணி, துடுப்பா ட்டத்தில் சொதப்பி அடுத்தடுத்து இலக்குகளை இழந்து வந்தது. இறுதியில் 35.5 பந்துபரி மாற்றங்களில் 127 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் கஜன் 40 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத் தார்.

பந்துவீச்சில் மானிப்பாய் பரிஷ் அணி சார்பாக வினோத் 3 இலக்குகளையும், ஹரிகரன், கிசோ, துவாரகன் தலா 2 இலக்கு களையும் கைப்பற்றினர். (அ-ம-23)



மானிப்பாய் சிற்றி லயன்ஸ் கழகப் பதவியேற்பு வைபவம் அண்மையில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் ஆளுநர் பிரியந்தா பெர்னாண்டோ முன்னிலையில் தலைவர் சி.நாகையா பதவிப் பிரமாணம் செய்வதை படத்தில் காணலாம்.

# பேய்வெளவால்கள் தாக்கியதில் குடும்பப் பெண் பரிதாப உயிரிழப்பு

(ஒட்டுசுட்டான்)

பேய்வெளவால்களினால் விபத்துக்குள் ளாகி படுகாயமடைந்த குடும்பப் பெண்மணி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் முல்லைதீவு 3 ஆம் வாய்க்கால் முள்ளியவளையை சேர்ந்த கணபதிப்பிள்ளை பாக்கியம் (வயது 70) என்பவரே உயிரிழந்த வராவார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முள்ளியவளையை சேர்ந்த குறித்த பெண் மணியும் அவரது மகனான க.தளையராஜ சிங்கம் (வயது58) என்பவர் உட்பட ஐவர் வவுனியாவிலுள்ள தமது வீட்டின் திருத்த வேலைக்ளை செய்துவிட்டு முள்ளியவளை யில் உள்ள வீடுநோக்கி கடந்த 12 ஆம் திகதி வாகனமொன்றில் திரும்பிக் கொண்டிருந் தனர்.

இவர்கள் பயணித்த வாகனத்தின் கண் ணாடிகள் திறந்த நிலையிலேயே காணப் பட்டன.

இவர்கள் ஒட்டுசுட்டான் வெள்ளமலை ஏற்றத்தை மாலை 6.30 மணியளவில் அண் மித்தபோது அவ்வாயிலூடாக பேய்வெள வால்கள் எனப்படும் 3 சிறிய வெளவால்கள் வாகத்திற்குள் உள்நுழைந்து வான் சாரதியி னதும் உள்ளிருந்த நபர்களினதும் முகங்க ளில் பலமாக தாக்கியுள்ளன.

சம்பவத்தை எதிர்பார்த்திராத சாரதி திடுக் கிட்டு நிலைகுலைந்து வாகனத்தை அருகி லுள்ள மரத்தோடு மோதியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த தாய், மகன் உட் பட வாகன சாரதியான பரமசேகரம் தினுஷன் (வயது 25) என்பவரும் மேசன், கூலியாள் ஆகியோரும் மாஞ்சோலை வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டனர்.

தாயினதும் மகனினதும் மூளையில் இரத தக் கசிவு ஏற்பட்டதனால் மேலதிக சிகிச்சை காக மகன் அநுராதபுரம் வைத்தியசாலையி லும் தாய் யாழ்.போதனா வைத்தியசாலையி லும் அனுமதிக்கப்பட்டனர்.

இருவரும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் தாய் மூளையில் அதிக இரத்தக் கசிவு காரணமாக கடந்த 17 ஆம் திகதி அதி காலை 3.30 மணியளவில் உயிரிழந்துள் ளார்.

இதேவேளை, கண்ணாடிக் கதவுகளை மூடாது வாகனம் செலுத்திய சாரதியை கைது செய்த முள்ளியவளை பொலிஸார் சாரதிக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

மேலும் காட்டுப்பகுதிகளில் வாகனம் செலுத்தும் போது தமது வாகனங்களின் கண்ணாடிக் கதவுகளைப் பூட்டி விட்டு பய ணம் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகின்ற னர். (அ-4)

# மில்க்வைற் கனகராசாவின் 15 ஆவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்திசேவா சங்கத் தினால் நடத்தப்படும் மில்க்வைற் கனகரா சாவின் 15 ஆவது நினைவு தினக் கூட்டமும் ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகளின் ப்ரசநோத்ர மாலிகா வினாவிடை தொகுப்பு பிரசுர நிகழ் வும் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அகில இலங்கை காந்திசேவா சங்க கிளைச் செயலகத்தில் சங் கத்தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நினைவுரைகளை இணு வில் அண்ணா கோப்பி நிறுவன தொழிலதிபர் பொ.நடராசா, காந்திசேவா சங்க சிரேஷ்ட தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை, காந்திசேவா சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளை தலைவர் கா.கார்த்திகேசு, சைவப்புலவர் கு.சுமுகலிங் கம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வினாவிடை தொகுப்பை சோ. க. தம்பிப் பிள்ளை வெளியிட்டு வைக்க, பொ.நடராசா பெற்றுக் கொள்ளவுள்ளார். பிரசுரம் தொடர் பான குறிப்புரையை தி.உதயசூரியன் வழங் கவுள்ளார். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி பத்திரிகைகள்தாம் உலகைக் காட்டும் கண்ணாடிகள்.

~ ஓர் அறிஞர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## வெள்ளோட்ட மரபில் வேட்பாளர் தெரிவு நடக்கட்டும்

எங்கள் பண்பாட்டு மரபுகளை ஒருகணம் ஆழ்ந்து சிந்தித்தால் மிக நுட்பமான நன்றி வெளிப்படுத்தல்களை நாம் அறிய முடியும்.

சூரியனுக்குப் பொங்கல் செய்யும் நாம் பொங்கல் நிறைவுற்றதும் பொங்கல் பானையை இறக்கும் முன்னதாக அகப்பையில் பொங்கல் எடுத்து மூன்று அடுப்பிற்கும் பிரசாதம் வைக்கப்படும்.

பானையைத் தாங்கிய அடுப்பு பொங்குவதற்கு உதவிய நெருப்பு இவற்றிற்கு நன்றி செலுத்தும் வகையிலேயே இந்த ஏற்பாடு.

சூரியப் பொங்கலாக இருந்தாலும் அடுப்பும் நெருப்பும் அந்த இடத்தில் செய்த உதவியை மறக்கலாமோ! ஆகையால் நன்றி மறவாத் தன்மையின் வெளிப்பாடாகவே அந்த நிகழ்வு நடந்தேறுகின்றது.

நன்றியைத் தெரிவித்தல் என்பது அந்தக் கணத்திலேயே செய்தாக வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே அடுப்பிற்கு அவிசு வைக்கின்ற மரபை நம் தமிழர் பண்பாட்டில் காண முடியும்.

இதுபோல வெள்ளோட்டம் என்பது பற்றியும் நாம் இங்கு நோக்குதல் அவசியம். புதிதாகச் செய்த ஒன்றை பயன்பாட்டிற்கு ஈடுபடுத்துவதற்கு முன்னதாக, அதைக் களத்தில் இறக்குவது வெள்ளோட்டமாகும்.

உதாரணமாக புதிதாகச் செய்த தேரை முதன் முதலில் இழுக்கின்ற நிகழ்வு வெள்ளோட்டம் எனப்படும்.

தேர் வெள்ளோட்டத்தின் போது தேரில் சுவாமியை ஏற்றி வடம்பிடித்து இழுப்பது கிடையாது.

மாறாக தேரை உருவாக்கிய சிற்பியை தேரில் இருத்தி ஊர் திரண்டு வடம் பிடித்து தேரை இழுப்பதே நடைமுறை.

ஏன் இந்த நடைமுறை என்ற கேள்வியினூடு,

புதிதாகச் செய்த தேரை இழுக்கும் போது சுவாமியை வைத்து இழுப்பதுதானே நல்லது என்ற கருத்தும் நம் மனங்களைத் துழைக்கும்.

இங்குதான் தமிழர் பண்பாட்டின் நன்றி உணர்வு முன்னிலைப்படுகிறது.

அழகான சித்திரத் தேரை வடிவமைத்த சிற்பிக்கு நன்றி தெரிவிப்பது அவசியம்.

வெள்ளோட்டத்தில் தானே தேரில் அமர்ந்திருக்க போகின்றேன் என்ற சிற்பியின் மனநிலை தேர் வடிவமைப்பில் நிதானத்தையும், சித்திர வேலைப்பாட்டில் அவதானத்தையும் கொடுக்கும்.

ஆக, தேரை நல்ல முறையில் செய்ய வேண்டும் என்ற உணர் நிலையை, சிற்பியிடம் ஏற்படுத்தும் நோக்கிலும் இவ்வாறானதொரு ஏற்பாடு.

ஆக, இப்போது வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவு இடம் பெறுகின்றது. வடக்கு மாகாணத்தில் போட்டியிடுகின்ற கட்சிகள் தங்கள் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது, வெள்ளோட்ட நடைமுறையைப் பின்பற்றி இந்த மண்ணைக் கட்டி எழுப்பக்கூடிய - கட்டி எழுப்பிய சிற்பிகளை வேட்பாளர்களாக்க வேண்டும்.

# தாதியர்கள் மனிதநேயம் மிக்கவர்களாக வாழவேண்டும்

யாழ். தாதிய பயிற்சிக் கல்லூரிக்கு உலகளாவிய ரீதியில் பெருமையுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா பாராட்டு தெரிவித்தார்.

முதலாம் வருட மாணவர்களில் சித்தியடைந்த மாணவர்களை தாதிய சேவைக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு நேற்று கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

தாதிய பயிற்சிக்கல்லூரியின் அதிபர், பொறுப்பாசிரியர்கள் மாணவர்களின் அர்ப்பணிப்பால் ஒரு தாதிய பயிற்சிக் கல்லூரியின் புகழ் உயர்வடைந்துள்ளது. வடமாகாணத்திலும் சரி, யாழ். போதனா வைத்தியசாலையிலும் தாதியர் பற்றாக் குறை தொடர்ந்தும் நிலவிவருகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிய பிரிவுகள் நாளாந்தம் ஆரம்பிக்கப்படுவதனால் தாதியர் பற்றாக் குறை என்பது மேலும் அதிகரித்துச் செல்கின்றது.

தற்போது இங்கு புதிதாக இணைக் கப்பட்டுள்ள மாணவர்கள் மேலும் 2 வருடங்களை பூர்த்தி செய்தவுடன் நோயாளர்கள் உங்கள் கைகளில் ஒப்படைக்கப்படுவர்.

அன்புடனும் பணிவுடனும் நற்பண்புடனும் செயற்பட்டு என்றும் மனித நேயம் மிக்கவர்களாக நீங்களும் வாழ்ந்து பிறரையும் வாழவையுங்கள் என்றார் அவர். (அ-4)

## கொள்ளைச் சம்பவத்தின் முக்கிய சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

அல்வாய் இலகடிப் பகுதியில் கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி இரவு குழந்தையை பணயம் வைத்து நகை, பணம், கையடக்கத் தொலைபேசி என்பவற்றை கொள்ளையடித்த முக்கிய சந்தேக நபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தர விட்டுள்ளது.

சம்பவ தினம் இரவு குழந்தையை பணயம் வைத்து 22 பவுண் நகை 60 ஆயிரம் ரூபா, ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரு கையடக்கத் தொலைபேசி என்பவற்றை கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபரான அல்வாயைச் சேர்ந்தவரை நேற்றையதினம் பருத்தித் துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஆஜர்படுத்தினார். வழக்கை விசாரித்த நீதவான் குறித்த சந்தேக நபரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-9-24)

## சிவன்கோவிலின் உண்டியல் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலிலும் உண்டியல் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தெற்குப்புற வாயிற்கதவை உடைத்தே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது என கோயிற்தொண்டர் ஒருவர் தெரிவித்தார்.

திருடப்பட்ட பணத்தின் பெறுமதியை வெளியிட மறுத்த ஆலய நிர்வாகி பெரியளவில் திருட்டு இடம் பெறவில்லை எனவும் கூறினார்.

இதேவேளை அண்மையில் கே.கே.எஸ். வீதியிலுள்ள கதிரேசன் முருகன் கோயில், பிள்ளையார் கோயில் என்பவற்றிலும் உண்டியல் திருட்டு இடம்பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

## திறப்பு விழா

வாழும் கலை அமைப்பின் யாழ். நிலையத் திறப்பு விழா எதிர்வரும் 22ஆம் திகதி மாலை 5 மணியளவில் இல. 254, பிறவுண்வீதியில் இடம் பெறவுள்ளதாக அவ்வமைப்பின் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளரும் வாழும் கலைப்பயிற்சி ஆசிரியருமான கே.கே. கணேஸ்ஜி தெரிவித்தார். (அ-6)

## தொழில்நுட்பத்திறன் விருத்தி பயிற்சிக்கான நேர்முகத்தேர்வு

வடமாகாணதொழிற்துறைதிணைக்களம், செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் தொழில் நுட்பத்திறன் விருத்திப் பயிற்சி நெறிக்கான நேர்முகத் தேர்வு நாளை ஞாயிற்றுக் கிழமைமையும் மறுநாள் திங்கட்கிழமையும் முற்பகல் 8.30 மணி முதல் பிற் பகல் 2 மணிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி அதிகாரசபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதன்படி நாளை ஞாயிற்றுக்கிழமை வீட்டு மின்னிணைப்பு பயிற்சி நெறிக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கும், மறுநாள் திங்கட்கிழமை நீர் குழாய் பொருத்துதல் பயிற்சி நெறி, கட்டட வேலைப் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கும் மேற்படி நேர்முகத் தேர்வு நடை பெறவுள்ளது.

இவ்வாறு நேர்முகத் தேர்வில் பங்கு கொள்ளவரும் விண்ணப்பதாரிகள் தேசிய அடையாள அட்டை, வருகைப் பத்திரம் மற்றும் கல்வித்தகைமை சான்றிதழ் ஆகியவற்றின் போட்டோப் பிரதி, கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடச் சான்றிதழ், வங்கிக் கணக்குப்புத்தகம் என்பவற்றுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### உன் பணியில் நிறைவு கொள்



❁ பிறர் எவ்வளவு தீயவரானாலும் நீங்கள் அவருக்கு கேடு நினைக்காதீர்கள். அதனால் உங்களுக்கு நீங்களே கேடு செய்தவராவீர்கள்.

❁ எந்த வேலையையும் தன் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றுபவரே அறிவாளி. அவரால் எந்தப் பணியிலும் மகிழ்ச்சியோடு ஈடுபடமுடியும்.

❁ ஒருநாள் மனிதன் இறப்பது உறுதி. அதற்குள் ஒரு பெரிய குறிக்கோளை ஏற்றுக்கொண்டு அதற்காக பாடுபட்டு அடைய முயற்சிப்பது நல்லது.

❁ மனதில் அன்பு நிறைந்தவரே வாழ்ந்து கொண்டிருக்கிறார். சுயநலம் கொண்டவரோ வாழவே முயற்சிக்கவில்லை.

❁ முதலில் வேலையாளாக பணியாற்றக் கற்றுக்கொள்ளுங்கள். பின்னர் தானே எஜமானராகும் தகுதி வந்து சேரும்.

❁ ஒருவரிடத்திலும் பொறாமைப்படாதீர்கள். நன்மை செய்வோர் ஒவ்வொருவருக்கும் கைகொடுக்கத் தயாராய் இருங்கள்.

❁ துன்பமற்ற இன்பத்தையோ இன்பமற்ற துன்பத்தையோ உலகில் ஒருவராலும் பெறமுடியாது.

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



அகவாழ்க்கை, புறவாழ்க்கை இந்த இரண்டிற்கும் எந்தவிதமான முரண்பாடும் இல்லை. ஆன்மீக வளர்ச்சிக்காக உங்களை நீங்கள் தெரிந்து கொள்வதற்கு எந்த நிலையில் இருக்கிறீர்களோ அங்கிருந்தே பயணத்தை ஆரம்பிக்கவேண்டும். ஆனால் இங்கே புறவாழ்க்கையில் எழும் ஆசைகள் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். இந்த ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள விழையும்போது அணுகுமுறையைச் சற்று மாற்றிக் கொள்ளவேண்டும்.


அகவாழ்க்கையின் வழிமுறையைப் புறவாழ்வுக்குப் பயன்படுத்தக்கூடாது. அகவாழ்க்கையில் எதையுமே செய்யக்கூடாது. ஆனால் புறவாழ்க்கையில் எல்லாவற்றையும் செய்யவேண்டும். புறவாழ்க்கைக்குத் தொடர்புள்ள ஆசைகள் நிறைவேற வேண்டுமானால் நீங்களே என்னிடம் எனக்கு இது வேண்டும் அதுவேண்டும் என்று தெளிவாகக் கேட்க வேண்டும். பல சமயங்களில் பெரும்பாலான மக்களுக்கு என்ன வேண்டும் என்ற தெளிவு இருப்பதில்லை. நீங்கள் தெளிவாக இல்லை என்றால் நான் செயற்படமாட்டேன். யோசித்துக்கொண்டிருக்கும் போதே நீங்கள் உங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்கிறீர்கள்.

நீங்கள் இவ்வாறு தெளிவில்லாது இருப்பதால் என்னால் செயற்பட முடிவதில்லை. அதனால் இதில் எந்த முரண்பாடும் இல்லை. அகவாழ்க்கையில் இருக்கும் இடத்திலேயே நிற்கவேண்டும். ஒருவேளை பொறாமை இருந்தால் அதிலேயே இருங்கள். அவ்வளவுதான். அப்போதைக்கு பொறாமை இருக்கிறது என்பது மட்டுமே உண்மை.

நான் பொறாமையின்றி இருப்பேன் என்று நீங்கள் கூறினால் அது சாத்தியமல்ல. பொறாமைதான் இருக்கிறது. அதுவே உங்கள் சத்தியம். ஆனால் வெளியுலகத்தில் நீங்கள் வீடுவாங்க விரும்புகிறீர்கள். பணம் சம்பாதிக்க ஆசைப்படலாம். பல பொருட்கள் வேண்டும் என்றும் ஆசைப்படலாம். அதற்கு நீங்கள் செய்யக்கூடிய மிகச்சிறந்த செயல் போதுமான அளவு முயற்சியெடுத்து பின்பு என்னைக் கேட்பது அவ்வளவுதான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட்டின் 'அவதாரம்' சச்சினைப் பற்றி தவறாகப்



# புலம்பினார் பொண்டிங்!

கிரிக்கெட்டின் அவதாரம் என வர்ணிக்கப்படும் சச்சின் டெண்டுல் கரை விட, பிரைன் லாரா அதிக மான போட்டிகளை தனது அணிக் காக வென்று கொடுத்துள்ளதாக றிக்கி பொண்டிங் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இவருடைய இந்தக் கருத்து தவறானது என புள்ளி விபரங்கள் தெளிவாக நிரூபிக்கின்றன.

சர்வதேச கிரிக்கெட் போட்டிக ளில் இந்திய நட்சத்திர வீரர் சச் சின், அவுஸ்திரேலியாவின் ஓய்வு பெற்ற பொண்டிங் இடையே, எப் போதும் போட்டி இருந்து கொண்டே இருக்கும்.

டெஸ்டில் சச்சினின் அதிக சத (51) சாதனையை துரத்தியவர். ஒரு கட்டத்தில் சச்சின் தொடர்ந்து விளாச, பொண்டிங்கினால் இவரை எட்ட முடியவில்லை. பொண்டிங் ஓய்வு பெற்றுவிட, சச்சின் சதத்தில் 'சதம்' கடந்து, இன்னும் கிரிக்கெட் டில் நீடிக்கிறார்.

இப்போது திடீரென, அணியின் வெற்றிக்கு கைகொடுப்பதில் சச்சினை விட லாரா சிறந்தவர் என்கிறார். புள்ளிவிவரங்கள் இதை மறுக கின்றன.

சச்சின் அடித்த 51 டெஸ்ட் சதத் தில், 20 வெற்றி (39.01 சதவீதம்), 11 தோல்வி கிடைத்தது. ஆனால், லாரா அடித்த 34 சதத்தில் 8இல் தான் (23.52) மேற்கிந்தியத் தீவு கள் அணி வெற்றி பெற்றது. 14 இல் அவரது அணி தோல்வியடைந்தது.

வெற்றி பெற்ற டெஸ்ட் போட்டிக ளில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் கள் வரிசையில், சச்சின் 5ஆவது இடத்தில் வருகிறார். அதேநேரம், தோல்வியடைந்த டெஸ்ட் போட்டிக ளில் அதிக ஓட்டங்கள் எடுத்ததில் முதலிடம் லாராவுக்குத்தான்.

அதாவது, மேற்கிந்தியத் தீவு கள் தோல்வியடைந்த 63 டெஸ்டில; லாரா 5316 ஓட்டங்கள் ( 14 சதம்) எடுத்துள்ளார். இந்த பட்டியலில் சச் சின் மூன்றாவது இடத்தில் (56 டெஸ்ட், 4088 ஓட்டங்கள்) தான் உள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் இரு இன் னிங்சிலும் சேர்த்து, குறைந்தது 200 அல்லது அதற்கு மேல் ஓட்டங் கள் எடுத்தும், அணி தோற்றதில் லாரா தான், சச்சினை விட முதலி டத்தில் உள்ளார். அதாவது 8 முறை லாரா 200, 207, 213, 218, 221, 232, 243, 351 என ரன்கள் எடுத்த போதும், அவரது அணி தோற்றது.

அதேநேரம், சச்சின் இரு இன் னிங்சிலும் சேர்த்து 208 ஓட்டங் கள் எடுத்த, ஒரு போட்டியில் (1998, ஆஸி., பெங்களூர்) தான் இந்தியா தோற்றது. ஆனால், அணியின் வெற்றிக்கு கைகொடுப்பதில் லாரா தான் முன்னணியில் உள்ளதாக பொண்டிங் கூறுகிறார்.

லாரா பங்கேற்ற டெஸ்டில் வெற்றி சதவீதம் 24.42. இதில் லாராவின் பங்கு 24.50 சதவீதம். ஆனால் சச்சினின் வெற்றி சதவீதம் 35.35. இதில், இவரது பங்கு மட்டும் 37.01 சதவீதமாக உள்ளது.

இதேபோல, ஒருநாள் போட்டிக ளிலும் சச்சின் (62 ஆட்ட நாயகன்) தான், லாராவை (30) விட முன் னணியில் உள்ளார். புள்ளி விவ ரங்கள் இப்படி இருக்க, பொண்டிங் எதை வைத்து சச்சினை விட, லாரா 'டாப்' என்றாரோ, இது அவருக்கே வெளிச்சம்.

### காரணம் ?????

பிறிமியர் தொடரில் சச்சினுடன் இணைந்து விளையாடிய பொண் டிங் சொதப்பினார். இதனால், அடுத்த தொடரில் பங்கேற்பது சந்தேகம் தான். இதனிடையே, ஜூலை 29 முதல் ஆக., 26 வரை, மேற்கிந்தி யத் தீவில் முதல் கரீபிய 'ருவென்ரி -20' தொடர் நடைபெறவுள்ளது. முதன் முதலில் ஒப்பந்தம் செய்யப் பட்ட வெளிநாட்டு வீரர் பொண்டிங். இதற்காக, மேற்கிந்தியத் தீவுகள் செல்லவுள்ள நிலையில், லாராவை புகழ்ந்துள்ளார் என்று கூறப்படு கிறது.

## இலங்கை - தென்னாபிரிக்கா ஆட்டம் இன்று


தென்னாபிரிக்கா - இலங்கை அணிகளுக்கிடையிலான முத லாவது ஒருநாள் போட்டி இன்று நடைபெறுகிறது.

டிவில்லியர்ஸ் தலைமையி லான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பய ணம் மேற்கொண்டு 5 ஒருநாள் போட்டி மற்றும் மூன்று 20 ஓவர் போட்டியில் விளையாடுகிறது.

கொழும்பில் நடைபெறும் முதல ஒரு நாள் போட்டி பி.ப.2.30 மணிக்கு ஆரம்பமாகிறது. மேற்கிந்தியத் தீவுகளில் இடம்பெற்ற முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் மெதுவாக பந்து வீசியதால் இலங்கை அணித் தலைவர் மத்யூசுக்கு 2 ஆட்டத் துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கை அணிக்கு சண்டி மால் தலைவராக நியமிக்கப்பட்டு உள்ளார்.

தென்னாபிரிக்க அணி தனது பயிற்சி ஆட்டத்தில் வெற்றி பெற்றுள் ளதால் அதிக நம்பிக்கையுடன் உள்ளது.

## மிக்கி ஆர்தரை கடுமையாக சாடுகிறார் மெக்ராத்



மிக்கி ஆர்தர்

அவுஸ்திரேலிய முன்னாள் பயிற்சியாளரான மிக்கி ஆர்தரின் குற்றச்சாட்டு மிக மோசமானது. அவர் கூறியுள்ள கருத்து ஏமாற்ற மளிக்கிறது என முன்னாள் அவுஸ் திரேலிய வேகப்பந்து வீச்சாளர் கிளன் மெக்ராத் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் தொடர் தோல்வி உள்ளிட்ட பல் வேறு பிரச்சினைகள் காரணமாக அந்த அணியின் பயிற்சியாளராக இருந்த மிக்கி ஆர்தர் அதிரடியாக நீக்கப்பட்டார்.

இதையடுத்து கோபமடைந்த ஆர்தர், தான் பயிற்சியாளராக இருந்தபோது இனரீதியான பாகு பாட்டைச் சந்தித்ததாகவும், வொட் சனை, அவுஸ்திரேலியாவின் 'புற்றுநோய்' என அணித் தலைவர் கிளார்க் குறிப்பிட்டதாகவும் கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். இந்த நிலையில் அது தொடர்பாக மெக்ராத் கூறுகையில்,

தான் பயிற்சியாளராக இருந்த அணி குறித்து மிக்கி ஆர்தர் தற் போது குற்றம்சாட்டியுள்ளது அந்த அணி மீது அவருக்கு கொஞ்சம் கூட அக்கறை இல்லை என்பதையே காட்டுகிறது.

ஆர்தரின் கருத்து ஏமாற்றமளிப் பதாக உள்ளது. அதில் எந்த சந்தே கமும் இல்லை. இனரீதியான பாகு பாடு மற்றும் வொட்சன் குறித்து ஆர்தர் கூறியுள்ள கருத்து மிக மோசமானதாகும். அதுபோன்ற பிரச்சினைகளை கிளப்புவதற்கான நேரம் இது கிடையாது என்றார்.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் இங்கிலாந்து - அவுஸ்திரே லியா அணிகள் இடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடர் குறித்துப் பேசிய மெக்ராத், 'அவுஸ்திரேலிய அணி தோல்வியில் இருந்து மீண்டு வெற் றிப் பாதைக்கு திரும்பும் என்றார்.

## இன்னும் 5 வருடங்கள் போட்டிகளில் பங்குகொள்ளமுடியும்

**- ஹர்பஜன் சிங்**

தொடர்ந்தும் கிரிக்கெட் போட்டி களில் பங்குபற்ற எதிர்பார்ப்பதாக வும், இன்னும் 5 வருடங்களாவது தன்னால் கிரிக்கெட் போட்டிகளில் பங்குப்ற்ற முடியுமெனவும் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக இந்திய அணியில் இடம் கிடைக்காது காணப் படும் ஹர்பஜன் சிங் இது தொடர் பாக தெரிவிக்கையில், அடுத்த 2,3 மாதங்களில் தன்னால் முடிந்த அத்தனையையும் செய்து, மீண் டும் அணியில் இடம் கிடைக்க முயற சிக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

தனக்குக் கிடைக்கும் வாய்ப் புக்களில் எந்த வகையான கிரிக் கெட்டையும் விளையாடத் தயாராக வுள்ளதாகத் தெரிவித்த ஹர்பஜன் சிங், சம்பியன்ஸ் லீக் ருவென்ரி ருவென்ரி தொடரில் பங்குபற்ற எதிர்பார்ப்புடன் காணப்படுவதாக வும் தெரிவித்தார்.

அணியில் தெரிவு செய்யப்படாமை தனக்கு மனச்சோர்வை ஏற்படுத்த வில்லை எனக் குறிப்பிட்ட அவர், கிரிக்கெட் தனக்கு எல்லாமுமாகக் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

## ஊக்கமருந்து சர்ச்சையில் சங்வான்

ஆறாவது ஐபிஎல் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக காக விளையாடிய வேகப்பந்து வீச்சாளர் பிரதீப் சங்வான் ஊக்க மருந்து சோதனையில் சிக்கியுள்ளார.

அவர் பயன்படுத்தியிருப்பது ஊக்கமருந்தா அல்லது தடை செய் யப்பட்ட மருந்துப் பொருளா என்பது குறித்து இன்னும் தெரியவில்லை.

ஏற்கனவே சூதாட்ட விவகாரத் தால் திக்கு முக்காடியிருக்கும் ஐபி எல் போட்டி அமைப்பாளர்களுக்கு, இப்போது ஊக்கமருந்து விவகாரம் மேலும் பின்னடைவை ஏற்படுத்தி யுள்ளது.


ஒவ்வொரு ஆண்டும் ஐபிஎல் போட்டிக்கு முன்னதாகவும், போட்டி முடிந்த பின்பும் போட்டியில் பங் கேற்ற வீரர்களுக்கு ஊக்கமருந்து சோதனை மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி இந்த ஆண்டு மேற்கொண்ட சோதனையில் பிரதீப் சங்வான் சிக்கியுள்ளார். அவரின் 'ஏ' மாதிரி யில் அவர் ஊக்கமருந்து பயன்படுத் தியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிசிசிஐயின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகை யில், 'பிரதீப் சங்வானின் 'ஏ' சோத னையில் அவர் தடை செய்யப்பட்ட பொருளை பயன்படுத்தியது உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக டில்லி மற்றும் மாவட்ட கிரிக்கெட் சங்கத்துக்கு தெரிவிக்கப் பட்டுள்ளது என்றார்.

பிரதீப் சங்வான் பயன்படுத்தி யிருப்பது தடை செய்யப்பட்ட மருந் துப் பொருளா அல்லது ஊக்க மருந்தா என்பது குறித்து இன்னும் தெரிய வில்லை. 'பி' மாதிரி சோதனை முடிவு வெளியான பிறகே அது குறிதது கண்டறிய முடியும் என்று பிசிசிஐ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஊக்கமருந்து போன்ற விட யங்களை பிசிசிஐ சகித்துக் கொள் ளாது. எனினும் தற்போதைய சூழ லில் சங்வான் மீது என்ன நட வடிக்கை மேற்கொள்ளப்படும் என் பது குறித்து எதுவும் தெரிவிக்க முடி யாது என பிசிசிஐ அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

டில்லியைச் சேர்ந்த 22 வயது சங்வான், 2008இல் 19 வயதுக்குட் பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் இந்தியா வெல்வதற்கு முக்கிய பங்காற்றியவர். ரஞ்சிப் போட்டியில் டில்லி அணிக்காக விளையாடி வரும் இவர், கடந்த இரு ஐபிஎல் போட்டிகளில் கொல்கத்தா அணிக்காக விளையாடி வருகி றார். கடந்த ஐபிஎல் போட்டியில்




இரு ஆட்டங்களில் மட்டுமே விளை யாடிய சங்வான், விக்கெட் எதுவும் எடுக்கவில்லை. 38 முதல் தர போட்டிகளில் விளையாடியுள்ள சங்வான் 123 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

ஐபிஎல் வரலாற்றில் ஊக்க மருந்து பயன்படுத்தியதாக பிடி பட்டுள்ள 2ஆவது வீரர் சங்வான் ஆவார். முன்னதாக 2008இல் நடைபெற்ற முதல் ஐபிஎல் போட்டி யில் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஆசிப் ஊக்க மருந்து பயன்படுத்தியதாக சிக்கி னார். அதைத் தொடர்ந்து அவருக்கு ஓர் ஆண்டு தடை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து அபாரம்; தடுமாறுகிறது ஆஸி



கிரேம் ஸ்வானின் அபார பந்துவீச்சின் மூலம் இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ்

தொடரின் 2-வது போட்டியில் அவுஸ்திரேலியா அணி தடுமாற்றத்தைச் சந்தித்துள்ளது.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆஸி அணி அங்கு நடைபெறும் 5 போட்டிகள் கொண்ட வரலாற்றச் சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்குபற்றுகிறது.

இதன் முதல் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ள நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 2-வது போட்டி லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஆரம்பத்தில் ஆஸி அணியின் பந்துவீச்சில் தடுமாற்றத்தை சந்தித்தது. ஒரு கட்டத்தில் அவ்வணி முக்கிய 3 விக்கெட்டுக்களை 28 ஓட்டங்களுக்குள் இழந்து தடுமாறியது.

எனினும் 4-வது விக்கெட்டுக்காக ட்ரொட் - குக் ஜோடியினால் பகிரப்பட்ட 99 ஓட்டங்களும், பின் 5-வது விக்கெட்டுக்காக பெல் - பேயர்ஸோ தமக்கிடையில் பகிர்ந்த 144 ஓட்டங்கள் உதவியுடனும் அவ்வணி தமது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 361 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக பெல் 109, பேயர்ஸோ 67, ட்ரொட் 58 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ஆஸி அணி சார்பாக றியான் ஹறிஸ் 72 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸி அணி, இங்கிலாந்து வீரர்களின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 53.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக ஷேன் வோட்சன் 30, அணித் தலைவர் மைக்கல் கிளார்க் 28 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக கிரேம் ஸ்வான் 44 ஓட்டங்களைக்கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.



233 ஓட்டங்கள் முன்னிலையுடன் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி நேற்றைய 2-ம் நாள் நிறைவில் 20 ஓவர்களைச் சந்தித்து 3 முக்கிய விக்கெட்டுக்களை 31 ஓட்டங்களுக்குள் இழந்து தடுமாற்றத்தைச் சந்தித்துள்ளது.

துடுப்பாட்டத்தில் ஜோ ரூட் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களை எடுத்துள்ளார். முன்னணி வீரர்களான குக், ட்ரொட், பீற்றர்சன் முறையே 8, 0, 5 என விரைவாக வெளியேறினர்.

ஆஸி அணியின் பந்துவீச்சில் வீழ்த்தப்பட்ட 3 விக்கெட்டுக்களையும் பீற்றர் சிடில் 5 ஓவர்களில் 4 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து கைப்பற்றினார்.

போட்டியின் 3-ம் நாள் ஆட்டம் இன்றாகும். இந்நிலையில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 261 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

# சுகாதாரமின்றி இயங்கிய 4 கடைகள் கண்டுபிடிப்பு

## அபராதமும் விதிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையின் போது தூய்மைக்கு புறம்பாக இயங்கி வந்த 4 பல்பொருள் வாணிபக் கடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை யாழ்.நகர் பொது சுகாதார பரிசோதகர் பகுதி I இற்குரிய யாழ் நகர் பரிவு I ஐ சேர்ந்த புண்ணியமூர்த்தி ஆறுமுகதாசன் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழுவினர் யாழ் நகரிலுள்ள பலசரக்கு கடைகளில் திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந் நடவடிக்கையின் போதே காலாவதியான பொருட்களுடன் தூய்மையற்ற நிலையில் சுகாதார சீர்கேடுகளுடன் காணப்பட்ட 4 பலசரக்கு கடைகள் இனம் காணப்பட்டன.

உடனடியாக செயலில் இறங்கிய பரிசோதகர் குழுவினர், குறித்த கடைகளின் உரிமையாளர்களையும் சான்றுக்குரிய பொருட்களை யாழ். மேல்நீதிமன்றத்தில் நேற்று மாலை வழக்குத் தாக்கல் செய்து ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குற்றவாளிகளுக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் நாற்பதாயிரம் ரூபாய் அபராதம் விதித்தார்.

அத்தோடு அதில் குறிப்பிட்ட ஒரு கடை நீதிமன்றிற்கு சுகாதார அறிக்கை சமர்ப்பிக்கும் வரை மூடவும் நீதிவான் உத்தரவிட்டார்.(செ)

# 'மெட்ராஸ் கபே...

என்கிற ஹிந்தி மொழி திரைப்படம், இந்திய-இலங்கை அரசுகளின் அரசியல் நோக்கங்களை முன்னெடுக்கும் உள் நோக்கத்துடன் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அதனாலேயே அதைத் திரையிட அனுமதிக்கக் கூடாது என்று தாம் கோருவதாகவும் சீமான் தெரிவித்தார்.

இந்த குறிப்பிட்ட திரைப்படத்தை தமக்கு முதலில் போட்டுக் காட்டிய பிறகே திரையிட அனுமதிக்க வேண்டும் என்று கோரிய சீமான், தான் இந்தத் திரைப்படத்தை இதுவரை பார்க்கவில்லை என்றும் தெரிவித்தார்.

அதேசமயம் இந்த திரைப்படத்தில் பணிபுரிந்த பல்வேறு தமிழ் தொழில்நுட்பவியலாளர்கள் இந்த திரைப்படம் இலங்கை தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் விதமாக இருப்பதாக தம்மிடம் தெரிவித்திருப்பதாக கூறினார் சீமான்.

விடுதலைப்புலிகள் அமைப்பு என்பது ஒரு பயங்கரவாத அமைப்பு என்றும், அதன் போராளிகள் அனைவரும் பயங்கரவாதிகள் என்றும், போரின்போது அவர்கள் மக்களை கேடயங்களாக பயன்படுத்தினார்கள் என்றும் இந்த திரைப்படத்தில் காட்டப்படுவதாக தம்மிடம் அவர்கள் தெரிவித்திருப்பதாகவும் சீமான் கூறினார். இதன் அடிப்படையிலேயே தாம் இந்த திரைப்படத்தை எதிர்ப்பதாகவும் சீமான் தெரிவித்தார். (செ-11)

# வடக்குத் தேர்தலில்...

மாகாணங்களுக்கு விஜயங்களை மேற்கொண்டோம். குறிப்பாக வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் நுவரெலியா ஆகிய பகுதிகளுக்கு சென்று குடியியல் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் அமைப்புக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தோம்.

அதேவேளை, நாம் இங்கு தங்கியிருந்த நாட்களில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன், சூழல் பாதுகாப்பு மற்றும் எரிசக்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் பொருளாதார அபிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினோம். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

அதேவேளை, நாம் நாட்டின் அபிவிருத்தி, சுகாதாரம் மற்றும் கல்வி போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தினோம். குறிப்பாக பொது நிர்வாக விடயங்கள் தொடர்பில் வடக்கல் படையினரின் பிரசன்னம் அதிகமாகவுள்ளதை காணமுடிகின்றது. வடக்கின் குடியியல் நிர்வாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். பொது விடயங்களில் படையினரின் தலையீடு அதிகமாக இருந்தால், அது நாட்டின் எதிர்கால பொருளாதார முதலீடுகளுக்கு பெரும் பாதிப்பாக அமையும்.

காணாமல்போனோர் தொடர்பில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமையே காணப்படுகின்றது. அது தொடர்பில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. இது முக்கியமான விடயமாகும். வடக்கில் பல குடும்பங்களின் உறுப்பினர்கள் காணாமல் போயுள்ளனர்.

வடக்கில் உட்கட்டுமான வேலைகள் இடம்பெறுகின்றன. குறிப்பாக நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் அனைத்தையும் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

வட மாகாண சபைத் தேர்தல் சுயாதீனமாகவும் நீதியாகவும் இடம்பெற வேண்டும். இங்கு தேர்தல் பரப்புரை வேலைகள் சுயமாக எவ்வித அழுத்தங்களுமின்றி இடம்பெற வேண்டும்" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# மனித உரிமை நிலைமை...

கடந்த ஏப்ரல், யூன் மற்றும் யூலை மாதங்களில் மனித உரிமைகள் சம்பந்தமான சாதக மற்றும் பாதக விடயங்கள் ஒருமித்தே இடம்பெற்றுள்ளன.

எவ்வாறாயினும், கடந்த மே மாதம் ஜெனீவாவுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க வெளியிட்ட அறிவிப்புக்கள் வரவேற்கத்தக்கன.

அவர் சனல்-4 தொலைக்காட்சியின் காணொளிகள் தொடர்பில் அரசாங்கம் விசாரணை நடத்தும் எனவும், மேலும் பல நிலுவையில் உள்ள வழக்குகள் துரிதமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், காணாமல்போனவர்கள் மற்றும் கைது செய்யப்பட்டவர்கள் குறித்த பெயர் விபரங்கள் வெளியாகும் என்றும் தெரிவித்திருந்தார்.

இவற்றை வரவேற்றுள்ள பிரித்தானியா, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை வருகின்றமை, வட மாகாணத்தில் தேர்தல் அறிவிப்பு வெளியாகியுள்ளமை என்பவற்றையும் வரவேற்றுள்ளது.

அதேநேரம், கடத்தப்பட்ட மற்றும் கைது செய்யப்பட்டவர்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டதாக கூறப்படுகின்ற போதும், அவற்றை அறிந்துக் கொள்வதற்கான சுதந்திரம் இல்லை

கடந்த மாதங்களில் பாரிய அளவில் வட மாகாணம் உள்ளிட்ட பல பகுதிகளில் காணி அபகரிப்புகள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பில் பொதுமக்கள் கடந்த மே மாதம் 15-ம் திகதி வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இதற்கிடையில் அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் 13-ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்யவதற்கான யோசனை ஒன்றை பாராளுமன்றத்தில் முன்வைத்திருந்தார்.

அத்துடன் மத்திய மலை நாட்டின் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதனத்துக்காக போராட்டம் நடத்திய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மீது, அரசாங்க தரப்பு கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தி இருந்தனர்.

இவ்வாறான மனித உரிமைகளுக்கு பாதகமான நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன. இந்த நிலையில் இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் தொடர்ந்தும் கவலைக்குரியதாகவே இருப்பதாக பிரித்தானிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய...

செயலாளர் ரில்வின் சில்வா,

மாகாண சபைகளின் அதிகாரங்களை நீக்க வேண்டும் என்று கூறியவர்களை தற்பொழுது தேடிக் கொள்ளவும் முடியாதுள்ளது. அவர்களின் வாய்கள் மூடப்பட்டு விட்டன. பசில், சென்றார். மேனன் வந்தார் நிலைமை மாறியது.

அன்று போல் இன்றும் அரசாங்கம், இந்தியாவின் தாளத்திற்கு ஏற்ப அடியை வைத்து ஆடுகிறது. 1987 ஆம் ஆண்டு அப்படியே நடந்தது. இன்றும் அப்படியே நடக்கிறது.

மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்ற முடிவை, அரசாங்கம் ஆறு மாதங்களுக்கு முன்னர் எடுத்தது. தேர்தலுக்கு பின்னர், பொலிஸ், காணி அதிகாரங்களை நீக்குவது என்பது இலகுவான காரியமல்ல.

அவ்வாறு நீக்கினால், இன்றுள்ள நிலைமையைவிடப் பாரதூரமான நிலைமை ஏற்படும். 13-வது திருத்தத்தின்படி வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுகிறது. அதற்குதான் மக்களின் ஆணை கிடைக்கும்.

தேர்தல் நடந்த பின்னர், அதிகாரங்களை நீக்குவது மக்கள் ஆணையை தரம் தாழ்த்தும் நடவடிக்கையாகும். இது தற்போதைய நிலைமையை விடப் பாரதூரமான நிலைமையை ஏற்படுத்தும் என தெரிவித்தார்.

இங்கு பேசிய ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க,

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் பிரயோசனமான வேலையை செய்ய அரசாங்கம் முயற்சிக்கவில்லை. வீணாக மக்களைத் தூண்டி வருகிறது. மக்களுக்கு ஒன்றை கூறுகிறது. இந்தியாவுக்கு மற்றுமொன்றை கூறுகிறது. பிரிவினைவாதிகளுக்கு வேறொன்றைக் கூறுகிறது.

மாறி,மாறி இவர்களை சமாளிக்கவே அரசாங்கம் முயற்சிக்கின்றது. வெறும் கதை மட்டும் தான் எதுவும் நடைபெறப் போவதில்லை என்றார். (செ-11)

# நிறைவேற்று...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் மட்டுமல்லாது அவர்களின் வீடுகளில் உள்ள தோட்டங்களில் வேலை செய்யும்தொழிலாளிகூட நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்துகிறார்.

1978 ஆம் ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தன கொண்டுவந்த நிறைவேற்று அதிகாரத்தை, தற்போது கொழும்புக்கு வெளியில், தூர இடங்களில் உள்ள பிரதேச சபைகளில் இருப்பவர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

அதற்கான புறச்சூழல் உருவாகியுள்ளது.

நாட்டில் அமைதி, ஒழுங்கை பாதுகாக்கவே பொலிஸ் இருக்கின்றது. இதனால் பொலிஸ் சுதந்திரமான நிறுவனமாக இருக்க வேண்டும். ஆனால் இன்று பொலிஸ், அரசியல் பொலிஸாக மாறியுள்ளது.

பொலிஸ் தற்போது, பிரதேச சபை, மாகாண சபை உறுப்பினர்களுக்கு பயந்து செயற்படுகிறது. இதனால், பொலிஸார் அவர்களின் அடிப்பணிந்த சேவகர்களாக மாறி விட்டனர் என தெரிவித்தார். (செ-11)

# வடக்குத்...

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற போருக்குப் பின்னரான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் இன்னும் நிலுவையில் இருப்பதை எமது வட பகுதிக்கான விஜயத்தின் போது காண முடிந்தது" என்றும் ஜீன் லம்பேர்ட் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# கூட்டமைப்பு...

அமைப்புக்கு 01 வேட்பாளரும், ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கு 01 வேட்பாளரும் எனப் பங்கிடப்பட்டது.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சிக்கு 02 வேட்பாளர்களும், ரெலோவிற்கு 02 வேட்பாளர்களும், ஈ.பி.ஆர். எல். எவ் இற்கு 02 வேட்பாளர்களும், புளொட் அமைப்புக்கு 01 வேட்பாளரும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 01 வேட்பாளருமெனப் பங்கிடப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் ரெலோவுக்கு 3, தமிழரசுக் கட்சிக்கு 2, ஈபிஆர்எல்எவ்விற்கு 2, கூட்டணிக்கு 1, புளொட்டிற்கு 1 என்ற பிரதிநிதித்துவம் ஒதுக்கப்பட உள்ளதாக தெரியவருகிறது. எனினும் இதில் மாற்றங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் சம்பந்தமாக சில முடிவுகள் எடுக்கப்பட்டாலும் இறுதி முடிவு இன்று சனிக்கிழமை கூடி எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களின் வேட்பாளர்கள் நியமனம் தொடர்பில் மீண்டும் இன்று கூடி இறுதி முடிவு எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-4,11)

# தேர்தல் களத்தில்...

காலங்களில் இவ்வாறான அரசாங்க சொத்துக்கள் கட்சிகளின் தேர்தல் செயற்பாடு களுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தமையைக் கருத்தில் கொண்டே இந்த சுற்றறிக்கை முன்கூட்டியே வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தேர்தல் நடைபெறும் மாகாணங்களில் அரசாங்க அதிகாரிகளுக்கான பதவி நியமனங்கள், இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகளை தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில் வழங்க கூடாது என்றும் இந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (செ-11)


Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன்-Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து- Dutch (டச்) புதிய பிரிவுகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

Tel: 0213216928, 0774842464 (Gov. Reg.No: W/A 76795) (சி-3883)

மலேசியாவில் படிக்க உழைக்க சொற்ப பணம் போதும்

O/L, 24 வயதிற்குட்பட்டவர்கள் Hotel முகாமைத்துவக் கற்கை நெறிகள் 4 மாத முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள், தகுதியான, கவர்ச்சியான சம்பளத்துடன் மலேசியாவிலும் உலகமெங்கும் வேலைவாய்ப்பு.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 0212219016, 0215689090 (C-4074)



FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH

FRENCH CLASSES

France, Canada, Swiss, Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட சர்வதேச Certificates இனை பெறலாம்

ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France - 2007)

இது வரைக்கும் 718 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்...

ஆரம்பம் : 03.08.13 Sat at 10 am No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital க்கு அண்மையில்).

ஆரம்பம் 05.08.13 Mon at 3.30pm No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)

DELF பரீட்சையில் யாழில் எமது நிறுவனத்திலேயே அதிகமானோர் சித்தி

0779 789 456

DEUTSCH, IELTS, B1, ITALIAN, & SINHALA CLASSES......

சிங்கப்பூர்
STUDY & WORK with HIGH PAYEQ PLACEMENT
HOTEL MANAGEMENT
With GCE(O/L)

* 3 மாதம் படிப்பு, 6 மாதம் சம்பளத்துடன் கூடிய பயிற்சி
* பயிற்சியின் போது மாதம் Rs 100,000 மேல்
* Payment after the Visa
* படிப்பின் பின்னர் UK, NEW ZELAND & FRANCE போன்ற இடங்களுக்கு இடமாற்றம் பெறமுடியும்

* Condition Apply

கனடா WORK PERMITS
58 Categories in Demand
Cleaners (M/F) Office Boys Carpenter
Helth Care Nurse Montessori Teacher

யப்பான் WORK PERMITS
Males Only

தினமும் எம்மை சந்திக்க முடியும்
Every day you will meet us

GSW GLOBAL STUDY & WORK CONSULTANTS
Tel : 077 007 1835
Mail : gs.workvisa@gmail.com

யாழ். ஒடியல் கூழ் விற்பனைக்கு

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட ஒடியல் கூழ் ஒவ்வொரு, சனி, ஞாயிறு கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம்.

500 மி.லீற்றர் 150 ரூபா மட்டுமே!

சண்ஜெயா பூட் லான்ட் (கிளை)

713, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 221 7070, 0776777500

ஆரம்பமாகின்றன புதிய பிரிவுகள்

பிரித்தானியாவின் Little Aid CHARITY NR 1129695 நிறுவனத்தின்

கிளிநொச்சி, திருநகரில் இலவச கணனிப் பயிற்சி நிலையம்

இலவச கணனி, ஆங்கில வகுப்புக்கள்



Diploma in computer Application (DCP)
(IT, Ms Word, Ms Excel, Ms Power Point, Ms Access, HTML, Internet & email) - 5 months

Spoken English Classes
அனைவருக்கும் ஏற்றமுறையில் பேச்சு ஆங்கில கற்கை நெறி - 5 மாதங்கள்

அனைத்தும் முற்றிலும் இலவச கற்கை நெறிகள்

வயது வேறுபாடின்றி அனைவரும் விண்ணப்பிக்க முடியும்
பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த பிரித்தானியா சான்றிதழ்கள்
உங்கள் சுயவிபரக் கோவை அனுப்ப வேண்டிய முகவரி (முடிவுத் திகதி - ஆகஸ்ட் 2)

ஆரம்பம் : 04.08.2013 ஞாயிறு காலை 10.00
இடம்: கனகராசா வீதி, திருநகர், கிளிநொச்சி

"லிட்டில் எய்ட்", 323 பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விபரங்களுக்கு : 0774700468

சாவகச்சேரியிலும் கலட்டிச் சந்தியிலும்

நியூ எய்சர் சப்ளையர்ஸ் இன்
ஆடி மாத விலைக்கழிவு

* பல வர்ணங்களில் இறக்குமதி செய்யப்பட்ட டைல் வகைகள் 8X8 டைல், 12X8 டைல், 01X01 டைல், 16X16 டைல், 02X02 டைல்
* கொமேட் வகைகள்
* தண்ணீர் தாங்கிகள் 2000L, 1000L, 750L, 500L, 250L
* PVC பைப்புகளும் அதன் பொருத்துகளும், எலக்ரிக்கல் பொருட்கள்
* Fan வகைகள் 2800/- தொடக்கம்

அனைத்தும் குறைந்த விலைகளில் பெற்றுக்கொள்ள...



சாவகச்சேரியில்...

இல.325. கண்டி வீதி.
A9, சங்கத்தானை. 021 7201802. சாவகச்சேரி
(வைத்தியசாலைக்கும் இந்துக் கல்லூரிக்கும் இடையில்)



கலட்டிச் சந்தியில்...

இல.10, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்
(யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கும் தொழில் நுட்பக் கல்லூரிக்கும் இடையில்)

* Transport Free
* டைல் பதிப்பவர்கள், குழாய் பொருத்துநர்கள், எலக்ரிக் வேலை செய்பவர்கள் எம்மிடம் உண்டு.
* இவ்வேலை தெரிந்தவர்களும் எம்மிடம் தொடர்பு கொண்டால் உங்கள் பிரதேச வேலைகளை உங்களிடம் கையளிப்போம்.



(C-4021)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org